www.tamilarangam.net

SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

இதழ் 59 நவ.08 - நவ.24 1994 விலை7/=



## ஜனாதிபதித் தேர்தல் '94
## வெற்றி : சந்திரிகாவுக்கா? சிறிமாவுக்கா? மக்களுக்கா?



இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. வடக்கில் இராணுவ முகாம்களுக்குள் வாக்குச் சாவடிகளை வைத்து பாராளுமன்ற தேர்தல் நடாத்தப்பட்ட அதேமுறையில் நடாத்தப்படும் புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கான இந்தத் தேர்தலில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் சந்திரிகாவின் புதிய அரசாங்கத்தை ஆதரிப்பதாக அறிவித்துள்ளன. தேர்தலுக்கு ஒருவாரம் இருக்கும் போதே அரசாங்கத்தில் இணைந்து கொண்ட இ.தொ.கா. தலைவர் தொண்டமான், சேர்ந்த கையோடு 'தனிப்பட்ட விடயம்' ஒன்றின் காரணமாக இந்தியா பயணமாகி அங்கிருந்தபடி மலையக மக்கள் சந்திரிகாவை ஆதரிக்க வேண்டுமென அறிவித்துள்ளார் கிட்டத்தட்ட 110 லட்சம் மக்கள் வாக்களிக்கவுள்ள இந்த தேர்தலில் 50%த்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளரே புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார் என்று தேர்தல் சட்டம் தெரிவிக்கின்றது.

### ஜனாதிபதி முறை ஒழிப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட பொ.ஐ.முவும் , ஜனாதிபதி அதிகாரத்தில் குறைப்பை கொண்டு வர தயாராவுள்ளதாக அறிவித்துள்ள ஐ.தே.கவுமே இத்தேர்தலில் பிரதான போட்டியாளர்களாகவும் உள்ளனர். தெரிவு செய்யப்பட உள்ளவர் யாராக இருப்பினும் இந்த ஜனாதிபதிப் பதவி நீண்ட நாளைக்கு இதே அதிகாரங்களுடன் இருக்கப் போவதில்லை என்பது வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 1995 யூலை மாதத்துக்குள் ஜனாதிபதி முறையை ஒழித்துவிடுவதென சந்திரிகா பண்டாரநாயக்கா ஏற்கனவே அறிவித்துள்ளார். அதற்குரிய அரசியலமைப்பு சட்ட திருத்தங்களும் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.தே.கவின் இழுபறி

நாடு முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்ட இரு கட்சிகளும் தேர்தல் பிரச்சாரத்தின் இறுதிக்கட்டத்தில் முக்கியமாக வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பான விடயம் பற்றியே பேசின. காமினியின் கொலைக்குப்பின் ஜனாதிபதி வேட்பாளராக யாரை நிறுத்தவது என்ற இழுபறி ஐ.தே.கட்சிக்குள் பலமாக இருந்தது. இறுதியில் எதிர்கட்சி தலைவர் பதவியுடன் திருப்திப்பட்டுக் கொண்ட ரணில், கட்சிக்குள் பிளவு ஏற்படாது தடுக்கவும், காமினியின் கொலையால் ஏற்பட்டுள்ள அனுதாப வாக்குகளை


அவர் மனைவி சிறிமாவினால் தன்னை விட அதிகமாக திரட்ட முடியும் என்பதாலும் சிறிமாவை போட்டிக்கு நிறுத்த ஒத்துப் போனார். சிறிமா, காமினியின் மரணச்சடங்கை அடுத்து தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொள்ளா விட்டாலும், ரூபவாஹினியில் தோன்றி உரையாற்றியிருந்தார்; பத்திரிகைகளுக்கு பேட்டிகளும் அளித்திருந்தார்.

வடக்கு கிழக்கில் உள்ள பயங்கரவாதிகளுடன் பேச புதிய அரசு போவதையும், புலிகளுடனான பேச்சின் போது, அவர்களது படைகளின் பாதுகாப்பில் அரச சார்பு பிரதிநிதிகள் வாகனங்களில் சென்றதையும் கண்டித்த அவர் ஆயுதங்களைக் கீழே போடாமல் புலிகளுடன் பேசத் தாம் தயாரில்லை என்று தெரிவித்திருந்தார்.

-->3

## இ.தொ.காவின் ஆறு அம்சக் கோரிக்கை:
# தொண்டாவின் அண்டப் புளுகு!

(எமது சிறப்பு அரசியல் நிருபர்)



**இறுதிநேரம் வரை பொறுத்திருந்த தொண்டமான் பொ.ஐ.முன்னணிக்கே தனது ஆதரவு என்றும் மலையக மக்கள் சந்திரிகாவுக்கே வாக்களிக்க வேண்டும் என்றும் இந்தியாவிலிருந்து அறிவித்துள்ளார். அமைச்சர் பதவியை பொ.ஐ.மு. அரசாங்கத்தில் ஏற்றுக் கொண்டவுடன் இந்தியா பயணமான இவரது இந்த அறிவிப்பை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு மலையகத்தில் உள்ள இ.தொ.காவின் அனைத்துத் தோட்ட கமிட்டிகளும் சந்திரிகாவை ஆதரிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. தொண்டமானின் இவ் அறிவிப்பு அரச பத்திரிகைகளிலும், வீரகேசரியிலும், ரூபவாஹினி மற்றும் வானொலியிலும் பரவலாகப் பிரச்சாரப்படுத்தப்பட்டது. தொண்டமானின் இந்த முடிவுக்கு, அவரது ஆறு அம்சக் கோரிக்கைகளை பொ.ஐ.மு. ஏற்றுக் கொண்டதே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் இந்த ஆறு அம்சக் கோரிக்கைகள் பொ.ஐ.முவினால் எப்போதோ ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. எனவே இந்த இணைவுக்கு ஆறு அம்சக் கோரிக்கைகளை காரணமாகக் கூறுவது தொண்டமான் கடைசியாகத் தெரிவித்திருக்கும் அண்டப்புழுகு என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.**

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, தொண்டமான் சந்திரிகாவின் அரசில் அமைச்சர் பதவி ஏற்ற கையோடு சென்னை பயணமானார். சந்திரிகாவை ஜனாதிபதித் தேர்தலில் இ.தொ.கா.ஆதரிக்கும் என அவரிடம் இருந்து பொ.ஐ.மு. தரப்பில் எதிர்பார்க்கப்பட்ட அறிக்கையை அவர் உடன் வெளிவிடவில்லை. சென்னை செல்வதற்கு சற்று முன்பதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்கு கருத்து தெரிவிக்கையில் மனசாட்சியின் படி வாக்களிப்பது என்ற தன்நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என கூறினார். சென்னையில் அவர் ஒரு திருமண வீட்டிற்குச் செல்ல வேண்டி இருப்பதாகவும் அத்துடன் அண்மையில் சத்திரிசிகிச்சைக்குள்ளான தன் மகன் இராமநாதனை சந்திக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் 8ம் திகதி அளவில்தான் அவர் நாடு திரும்புவார் எனவும் இ.தொ.கா. தரப்பில் பொ.ஐ.முவுக்கு கூறப்பட்டது. ஆனால் 9ம் திகதி தேர்தல். தொண்டமானின் இந்நாடகம் பொ.ஐ.முவின் பலருக்கு எரிச்சலை மூட்டிற்று. உடனடியாகத் தொண்டா சந்திரிகாவை ஆதரித்து அறிக்கை விடவேண்டும் அல்லது தேர்தல் முடிந்ததும் அவரது அமைச்சர் பதவி பறிக்கப்படவேண்டுமென பொ.ஐ.முவினுள் பெரும் கூச்சல் கிளம்பிற்று. தொண்டாவின் சார்பில் பொ.ஐ.முவிடம் அடிக்கடி தூது போய்க் கொண்டிருந்தவரான கந்தசாமி நாயுடுவிடம் உடனடியாகத் தொண்டாவிடம் இருந்து சந்திரிகாவை ஆதரித்து அறிக்கை பெற்றுத் தரும்படி பொ.ஐ.மு. தரப்பில் கூறப்பட்டது. சில பக்ஸ் பரிமாற்றங்களின் பின்னர் தேர்தல் பிரச்சாரத்தின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு தொண்டா - சந்திரிகாவை ஆதரிக்கும் அறிக்கை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் படிக்கப்பட்டது. இவ்வறிக்கையில் தொண்டா ஒரு சுவாரசியமான விடயத்தைக் கூறுகிறார். அதாவது இ.தொ.கா. முன்வைத்த மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பான ஆறு அம்சக் கோரிக்கையை சந்திரிகா ஏற்றுக் கொண்டதாலும் அவரை நாம் (இ.தொ.கா.) ஆதரிக்கிறோம் என்பதே அது.

இது அப்பட்டமான பொய். இப்படியொரு மோசமான புரட்டை நாகூசாமல் கூறுவதற்கு தொண்டாவிற்கு நிகர் தொண்டாவே தான். தொண்டமானின் கட்சி மாற்றத்திற்கும் அக்கட்சித் தாவலின் போது அவரின் நடவடிக்கைகளில் காணப்பட்ட சில இழுத்தடிப்புகளுக்கும் முக்கிய காரணங்கள் - ஒன்று பதவி வெறி. இரண்டு ஊழல்களை மூடி மறைக்க வேண்டிய அவசரம். சந்திரிகா ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்திற்குள்ளே தொண்டமான் பொ.ஐ.முவிடம் இணைவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு மட்டத்தில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், அனுருத்த ரத்வத்த

-->2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நல்ல ஜனநாயக வியாபாரி!

தொண்டமான் பொ.ஐ.மு அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டுவிட்டார். எனவே சந்திரிகாவின் வெற்றி மேலும் உறுதியாகிவிட்டது' என்று அறிவித்திருக்கிறார் அமைச்சர் அஷ்ரப் அவர்கள். மு.கா.தலைவர் அமைச்சர் ஆகிய பின்பு இருந்த கொஞ்சநஞ்ச புத்தியும் அவருக்கு பேதலித்துவிட்டதோ என்று சந்தேகம் எழுப்பினார் நண்பர் ஒருவர்- வீரகேசரியில் வெளிவந்த மேற்படி செய்தியைப் பார்த்தபடி.

'ஏன்' என்று கேட்டேன் நான்.

'இல்லை, தொண்டமான் சேர்ந்தவுடன் சந்திரிகா வெல்வதென்றால், சந்திரிகா ஒரேயொரு வாக்கால் தோற்றுப்போகும் வாய்ப்பும் இருக்கின்றதென்றல்லவா அர்த்தப்படும்' என்றார் அவர்.

'இல்லையே, தொண்டமானுக்கு 4 லட்சம் வாக்குகள் இருக்கின்றனவே' என்றேன் நான்.

'அதெப்படி ஒருவருக்கு 4 லட்சம் வாக்குகள் இருக்கமுடியும்?' நண்பரின் கிண்டலை ரசித்தபடியே நான் கேட்டேன்: 'ஏன் தொண்டமானின் மலையக வாக்குகள் 4லட்சமும் சந்திரிகாவுக்கு திரும்பாதா?'

'தெரியவில்லை, புதிதாக எம்பியாகியிருக்கும் யோகராஜன், மற்றும் இ.தொ.கா.வின் எதிர்கட்சி எம்பிக்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருடைய வாக்குகள் உட்பட, தொண்டமான் தனது என்று உரிமை கோரும் நாலுலட்சம் வாக்குகள் அனைத்தும் கடந்த கால எல்லாத் தேர்தல்களிலும் யானைக்கே விழுந்தன. திடீரென தொண்டமான் மாறியதும், அவர்கள் கதிரைக்குப் போடமுடியுமா அல்லது பழக்கதோசத்தால் யானைக்கே போட்டுவிடுவார்களா என்று தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் தெரிகிறது. தொண்டமான் போற பக்கமெல்லாம் போகிறதிற்கு தயாராக நாலுலட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றால் அதுக்குப் பேர் ஜனநாயகம் என்றால், அதைத்தான் சந்திரிகா உருவாக்க விரும்புகிறார் என்றால்.... எங்கட நாட்டின் ஜனநாயக எதிர்காலத்தை நினைக்கவே பயமாக இருக்கிறது....

உணர்ச்சி வசப்பட்டு பேசினார் அவர்.

'ஏன் எப்பிடியாவது சந்திரிகா வென்றால் நல்லதுதானே..... இழுத்தேன் நான்.

'எப்பிடியாவது' வென்றால் சரியென்றால்.... இந்த உலகத்தில் எல்லோருமே சரிதான்..... சந்திரிகா மட்டுமென்ன, காமினி, பிரேமதாசா, ஜே.ஆர்..... ஏன் பிரபாகரன் கூட செய்வது சரிதான்.... தமிழீழம் கிடைக்குமென்றால் ஒரு சில ஆயிரம் பேரை கொன்று ஜனநாயக உரிமைகளை நசுக்கினால் கூட பரவாயில்லை தானே... எப்பிடியாவது தமிழீழம் கிடைக்கும் தானே.....

'நிலைமை அப்படி இல்லையே..... சந்திரிகா தோற்றால் திரும்பவும் ஐ.தே.கவிடமல்லவா அதிகாரம் போய்விடப் போகிறது?

'போகிற போக்கைப் பார்த்தால் சந்திரிகா வந்தாலும் அதே ஐ.தே.க ஆட்சிதான் நடக்கும் போலயல்லோ தெரியுது'.

நான் மௌனமானேன்.

அவர் சொன்னார்; 'அதுசரி, உண்மையிலேயே தொண்டமானுக்கு 4 லட்சம் வாக்குகள் கிடைக்குமா? அவர்களின் கட்சி தனியாக கேட்டாலல்லவா இது உண்மையா என்று தெரியும்.....

'தொண்டமான் நல்ல வியாபாரிதான். வாக்குகளைக் கூட விலைபேசத் தெரிந்தவர் அவர். நாலு லட்சம் வாக்குகளை நான் தருவேன் என்று பகிரங்கமாக கூறும் ஒரே 'ஜனநாயக வியாபாரி' அவரைவிட்டால் இந்த உலகத்தில் வேறு யாருமே இல்லை!

எனக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. வாசகர்கள் என்ன சொல்கிறீர்கள்?

**அ. அ.**

# தொண்டாவின் அண்டப்..

ஆகியோருடனும் இன்னொரு மட்டத்தில் சந்திரிகாவிற்கு நெருக்கமான தனிநபர்களான திரு.நவின் குணரட்ன (யாழ். சமாதானத் தூதுக் குழு நால்வரில் ஒருவர்) தலவாக்கொலையைச் சேர்ந்த சரத் ஹேமசந்திர ஆகியோருடனும் நடைபெற்றது. இவ்விரு மட்டப் பேச்சுவார்த்தைகளிலும் கருப்பொருள் தொண்டமானுக்கு சக்திமிக்க அமைச்சு ஒன்று கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியதாக இருந்ததேயொழிய மலையக மக்களின் பிரச்சினைகளைப் பற்றியோ அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதன் அடிப்படையிலோ இ.தொ.கா. ஆதரவு வழங்குவது பற்றியோ இருக்கவில்லை.

இரண்டாவதாக, தொண்டமானின் பேரன் ஆறுமுகமும், பேர்த்தியும் தமிழகத்தில் எயர் லங்கா நிறுவனத்தின் முகவர்களாக(General sales Agent) இருந்து வருகின்றனர். இவர்களுடைய நிறுவனம் ட்ரான்ஸ் லங்கா எயா ரவல்ஸ் பிரைவெட் லிமிடெட் (Trans Lanka Air Travels) இதன் இயக்குனர் ஆறுமுகம் தொண்டமான். இந்நிறுவனம் ஜனவரி 1990ல் எயர் லங்காவின் சென்னை திருச்சி முகவராக நியமிக்கப்பட்டது. இவ்வாறான ஒரு முகவரின் நியமனம் அந்நிறுவனத்தின் கடந்த கால செயற்பாடுகளை (ரிக்கெற்றிங் போன்றவை) கவனமாக ஆராய்ந்தே வழங்கப்பட வேண்டும். ஆனால் . ட்ரான்ஸ் லங்கா விடயத்தில் இந்த நடைமுறை பின்பற்றப்படாமல் அரசியல் செல்வாக்கின் ஊடாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஏனெனில் ஜனவரி 1990 வரை எயர் லங்கா திருச்சியிலும் சென்னையில் இருந்த தன்னுடைய சொந்தக் காரியாலயங்களின் ஊடாகவே முன்கூட்டியே பதிவு செய்தல், ரிக்கற் விற்பனை ஆகியவற்றை மேற்கொண்டு வந்தது. இந்தக் காரியாலயங்களை மூடி ஒரு தனியார் நிறுவனத்திற்கு அவற்றை வழங்குவதற்கு எந்தவிதமான காரணமும் இருக்கவில்லை. தோட்டத்துறையை தனியார் மயமாக்குவதற்கு ஐ.தே.க. அரசு தனக்கு அந்த நேரத்தில் இருந்த நெருக்கடியைச் சமாளித்து தொண்டமானின் ஆதரவைப் பெறுவதற்காக இந்த முறைகேடு ஐ.தே.கவினால் அனுமதிக்கப்பட்டிருக்கலாம் என்று பொ.ஐ.மு. தரப்பில் கூறப்படுகிறது. ஓகஸ்ட் 31, 1994 வரை ட்ரான்ஸ் லங்கா, எயர்லங்காவிற்கு கொடுக்கவேண்டிய நிலுவை 2.74 கோடி இந்திய ரூபாய்களாகும். புதிய அரசு பதவிக்கு வந்ததும் எடுத்துக் கொண்ட முதலாவது ஐ.தே.க. அரசு சம்பந்தப்பட்ட ஊழல் விசாரணை எயர் லங்காவைப் பற்றியதாகும். இதில் ஆறுமுகம் தொண்டமானின் ட்ரான்ஸ் லங்கா நிலுவையைப் பற்றியும் பொ.ஐ.முவுக்கு தெரிய வந்தது.

இதன் பின்பு எயர் லங்கா நிறுவனம் கொடுத்த நெருக்கடி காரணமாக 1.1கோடி இந்திய ரூபாய்கள் செம்டம்பர் 20ம் திகதி கொடுக்கப்பட்டது. இதன் பின்பே தொண்டா பொ.ஐ.முவில் இணைவதற்கான பேச்சுக்கள் மும்மரமாகின என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். ஆனால் செப்டெம்பர் 30 அளவில் நிலுவைத் தொகை மீண்டும் 2.73 கோடி இந்திய ரூபாயாய் எட்டிவிட்டது. இந்நிலுவையை அறவிட முடியாதுள்ளதன் காரணமாக எயர் லங்கா மேலும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலுவையை இவ்வளவு காலமும் அறவிட முடியாமல் இருந்ததற்கு முக்கிய காரணம் தொண்டா ஐ.தே.க. அமைச்சராக இருந்ததே.

புதிய அரசின் கீழ் இத்தொகையை அறவிடப்படுவதை தடுப்பதற்காகவே தொண்டா பொ.ஐ.முவில் இணைந்து விடவேண்டும் என்று தீவிரமாக முனைந்தார். ட்ரான்ஸ் லங்கா நிறுவனத்திற்கு உலகில் வேறு எந்த முகவர்களுக்கும் கொடுக்கப்படாத சலுகைகள் எயர் லங்காவினால் ஐ.தே.க. அரசின் கீழ் வழங்கப்பட்டிருந்தன. அவை யாவன.

1. இந்நிறுவன ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகள் அனைத்தும் எயர் லங்காவே வழங்க வேண்டுமென ஒழுங்கு செய்யப்பட்டது.

2. செப்டெம்பர் 94 வரை சென்னை எயர் லங்கா காரியாலயமும் ட்ரான்ஸ் லங்கா இலக்கம் 758 அண்ணசாலையிலுள்ள மவுன்ட் சேம்பர்ஸ் என்ற கட்டிடத்தில் இயங்கி வந்தன. ஆனால் செப்டெம்பர் 1ம் திகதியிலிருந்து இக்காரியாலயங்களை சென்னையிலுள்ள இல.76, கதீட்ரல் றோட்டுக்கு மாற்றுவது என்று ட்ரான்ஸ் லங்கா முடிவு செய்தது. இந்தப் புதுக் காரியாலயத்திற்கு மாத வாடகை 2 லட்சம் இந்திய ரூபாய். இந்த விடயத்தை செய்யும்படி எயர் லங்காவிற்கு நெருக்கடி கொடுக்கப்பட்டதாகவும் இதனால் ஏற்பட்ட மேலதிக வாடகைத் தொகையையும் எயர் லங்காவே பொறுக்க வேண்டும் எனவும் நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அண்ணாசாலை காரியாலயத்திற்கு கொடுக்கப்பட்ட வாடகை 79,000 இந்திய ரூபாய்களே. அத்துடன் ட்ரான்ஸ் லங்கா காரியாலயத்தின் உள்ளலங்காரச் செலவுகள் எயர் லங்கா நிதியிலிருந்து எடுக்கப்பட்டன என சென்னை எயர் லங்கா முகாமையாளருக்கு செப்.16ம் திகதி ஆறுமுகம் தொண்டமானின் நிறுவனம் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது தனது அனைத்து தொலைபேசி, கணணி, ரிக்கற் பிரின்டர் பராமரிப்பு மற்றும் வழக்கமாக முகவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய இன்னோரன்ன செலவுகளையும் எயர் லங்காவே பொறுப்பேற்க வேண்டும் என்று ஆறுமுகம் தொண்டமானின் நிறுவனம் செப்.15ம் திகதியிடப்பட்ட கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

எப்படியாவது தன்னுடைய பாட்டனார் அரசில் முக்கிய அமைச்சர் பதவியைப் பெற்றுவிடுவார் பெற்றுவிட்டால் இந்த மோசடிகளை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கலாம் என்ற நம்பிக்கையில் தான் ஆறுமுகம் தொண்டமான் இந்தத் திருவிளையாடலில் துணிகரமாக ஈடுபட்டு வருகிறார் போலும். இதனாலேயே மலையக மக்களின் ஆறு கோரிக்கைகளை பொ.ஐ.மு. ஏற்றுக்கொண்டதாலேயே நாம் பொ.ஐ.முவுடன் இணைந்தோம் என்ற தொண்டாவின் கூற்று ஒரு அப்பட்டமான பொய் என்று கூறுகிறோம். மலையக மக்கள் அவருக்குச் சுண்டக்காய். பணம் அவருக்குக் கடவுள்.

இந்த ஊழலை புதிய அரசு விசாரிக்க வேண்டி வரும் என்ற செய்திகள் ஏற்கனவே தொண்டாவின் காதுக்கு எட்டியிருந்தது. இச்செய்தியைத் தொண்டாவின் காதுக்கு எட்டச் செய்வதில் பொ.ஐ.முவும் அக்கறையாக இருந்தது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த பொ.ஐ.மு. பிரமுகர் ஒருவர் எம்மிடம் கூறினார், ''தொண்டாவின் ஊழல்களை எவ்வாறு ஐ.தே.க. கையாண்டு இ.தொ.காவைத் தம்முடன் வைத்திருப்பதற்கு பயன்படுத்தியது என்பதை நாம் அறிவோம். நாம் இந்த ஊழல்களை கிளறாமல் இருக்க வேண்டுமானால் எம்மிடம் சரணடைவதைத் தவிர இவருக்கு வேறு வழியில்லை என்பதையும் நாம் அறிவோம்''

இத்துடன் ஐ.தே.க. காலத்தில் நடைபெற்ற தொண்டா சம்பந்தப்பட்டதாக கூறப்படும் மிகப் பாரிய ஊழலில் ஒன்றையும் பொ.ஐ.மு. அரசு ஜனாதிபதித் தேர்தலின் பின் விசாரித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழலும் இருக்கிறது. இச்சூழலில் எப்படியாவது பொ.ஐ.மு. அமைச்சரவையில் இணைந்து விட வேண்டும் என்பதில் தொண்டா தீவிரமாக இருந்ததில் வியப்பில்லை.

மூன்றாவது, தனக்கொரு வர்த்தகப் பிரமுகர் 5 கோடி லஞ்சமாகத் தர முற்பட்டதாகவும் தான் அதனை மறுத்து விட்டதாகவும் விரைவில் அதுபற்றிய தகவல்களை அம்பலப் படுத்துவேன் என்றும் சந்திரிகா கூறியது பத்திரிகைச் செய்தியாக வந்தது யாவரும் அறிந்ததே. இதன் பின்னணி பற்றிச் சந்திரிகாவுக்கு நெருக்கமான ஒரு சிங்கள இடதுசாரி பிரமுகரிடம் கேட்ட போது பின்வரும் விடயம் தெரிய வந்தது. அண்மையில் 600மி. டொலர் பெறுமதியான நிர்மாண வேலை ஒன்றுக்கான ஒப்பந்தக் கேள்வி ஒன்றை அரசு பல பல்தேசிய நிறுவனங்களிடம் கோரியிருந்தது. இதற்கு ஒப்பந்த கேள்விப் பத்திரம் சமர்ப்பித்த பல நிறுவனங்களுள் 3 நிறுவனங்கள் தகுதியுடையன என்று திறைசேரியால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இவற்றில் எந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்குவது என்ற இறுதித் தீர்மானம் அமைச்சரவை மட்டத்தில் பிரதமரினால் எடுக்கப்பட வேண்டியதாகும். இம் மூன்று நிறுவனங்களில் ஒன்று பண்டார நாயக்கா குடும்பத்துக்கு நெருக்கமான ஒருவரை முகவராகக் கொண்ட நிறுவனம் ஆகும். மற்றைய நிறுவனத்தின் தலைவர் ஒரு இ.தொ.கா. முக்கியஸ்தர். உண்மையில் இவர் தொண்டாவில் பினாமி என்றே கருதப்படுகின்றார். ஒப்பந்தம் பற்றிய இறுதி முடிவு சென்ற மாதம் 12ம் திகதி புதன் கிழமை நடைபெற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமரால் எடுக்கப்பட்டிருக்க வேண்டி இருந்தது. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் எத்தகைய முன்னறிவிப்பும் இன்றி பிரதமர் சிங்கப்பூர் பயணமானது காரணமாக எம்முடிவும் எடுக்கப்படவில்லை. (இத்தகவலை எம்மிடம் தெரிவித்த மேற்படி பொ.ஐ.மு. பிரமுகர்) தொண்டாவை அரசில் இணைப்பதற்கான இரு மட்டப் பேச்சுகளிலும் தொண்டாவின் தரப்பில் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக் கேள்வி தொடர்பான விடயம் பேசப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் தொண்டாவின் பினாமிப் பெயரில் இயங்கும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டால் தொண்டாவின் ஆதரவு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு உறுதியாக வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், இந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கொடுக்கப்படுமானால் பொ.ஐ.முவுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் கமிஷனாகத் தரலாம் எனவும் தொண்டாவின் தூதுவர் கூறினார் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் இந்த ஒப்பந்தக் கேள்வி இன்னமும் யாருக்கும் வழங்கப்படவில்லையென்று தெரியவருகிறது. ஐ.தே.கவைப் போலவே தொண்டாவின் பாரிய மோசடிகளுக்கும் ஊழல்களுக்கும் துணைபோவதன் மூலம் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளைத் தம்வசம் வைத்துக் கொள்ள பொ.ஐ.முவும் முயற்சிப்பது போலத் தெரிய வருகிறது. இடையில் சிக்குண்டு அல்லற்படுவது, பாவம், மலையகத் தமிழ் மக்களே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சரிநிகா
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
.கொழும்பு -05
தொலைபேசி: 593615

பிரதம ஆசிரியர் சேரன்

# வாழ்க எங்கள் ஜனநாயகம்!

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல தயாரிப்பு வேலைகளும் முடிந்து விட்டன; அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தமது பிரச்சாரங்களை முடித்துக் கொண்டு விட்டனர்; தேர்தலில் வாக்களிக்கப் போகும் மக்களின் தீர்ப்பு என்ன என்பது எதிர்வரும் 10ம் திகதி அனேகமாக வெளிவந்துவிடும். புதிய ஜனாதிபதி யார் என்பது அன்று அறிவிக்கப்பட்டுவிடும்.

இலங்கையின் 'ஜனநாயக மரபுகளு'க்கிணங்க ஜனநாயகரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை தேர்தல் ஆணையாளர் அறிவித்தபின்னர், அமைதியான முறையில் தேர்தலை நடாத்தி முடித்த ஆணையாளருக்கும் பாதுகாப்பு கடமைகளை சிறப்பாக செய்த படையினருக்கும் எல்லா கட்சிகளும் தமது நன்றிகளை தெரிவிக்கும். இத்துடன் இலங்கையின் ஜனநாயக மரபு மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுவிட்டதாக உலகம் ஏற்றுக் கொண்டுவிடும்.

இவ்வளவு அமைதியான முறையில் ஜனநாயகபூர்வ முறையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதையிட்டு இலங்கை மக்கள் அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

ஆனால்...
ஆம், இந்த 'ஆனாலு'க்குப் பின்னால் நிறையவே சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்து நிற்பதை இவ்விடத்தில் யாரும் மறுத்துவிட முடியாது.

நடக்கப் போகின்ற தேர்தலில் வெல்லப் போபவர் காமினியின் மனைவியான சிறிமாவா அல்லது சந்திரிகாவா என்பதை விடவும் முக்கியமான, இந்தநாட்டு மக்களது எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் இந்தத் தெரிவு எப்படி அமையப்போகிறது என்ற கேள்வியே இந்த 'ஆனாலு'க்குப் பின்னால் உள்ள பிரதான கேள்வியாகும்.

இத்தகைய ஒரு சந்தேகத்திற்கான நியாயங்கள் நிறையவே உள்ளன.

பாராளுமன்ற தேர்தலின் போது ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்ற முழக்கத்துடன் தேர்தலில் குதித்து அரசாங்கத்தை அமைத்தது பொ.ஐ.மு. ஜனாதிபதி முறைமையை மாற்றி அமைப்பது அல்லது அவரது அதிகாரங்களை குறைப்பது என்பதில் தாமும் உடன்படுவதாக அறிவித்திருந்தது ஐ.தே.க. இப்போதைய போட்டியின் பிரதான போட்டியாளர்களான இரு கட்சிகளுமே இந்த ஜனாதிபதிப் பதவியை இதுகாலவரையான ஜனாதிபதிப் பதவிகளாக எண்ணிப் பார்க்கவில்லை. எனவே தேர்தலின் முடிவு எப்படி இருந்த போதும், ஜனாதிபதிப் பதவியில் மாற்றம் கொண்டு வருவதற்காகவே மக்கள் வாக்களித்துள்ளதாக கருதப்பட வேண்டும்.

அரசாங்கத்தை அமைத்துள்ள பொ.ஐ.முன்னணி தனது அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக முன்வைத்த காரணங்களில் பிரதானமானவை இவை:

- ஊழல், நிர்வாக மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் என்பவற்றை ஒழித்துக்கட்டி கண்ணியமான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தல்.
- மனிதப் படுகொலைகள், அரசியல் பழிவாங்கல்கள் மனித உரிமை மீறல்கள் அற்ற ஒரு சுதந்திரமான ஜனநாயக சூழலை ஏற்படுத்தல்.
- வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணல். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை நிலை நாட்டுதல்.

இதேவேஎள எதிர்கட்சியில் இன்று இருக்கும் ஐ.தே,கவினர் தமக்குள் முரண்பட்ட கருத்துக்களை கொண்டுள்ள கோஷ்டிகளாக செயற்பட்ட போதும், ஜனாதிபதி தேர்தலில் நின்ற காமினி திசாநாயக்கவின் நோக்கங்களாக தெரியப்படுத்தப்பட்டவை இவை:

- சுதந்திரமான ஜனநாயகமும் அமைதியும் நீதியும் நிலவும் ஒரு நாடாக இலங்கையை மாற்றுதல்.
- இனங்களுக்கிடையே ஐக்கியமும் ஒருமைப்பாடும் சகிப்புத் தன்மையும் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுதல்.

தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துக் கொண்டிருக்கையில் காமினி திடீரென்று கொல்லப்பட்டுவிட்டதை தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியை, அவரது மனைவி தேர்தலில் குதிப்பதன் மூலம் ஈடுசெய்யப் போவதாக அறிவித்துள்ளார். வெறும் பிரசாரங்களையும் எழுத்துக்களையும் மட்டும் வைத்து நோக்கும் போது இருதரப்பினருமே ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிய போதும் நல்ல விடயங்களையே செய்யப்போகிறார்கள் என்றே தோன்றும்.

ஆனால், புதிய அரசாங்கம் தன்னுடைய கடந்த இரண்டரை மாத ஆட்சியில் அது குறிப்பிட்ட விடயங்களில் எவ்வளவு தூரம் அக்கறையாக இருக்கிறது என்ற சந்தேகத்தையே கொடுத்துள்ளது.

ஊழல் நிர்வாக மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன எவ்வளவு தூரத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட உள்ளன என்பது ஆரம்ப முதலே சந்தேகத்துக்குரிய ஒன்றாகி விட்டது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, சமாதான முயற்சிகள் போன்றவை, காமினியின் கொலையுடன் திடீரென காலவரையறையற்று ஒத்திப் போடப்பட்டுள்ளன. புலிகளுடன் பேசுவதும், சமாதான நிலைமையை கொணர்வதற்கான அரசியல் தீர்வும் ஒன்றாகப் போட்டு குழப்பப்படுகின்றன.

மறுபுறத்தில் ஐ.தே.கவினர் கூட 'சுதந்திரம் அமைதி, ஜனநாயகம் என்பனபற்றி பேசுகின்ற அதேவேளை தமது கடந்த 17 வருட கால காட்டாட்சி பற்றி மூச்சு விடுவதாக இல்லை. படுகொலைகள், புதைகுழிகள், ஊழல் மோசடிகள் பற்றிய சுயவிமர்சனத்திற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை அவர்களது பேச்சுக்கள் காட்டுகின்றன.

இன ஐக்கியம் தொடர்பான விடயத்தில், இலங்கை 'இந்திய உடன்படிக்கை அடிப்படையில் தீர்வு' என்று கூறும் அதே வேளை, இனவாத கருத்துக்களைக் கொட்டுவதிலும் அதன் மூலம் வாக்குகளை திரட்டுவதிலுமே கவனமாயுள்ளனர். 'ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே பேச்சு, நாட்டை பிளவுபடுத்த விடமாட்டோம், இந்த அரசு நாட்டை பிளவுபடுத்த விரும்புகிறது' போன்ற அதேபழைய ஐ.தே.கவின் பேச்சுக்கள் திரும்பவும் பேசப்படுவது இவர்களது கோட்பாடுகளையிட்டு இவர்களுக்கே அக்கறை இல்லை என்பதையே காட்டுகின்றன.

ஆக, இருதரப்பாருமே தமது சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இருக்க வேண்டுமென்பது பற்றி தீவிர அக்கறை கொண்டவர்களாக இல்லையென்றே சொல்ல வேண்டியுள்ளது.

அப்படியானால், எவர் வெற்றி பெற்றாலும் நிலைமை அப்படியே தான் இருக்கும் என்ற சந்தேகம் எழுவதில் தப்பென்ன இருக்கிறது?

17 வருடகாலம் ஆண்டவர்களை விட எதிர்க்கட்சியிலிருந்தவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்று அபிப்பிராயம் நிலவுவதாக அபிப்பிராய வாக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. ஒருவகையில் உண்மையும் அதுதான்.

இறுதியாக அரசாங்கத்தில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அமைச்சர் தொண்டமானின் இணைவுடன் இச்சந்தேகம் மேலும் வலுத்துள்ளது. பத்திரிகை சுதந்திரம் பற்றிய பொ.ஐ.முவின் நிலைப்பாடு தொடர்பு சாதனங்களை அதிகார மூலம் கட்டுப்படுத்துவதில் தவறில்லை என்ற அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளதோ என்ற சந்தேகத்தை கடந்த சில நாட்களாக ரூபாவாஹினி, வானொலி, லேக்ஹவுஸ் பத்திரிகைகள் பயன்படுத்தப்படும் விதம் ஏற்படுத்தியுள்ளது.

வெற்றி பெறுபவர்கள் யாராக இருந்தாலும் ஒரே நிலைமை தான் நீடிக்கப் போகிறது என்றால், புதியவர்களுக்கு கொஞ்சம் வாய்ப்புக் கொடுத்தால் என்ன, என்ற வாதம் தர்க்கபூர்வமானதே. ஆனால், இத்தகைய தர்க்கம் தான் சுதந்திரமடைந்த பின் வந்த அனைத்து தேர்தல்களிலும் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது.

திரும்ப திரும்ப அதே நிலை.
மக்கள் சளைக்காமல் இருக்கும் வரை அரசியல்வாதிகளுக்கு 'குருசந்திர' யோகம் தாம்.
வாழ்க 'இலங்கை ஜனநாயகம்!'

# உங்கள் வாக்கு யாருக்கு?

'யாருக்கு வோட் போடப் போனாய்?'
'ஜனநாயக முறைப்படி உப்பிடி கேட்பது பிழை... இது இரகசிய வாக்கெடுப்பு எல்லோ'
'சரிதான் போ.... நான் அதுக்கு கேட்கேயில்லை..... எனக்கு ஒரு தீர்மானமும் எடுக்கேலாமல் இருக்கு அதுதான் கேட்டனான்....'
'ஏன்?'
'இல்லை..... போட்டி நடப்பது, காமினி செத்தபிறகு சிறிமாவுக்கும் சந்திரிகாவுக்கும் எண்டதாலை முடிவு செய்யமுடியேல்லை....'
'இரண்டு பேரும், கணவன்மாரை பயங்கரவாதத்தால் இழந்தவர்கள். இருண்டு பேரும் இப்போது அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்குப் புதிதாக வந்தவர்கள். இரண்டு பேருமே பெண்கள். இரண்டு பேருமே ஜனநாயகம், மனிதஉரிமை, இனப்பிரச்சினைத் தீர்வு என்று எல்லாம் சொல்கிறார்கள்.... முதல் என்றால் காமினி இருந்தார். அவரது கை கறைப்பட்ட கை என்ற அபிப்பிராயம் இருந்தது. இப்ப இருவரது கைகளும் புதுக்கைகள்.... என்ன செய்வதென்று புரியவில்லை'.
'யாருடைய கொள்கை சரியென்று பார்'
'J.V.P கலபதி சொன்னமாதிரி சொல்கிறாய்..... இரண்டு பேருடைய கொள்கைகளிலும் வித்தியாசத்தை எனக்கு காணமுடியவில்லை'.
'ம்.... மலையக மக்கள் கொடுத்து வைத்தவர்கள். அவர்களுக்கு பிரச்சினை இல்லை.....'
'ஏன்.....'
'இல்லை.... அவர்கள் என் செய்யவேண்டுமென்பதை தொண்டமானே முடிவு செய்துவிடுகிறார்..... அவர்களுக்கு சிக்கலே இல்லை'.
0
உரையாடல் நடந்தது சிங்களத்தில் எனது மொழியில் இதை மொழிபெயர்த்திருக்கிறேன். கொழும்பின் சாப்பாட்டுக்கடையொன்றில் எனக்கு முன்னாலிருந்து பேசிக்கொண்டிருந்த இருவரது உரையாடல் இது. உண்மையில், இந்த தேர்தல் ஒரு கேலிக்கூத்து என்று கொள்ள இது மிகவும் பயனுள்ள உரையாடலேதான்!
அதுவும் யாழ்ப்பாணத்திலும் தேர்தலை வைக்கப்போவதாக பாராளுமன்ற தேர்தல் அனுபவத்தின் பின்னும் முடிவு செய்துள்ளதைப் பார்க்கும் போது மிகத் தெளிவாகவே அது தெரிகிறது!

அ. அ.

# ஜனாதிபதித் தேர்தல் '94 ...

## முகமதின் குற்றச்சாட்டு

ஐ.தே.க. உறுப்பினர்கள் குறிப்பாக முன்னாள் சபாநாயகர் முகமத் அவர்கள் கொலையில் அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான ஒரு இரகசிய திட்டம் இருந்துள்ளதாகவும் இக்கொலை நடக்காவிட்டால் காமினி வெல்வது நிச்சியமான உறுதியாக இருந்ததென்றும் பிரச்சாரம் செய்தனர்.

இதேவேளை இக்குற்றச் சாட்டுக்களை மறுத்து தனக்கும் புலிகளுக்கும் இடையில் எத்தகைய தனிப்பட்ட ஒப்பந்தமும் இருக்கவில்லை என்று சந்திரிகா தெரிவித்திருந்தார். உண்மையில் இரகசிய தொடர்பும், புலிகளுக்கு காசு, ஆயுதம், வாகனம் போன்றவை வழங்கியதும் முன்னைய ஐ.தே.க அரசே என்று சந்திரிகா பதில் குற்றச்சாட்டுக்களை தெரிவித்திருந்தார்.

## தமிழ் கட்சிகளின் நிலை

இத்தேர்தலில் புதிய அரசியல் மாற்றத்திற்காக பிரதமரான சந்திரிகாவையே தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று அனைத்து தமிழ்க் கட்சிகளும் அறிவித்துள்ளன. இக்கட்சிகள் எவையும் வடக்கு கிழக்கில் இந்த தேர்தல் நடைபெறவுள்ளது பற்றி மூச்சுக் கூட விடவில்லை என்பது இவ்விடத்தில் கவனிக்கப்பட வேண்டியது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் மோசடியானது என்று தெரிவித்த இன்றைய அரசுதரப்பினும் சரி, இதை நிராகரிக்க வேண்டுமென்று கூறி வழக்கு தாக்கல் செய்த த.வி. கூவும் சரி இந்த விடயத்தில் எந்த வித அக்கறையும் காட்டியதாகத் தெரியவில்லை.

## தொண்டமான் இணைவு

இது இவ்வாறிருக்க மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதற்கான அனுமதியை புலிகளிடம் பெற்றுக் கொள்ள முடியாத நிலை, காமினி கொல்லப்பட்ட குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ளதால் தொண்டமானின் ஆதரவு யாருக்கு என்ற பிரச்சினை மிகவும் முக்கிய பிரச்சினையாக மாறியது. அவரின் இணைவு மூலம் கிடைக்க கூடிய 4 லட்சம் வாக்குகளை பெற்றுவிட இருதரப்பும் முயன்றன. ஆயினும் அமைச்சர் பதவியை வழங்க கூடிய நிலையில் இருந்தால் பொ.ஐ.முவுக்கு அவரை தம் பக்கம் திருப்புவது சாத்தியமாயிற்று. தொண்டமானது முடிவு முக்கியத்துவம் கொடுத்து அரச தொடர்பு சாதனங்களில் அறிவிக்கப்பட்டன.

'இப்போது தேர்தல் பிரச்சாரங்கள், அணிசேர்க்கைகள் எல்லாம் முடிந்து தேர்தல் நடக்கப் போகிறது. மக்களின் தீர்ப்பு நாளை மறு நாள் வெளிவந்துவிடும் எப்படியோ வெற்றி பெறப்போபவர்கள் யாராக இருப்பினும் மீண்டும் ஒரு முறை மக்களை ஏமாற்றி விட்டோம் என்ற மமதை அவர்களுக்கு ஏற்படாமல் சொன்னவற்றை செய்வார்கள் என்றால் சரிதான்' என்று கருத்து தெரிவித்தார், மனமுடைந்து போயிருக்கும் கொழும்பின் அரசியல் வாதி ஒருவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# முதற்கட்டப் பேச்சுக்களில் முஸ்லீம்களில்லையே!



ஆர்.எம்.இம்தியாஸ்

இலங்கையில் கூர்மையடைந்துள்ள தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காய் சந்திரிகா பண்டாரநாயக்காவின் புதிய அரசாங்கம் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் குறிப்பாக இலங்கை முஸ்லீம்கள் விசேடமாக வடகிழக்கு முஸ்லீம்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளனர். அவ்வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் முஸ்லீம்களது நலன்கள் பாதுகாக்கப்படுவதுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளிலும் முஸ்லீம்களது நியாயமான பங்குபற்றுதல் இன்றியமையாதது.

அண்மையில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் விடுதலை புலிகளுடன் முதல்கட்ட பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாய் முடித்துக் கொண்டுள்ளதாய் நம்பப்படும் குழுவில் ஒரு முஸ்லீம் பிரதிநிதியையேனும் சந்திரிகா அரசாங்கம் நியமிக்காதது துரதிர்ஷ்டமானதே. புதிய அரசாங்கத்தின் கண்கள் என்றும், இதயம் என்றும் தன்னைத் தானே வர்ணித்துக் கொள்ளும் முஸ்லீம் காங்கிரஸும் அதன் பரிசுத்த தலைவரும் இவ்விவகாரத்தில் எந்தவிதமான ஆர்வத்தையும் காட்டவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அரசாங்கம் அனுப்பி வெற்றிகரமாய்த் திரும்பியுள்ளதாய் நம்பப்படும் இக்குழுவில் சிங்களவர் உட்பட தமிழர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஆயின் முஸ்லீம்கள் சார்பாய் பிரதிநிதி ஒருவரையேனும் தெரிவு செய்யாததன் நோக்கம் தான் என்ன? ''இலங்கை முஸ்லீம்கள் இனி சில்லறை வியாபாரம் செய்யக்கூடாது, மொத்த வியாபாரமே செய்ய வேண்டும்'' என்று ஆலோசனை கூறும் ''பரிசுத்த தலைவர்'' ஆன அஷ்ரப் போல் நமது முஸ்லீம் சமூகத்தை சந்திரிகா வெறுமனே வர்த்தக மாயையுடன் நோக்கி விட்டாரோ என்னவோ?

விடுதலைப்புலிகளின் தடுப்புக்காவலில் 38க்கும் அதிகமான முஸ்லீம்கள் கைதிகளாக உள்ளனர். இவர்களது வாழ்வியல் நிலைப்பாடுகள் தொடர்பாக இதுவரை எந்த வித தகவலும் வெளிவரவில்லை என்பதே உண்மையாகும். புலிகளது தடுப்புக் காவலில் உள்ளவர்கள் தொடர்பாக புதிய அரசாங்கம் ஆயினும் சரி, பேரினவாதத்தை எதிர்ப்பதாகக் கருதிக் கொள்ளும் முஸ்லீம் காங்கிரஸ் ஆயினும் சரி, முஸ்லீம்களுக்கு பல அமைச்சர் பதவிகள் கொடுத்துள்ளோம் எனவே முஸ்லீம்கள் எப்போதும் எம்பக்கமே என்று புராணம் பாடிய முன்னாள் அரசாங்கமாயினும் சரி திட்டவட்டமான செயற்பாடுகளை முன்னெடுக்காதது மிகவும் பிழையான போக்காகும்.

புதிய அரசாங்கத்தின் சமாதானத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகளை வரவேற்ற விடுதலைப் புலிகள் தமது தரப்பிலிருந்த சிங்கள இராணுவத்தினரை விடுதலை செய்தது. ஆயினும், தமது சகோதர சமூக முஸ்லீம்களை விடுதலை செய்யாதது புலிகளது பழைய அணுகுமுறையையே வெளிப்படுத்துவது போல் தெரிகிறது. இவ்விவகாரத்தில் விடுதலைப்புலிகள் சாதகமான நிலைப்பாட்டை எடுப்பார்களாயின் அது முஸ்லீம் சமூகம் புலிகள் தொடர்பான நல்லபிப்பிராயத்தை உருவாக்க உதவும் என நம்பலாம்.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகிய பிறகு வடபகுதி முஸ்லீம்கள் 24 மணித்தியாலத்திற்குள் பாதுகாப்புக் காரணங்களுக்காக புலிகளால் விரட்டப்பட்டனர். தமது நிலங்களையும் ஏனைய சொத்துக்களையும் விட்டு வெறுங்கையோடு ஓடி வந்தனர் என்பது இரகசியமானது அல்ல. இவ்வாறு விரட்டப்பட்டு அகதிகளாக்கப்பட்டவர்கள் தமது தாயகத்துக்கு சென்று குடியேறுவதில் நிறைய ஆர்வத்தை வெளிக்காட்டியுள்ளனர். அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள முதற்கட்ட பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் இடம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகளை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக விதந்துரைத்துள்ளனர். எனினும் தம்மால் விரட்டப்பட்ட சகோதர முஸ்லீம்கள் தொடர்பாக இப்பிரதிநிதிகள் அக்கறையான ஆர்வத்தை வெளிப்படுத்துவது முக்கியமான தேவையாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தேவை மற்றும் அவசியப்பாடு அதிகரித்துள்ளது. புதிய அரசாங்கம் நம்பிக்கையான சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது பாராட்டத்தக்கதே. தீர்வினை நோக்கிய அரசியல் பயணமானது அதிக விலையினைப் பெறலாம். எந்த விலையினைக் கொடுத்தாவது சமாதானத்தை அடைவேன் என்பது சந்திரிகாவின் வாதமாகும். சிங்கள பேரிவாத அடிப்படையினையைக் கொண்ட பின்னணி புதிய அரசாங்கத்துக்கும் உள்ளது என்பதினை எவரும் இலகுவில் மறக்கமுடியாது. சந்திரிகா தனிப்பட்டரீதியில் நல்லவர் என்று பேசப்படுவது உண்மையாயினும், சிங்கள பேரினவாத சக்திகளைத் தாண்டி தமிழ் ஈழத்திற்கு மாற்றான சமஷ்டியினைக் கொடுக்கும் அரசியல் ஆளுமை அவரிடம் காணப்படுமா என்பது சர்ச்சைக்குரியதே. முஸ்லீம் காங்கிரஸ் அல்லது முன்னாள் தமிழ் போராளிக் குழுக்கள் நம்புவது போல் சந்திரிகா இனவாதம் அல்லாத நல்லவராகத் திகழலாம். ஆயின் இந்நிலை மட்டும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவாது என்பது இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கான வரலாறு நமக்கு சொல்லித் தரும் மறக்க முடியாத பாடமாகும். இதனையும் மீறி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளைக் காணும் போது இலங்கை முஸ்லீம்களினையும் அவர்களது அரசியல் அபிலாஷைகளையும் கணக்கில் எடுப்பது அவசியத் தேவையாகும்.

புதிய அரசாங்கம் அண்மையில் எடுத்த நகர்வுகளில் இலங்கை முஸ்லீம்களது நலன்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை என்பது வெளிப்படையானது. புதிய அரசாங்கத்தை தூக்கிப் பிடித்துள்ள முஸ்லீம் காங்கிரஸும் இதில் அக்கறை காட்டாதுவாளாவிருக்கிறது. ஆயின், முஸ்லீம்களது நலன்கள் உத்தேசத் தீர்வில் உதாசீனப்படுத்தப்படுமாயின் அது நீடித்த சமாதானத்துக்கு உத்தரவாதம் கொடுக்காது என்பது மட்டும் உண்மையாகலாம்.

---

# முஸ்லீம் சமூகத்தின் தலைமை யாரிடம்?

# ஒளி வட்டத்தைத் தேடி..

-ஓர் அலசல்

முஸ்லீம் சமூகத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு வரும் பிரதிநிதிகள் அமைச்சராகி விட்டால் தலைக்குப் பின்னால் ஓர் ஒளிவட்டம் வந்து ஒட்டிக் கொண்டதாக நினைத்துக் கொள்கிறார்கள்.

பெரும்பான்மைக் கட்சிகளில் இணைந்திருந்து சகல இனமக்களினதும் வாக்குகளைப் பெற்றோ அல்லது தேசியப்பட்டியலில் இடம் பெற்றோ பாராளுமன்றத்துக்குள் நுழைந்து அமைச்சர் பதவி கிடைத்து விட்டால் இந்த நாட்டில் வாழும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தானே ஒப்பற்ற தலைவர் என்ற கிரீடத்தை தாமாகவே சூட்டிக் கொள்கிறார்கள்.

முனனாள் ஆட்சியில் சபாநாயகராக இருந்த அல்ஹாஜ் எம்.எச்.முகமட், சபாநாயகராக இருந்து கொண்டும் -ராபித்தத்துல் ஆலமுல் இஸ்லாமி அமைப்பில் அங்கத்துவம் வகிப்பது குறித்தும் தானே தலைவர் என்று எண்ணிச் செயல்பட்டார். முஸ்லீம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பதவி வகித்த காரணங்கொண்டு தானும் தலைவனே என்று ஜனாப் ஏ.எச்.எம். அஸ்வர் கருதினார். ஒரே ஆட்சியில் இவர்கள் அங்கத்துவம் வகித்த போதும் இவர்களுக்குள் ஒரு பனிப்போர் நடந்து கொண்டு தான் இருந்தது.

ஆட்சி நடாத்தும் கட்சியில் அவர்கள் இப்போது இல்லை. தாங்கள் முஸ்லீம் சமூகத்தின் தலைவர்களும் இல்லை என்பதை இப்போது சந்தேகமற உணர்ந் திருப்பார்கள்.

தலைவன் நீயா நானா என்பதில் இவர்களுக்குள் ஒருதிரை மறைவு மோதல் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் கூட ஒரே ஒரு விடயத்தில் ஒருமித்த கருத்தும் உடன்பாடும் கொண்டிருந்தார்கள். அதுதான் கிழக்கின் தலைமைத்துவத்தை மறுப்பது அல்லது மறைப்பது அல்லத அதை ஒழிக்க முயற்சி எடுப்பது.

இப்போதைய ஆட்சியில் இந்தக் காட்சியில் நடிக்கிறார் ஜனாப் ஏ.எச்.எம்.பௌஸி அவர்கள். தலைவனாக மாறவும் கிழக்குத் தலைமைத்துவத்தை மறுக்கவும் மிகவும் உற்சாகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் ஜனாப் பௌஸி அவர்கள்.

இலங்கை முஸ்லீம்களின் சனத்தொகையில் ஏறக்குறைய 3,1/2 சதவீத வாக்குகளைப் பெற்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இன்றைய அரசின் அங்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவை விலக்கிக் கொண்டால் ஆட்சியும் இல்லை என்ற நிலையில் உள்ள அரசாங்கத்திலேயே அமைச்சராக இருந்து கொண்டு முஸ்லீம்களின் தலைவன் தானே எனறு காட்டிக் கொள்ள ஜனாப் பௌஸி அவர்கள் மிகவும் பிரயத்தனப்படுகிறார்.

அரசியல் கட்சி என்ற நிலையில் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ''முஸ்லீம்களின் அனைவரும் ஒன்றுபடவேண்டும்'' என்று குரல் கொடுத்து வருகிறாரே தவிர நாட்டு முஸ்லீம்கள் அனைவருக்கும் நானே தலைவன் என்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்டு பேசியதே கிடையாது. இப்படியிருக்க இதனைக் கண்டு ஏன் கொழும்புத் தலைமைத்துவங்கள் அஜீரண நிலை கொள்கின்றனவோ தெரியவில்லை.

ஏறக்குறைய 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் எனக்கு விருப்பு வாக்களித்துள்ளார்கள் என்று ஜனாப் பௌஸி பேசியதாக அண்மையில் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. மற்றும் முஸ்லீம்கள் செறிந்து வாழும் முஸ்லீம் காங்கிரஸின் செல்வாக்கு மிக்க பகுதிகளுக்கு முஸ்லீம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களோ வேட்பாளர்களோ அறியாமல் இவர் விஜயங்களை மேற்கொண்டிருக்கிறார். அண்மையில் ஏறாவூர் சென்ற அவர் நேரே அப்பகுதி ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்கு சென்று இறங்கிவிட்டார். இங்கு எதிர்கட்சி எம்.பியான அலி ஸாஹிருடனும் அவரது ஆதரவாளர்களுடனும் ஒரு தேனிலவு கொண்டாடித் திரும்பியிருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக -ஆட்சி மாறி -தான் அமைச்சரானதும் கொழும்பில் முஸ்லீம் தேசிய முன்னணி என்ற ஓர் அமைப்பை உருவாக்கி பிரதமருக்கு செப்,7ந் திகதி அன்று வரவேற்பும் கொடுத்தார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முஸ்லீம் பிரிவு என்று இந்த அமைப்பு தன்னை இனங்காட்டியிருக்கிறது. இதன் தலைவராக ஜனாப் பௌஸி அவர்களும், செயலாளராக ஜனாப் அலவி மௌலானா அவர்களும் தெரிவானதாக மிகச் சமீபத்திய செய்திகள் கூறின.

முஸ்லீம்களின் நலனுக்காக வாழ்ந்த இந்த நாட்டு அரசியலில் இருந்து எல்லோருக்குமே அருஞ்சேவையினை புரிந்த சேர். ராஸிக் பரீத் அவர்களோ, கலாநிதி பதியுதீன் மஷ்முத் அவர்களோ தங்களை தலைவர்களாக எப்போதும் பிரகடனப்படுத்தவுமில்லை; அதற்கு முனையவுமில்லை. முஸ்லீம்களை பகுதிபகுதியாக பாகுபடுத்தி ஆண்டதும் இல்லை. ஆனால் சமூகம் அவர்களை தலைவர்களாக இன்றும் மதிக்கிறது.

ஆளுக்கொரு அமைப்பும், நாளுக்கொரு இயக்கமுமாக தொடரப் போய்தான் இந்த நாட்டு தமிழ் மக்கள் வாழ்வு சீரழிந்தது. இன்றும் இரத்தமும் கண்ணீரும் ஓடிக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஒரு முடிவை நோக்கியிருக்கிறார்கள்- அல்லது அதற்கான பாதையை செப்பனிட்டு கொண்டு விட்டார்கள்; அல்லது செப்பனிடுகிறார்கள்.

இம்மாதிரியான அமைப்புகளும்- தலைமைத்துவப் போராட்டமும் இந்த நாட்டு முஸ்லீம் மக்களை நிச்சயம் வேதனையான ஒருநிலைக்கு கொண்டு போய் விடக்கூடும். அகதிகளாக அன்றாடங்காய்ச்சிகளாக இப்போதே அல்லலுறும் மக்களின் வாழ்க்கை மீது தலைமைத்துவப் போராட்டத்தை மேற்கொள்வது நாகரீகம் அற்றது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தலைவன் என்பவன் ஒரு சமூகத்தின் வரலாற்றைப் படைக்கிறான். வரலாறு அவனை தலைவனாக மாற்றிக் காட்டுகிறது. தலைவனாக தன்னை திணிக்க முயல்பவர்களை சமூகம் மதிப்பதில்லை; குப்பைத் தொட்டியில் போட்டுவிடுகிறது!

-முல்லா

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# காமினி: கொலைக்குப் பின்னால்...

திரு.காமினி திசாநாயக்கா நீண்ட காலமாகவே புலிகளின் வேண்டத்தகாதவர் பட்டியலில் இருந்தவர். 1986இல் ரெலோ இயக்கத்தினரை அழித்த கால முதற்கொண்டு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அமைப்புகள், தனிநபர்கள் தொடர்பாக புலிகள் உஷாரா்க இருந்து வந்துள்ளனர் என்ற எண்ணம் தோன்றும் வகையில் அவர்களுடைய நடவடிக்கைகள் அமைந்தன. 1979இல் உமா, சுந்தரம், நாகராசா மாஸ்டர் ஆகியோர் விடுதலைப்புலிகளிலிருந்து பிரிந்ததன் பின்னர் அவ்வமைப்பினுள் தோன்றிய மாபெரும் உட்சிக்கல் மாத்தையாவின் விவகாரமாகும். அதற்குப் புலிகளால் முன்வைக்கப்ட்ட காரணமும் இந்தியா சம்பந்தப்பட்டதே- அதாவது மாத்தையா இந்திய உளவுப்படைச் சதிக்குத் துணைபோனார் என்பதனால் தான் தாம் அவர்மீது நடவடிக்கை எடுத்தோம் எனப் புலிகள் கூறினர்.

தமிழ் ஈழப்போர் இறுதியில் வெற்றியடைந்து நவீன உலகின் முதற் தனித் தமிழ்நாடு தோன்றுவதற்கு பிரதான முட்டுக்கட்டை இந்தியாவே என்ற எண்ணம் 1985இன் பிற்பகுதியிலிருந்து புலித் தலைமைத்துவத்தின் மனதில் துளிர் விட்டு 1989 அளவில் இந்திய இராணுவத்தின் தாக்குதல் உச்சமடைந்த நிலையில் ஆழமாக வேரூன்றி விட்டது என்பது வெள்ளிடை மலை. ராஜீவ் காந்தி கொலையுடன் புலியும் இந்தியாவும் வெளிப்படையாகவே பரம வைரிகளான கதை நாமறிந்ததே.

இதன்பின்னர் புலிகளின் தமிழ்த்தேசியம் தொடர்பான கண்ணோட்டமும் திட்டவட்டமாக மாறிற்று. திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்ட பிளவு ''ஒரு பிராமணியச் சதி'' என்று புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியது. இந்தியாவின் ஆளும் வர்க்கம் பிராமணர் என்பதும், அவ்வர்க்கத்தின் கருத்தியலான பிராமணீயம் தமிழ் இன எழுச்சியை நசுக்கும் சதிகளுக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது என்பதும் திராவிட இயக்கம் மிகக் கடுமையாக ஆரம்பத்திலிருந்து வலியுறுத்திய விடயங்கள். புலிகளும் இக்கருத்தையே இன்று கொண்டுள்ளனர் என்பதும் இதிலிருந்து நமக்குத் தெரிகிறது. எனவே இந்தியச் செல்வாக்கு இத்தீவிலும் தமிழகத்திலும் இயன்றளவு குறைக்கப்படுவது தனித் தமிழ் ஈழம் உருவாவதற்கு இன்றியமையாத ஒரு விடயம் என விடுதலைப் புலிகள் இன்று திவீரமாக நம்புவது இயல்பே. இப்பின்னணியில்தான் நாம் காமினி தொடர்பாகப் புலிகள் கொண்டிருந்த கண்ணோட்டத்தை ஆராய்தல் வேண்டும்.

முதலாவது இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாவதற்கும் இந்தியாவின் ஆசிகளுடனேயே தென்னிலங்கையில் ஒரு ஸ்திரமான அரசியல் தலைமை இனி ஆட்சி நடத்தலாம் எனும் எண்ணம் பல சிங்கள அரசியலாளர் மத்தியில் வேரூன்றுவதற்கும் காரணியாக திரு.காமினி திசாநாயக்காவும் இருந்தார் என்பது அண்மைக்கால வரலாறு.

இரண்டாவது: இந்திய மத்திய அரசுடன் எந்தளவிற்கு ஒரு ஆழமான மிக நெருங்கிய உறவை அவர் கொண்டிருந்தார் என்பது றோகான் குணரெட்னாவின் "Indian Intervention in Srilanka" என்னும் நூலில் வெளியாகிய சில இரகசிய ஆவணங்களிலிருந்து புலனாகிறது. இவ்வாணங்கள் ஜே.ஆரிடமும் புலனாய்வுப் பிரிவுத் தலைவரிடமும் மட்டுமே இருந்தவையாகும். இவற்றில் இந்திய இராணுவம் 87இல் இங்கு வந்து வடகிழக்கில் நிலை கொண்டு புலிகளுடன் மோதத் தொடங்கிய பின் ஜே.ஆர். யுத்த நிறுத்த அறிவிப்பு ஒன்று விடுக்க வற்புறுத்துவதற்காக அந்நாள் றோ (R.A.W) வின் தலைவர் எங்ஙனம் காமினியினூடாக இங்கு வந்தார் என்பது போன்ற தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. றோ தலைமைப்பீடத்துடனும், இந்திய பிரதமர் அலுவலகத்தின் காரியதரிசியாகவும் ராஜீவின் கீழ் இந்தியாவின் மிகப் பலம் வாய்ந்த அரச அதிகாரியாகவும் இருந்த றெனன் சென் என்பவருடனும் காமினி எங்ஙனம் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்பது போன்ற தகவல்களும் வெளியாகின. சில சந்தர்ப்பங்களில் டெல்லியுடன் தனக்கு இருந்த இதுபோன்ற உறவுகளைப் பற்றி காமினி நண்பர்களிடம் கூறவும் தயங்கவில்லை. இவையாவும் புலிகளின் காதிற்கும் எட்டின.


மூன்றாவதாக: இலங்கை இனச்சிக்கலில் இந்திய இராணுவத் தலையீடு இல்லாத பட்சத்தில் இரண்டாவது ஈழப்போர் தனக்குச் சாத்கமாக அமையும் என்பது புலிகளின் திட்டவட்டமான கணக்கு. (1990இலிருந்து இலங்கை இராணுவத்திற்கு ஏற்பட்டுவரும் பின்டைவுகளை நோக்குகையில் இக்கணிப்பீடு சரியாகத்தான் உளது எனக் கூறுவர் சிலர்.) இதற்குப் பிரேமதாசாவின் கடும் இந்திய எதிர்ப்புப் போக்கு அத்தியாவசியம் எனப் புலிகள் எண்ணினர். ராஜீவ் கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தெரிய வந்த வேளையில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு விசேட அதிரடிப்படையை அனுப்பிப் புலிகளுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென இந்திய அதிகாரிகள் சிலர் முயன்ற கதையும் அந்நேரத்தில் குடாநாட்டிற்கு எட்டிற்று. இத்துடன் அன்றைய அரசிற் பலர் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவிடம் புலிகளை நசுக்க வரையறுக்கப்பட்ட முறையிலாவது இராணுவ உதவி பெற வேண்டுமென வற்புறுத்தியமையும் அதைப் பிரேமதாசா நிராகரித்தார் என்ற கதையும் அன்றிருந்தது.

இதனால் பிரேமாவைப் பலவீனப்படுத்தி, தனக்குச் சாதகமான ஒரு சிங்கள அரசியற் தலைவருடாகவும், பிரேமாவின் போக்கு மீது அதிருப்தியுற்றிருந்த இராணுவக் கடும் போக்காளரூடாகவும் தம்மை ஒரேயடியாக நசுக்கிவிட இந்தியா சதிமுயற்சிகளில் ஈடுபடுகிறது. இதன் பிரதான பின்னணிச் சூத்திரதாரி காமினி என்று புலி நம்பிற்று. அன்றைய காலகட்டத்தில் யோகியின் சில பேச்சுக்கள் புலிகளின் மனதில் இருந்த இவ்வெண்ணத்தை வெளிப்படுத்தின. (பிரேமாவை வீழ்த்த உபாலி பத்திரிகை நிறுவனத்திற்கு இந்தியா பணம் கொடுத்தது என யோகி எங்கோ கூறியதை அப்போது அரச பத்திரிகையான ஒப்சேவர் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது.) இம்பீச்மென்ற் விடயத்தில் காமினியும் லலித்தும் பிரேமாவை வீழ்த்த முற்பட்டதன் பின்னணியில் இந்தியாவும் இருந்தது என்ற கருத்து அன்று கொழும்பு வட்டாரங்களில் அடிபட்டதும், அது தொடர்பாக பிரேமாவும் இந்தியாமீது எரிச்சலுற்றிருந்ததும் புலிகள் உஷாரடையக் காரணமாயின. ஆனால் இம்பீச்மென்ற் தோல்வியுற்று காமினி ஓரங்கட்டப்பட்ட பின் பிரேமா மெதுமெதுவாக இந்தியாவின் பிடிக்குள் சென்றமை புலிகளின் கவனத்தைத் திசை திருப்பிற்று. இந்தியா தன் முன்னாள் வைரியான பிரேமாவுடன் உறவைத் துரிதமாகப் பலப்படுத்தத் தொடங்கிய காலகட்டத்தில் அவர் கொலையுண்டார்.

நான்காவதாக: 1991இல் ராஜீவ் கொலையில் புலிகள் சம்பந்தப்படுத்தப்பட்டு விசாரணை வழக்கு எனத் தொடங்கிய பின் புலிகள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை ஒன்றுள்ளது. அதாவது ராஜீவ் கொலை வழக்கையும் விசாரணையையும் பயன்படுத்தி பிரபாகரன் என்றுமே அரசியல் அங்கீகாரத்துடன் இலங்கை அரசுடனோ உலகின் வேறு எந்த ஒரு நாட்டுடனோ ஸ்தாபனத்துடனோ பேச்சுவார்த்தை நடாத்திட முடியாத ஒரு நெருக்கடியை இந்தியா சட்டபூர்வமாக ஏற்படுத்தலாம் என்பதே அது.

இந்தியாவின் சட்டங்களினால் கொலைக்குற்றச் சாட்டின் கீழ் வேண்டப்படுபவர் பிரபாகரன். எனவே புலிகளை தமிழரைப் பிரதிநிதிப்படுத்தும் ஒரு அரசியற் சக்தியாக அங்கீகரித்துப் பேச முடியாது என யாரேனும் ஒரு இலங்கையின் தலைவர் கூறிவிட்டால் தமக்கு அது சர்வதேசரீதியாக இழுக்கை ஏற்படுத்தும் என்பது புலிகளின் எண்ணம். அது சரியானதே. அத்துடன் இந்தியா ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இப்படியான நிலைப்பாட்டைப் பயன்படுத்தி ஒரு வரையறுக்கப்பட்ட இராணுவத் தலையீட்டை நியாயப்படுத்தக் கூடிய ஆபத்தையும் அவர்கள் உணராமலில்லை.

''இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை. எனது அரசு புலிகளுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்க்கவே முனையும்'' என்று சந்திரிகா கூறியதோடு பேச்சுவார்த்தைகளையும் தொடங்கினார். அதனால் புலிகளுக்கு இந்தியா தொடர்பான பிரச்சினை ஓரளவு தீர்ந்திருந்தாலும், காமினி மீண்டும் ஐ.தே.கவினுள் புகுந்து வளர்ந்து விட்டது ஒரு சலன்த்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். தம்மால் அப்பட்டமான இந்தியக் கைக்கூலி என வர்ணிக்கப்பட்ட ஒரு நபர், இந்திய - இலங்கை ஒப்பந்தமே இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வு என அழுத்தந் திருத்தமாகவும் தொடர்ச்சியாகவும் கூறிவந்த ஒரு நபர் திடீரென எதிர்கட்சித் தலைவ்ராகவும், ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராகவும் கிளம்பியது புலிகளுக்குச் சங்கடத்தைக் கொடுத்த விடயங்கள் இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரம் ஆரம்பமான கையோடு காமினியும் பிரேமச்சந்திராவும் இந்தியா சென்று வந்தனர். தாம் திருப்பதி வெங்கடாசலப் பெருமானின் ஆசிகளைப் பெறச் செல்வதாக காமினி கூறியிருந்த போதும், அவர் சென்னை Taj Coromandel ஹோட்டலில் டிக்சித்துடனும், றொனன் சென்னுடனும் மதிய உணவு அருந்தியதாகவும் வேறு பல டெல்லி அதிகாரிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதாகவும் கொழும்பில் பொது ஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்களில் கதை அடிபடலாயிற்று.






தேர்தல் செலவிற்கெனப் பல கோடிகள் காமினிக்கு இந்தியா கொடுத்ததாகவும் அந்த வட்டாரங்கள் கூறின. இச்சூழலில் காமினி தோற்றாலும் பாராளுமன்றத்திலும் தேசிய அரங்கிலும் இந்தியாவிற்குச் சார்பான ஒரு பலம் வாய்ந்த குரலாக இருப்பார் என்பது தெளிவாகத் தெரியலாயிற்று. ராஜிவ் கொலை வழக்கு நடந்து வரும் இவ்வேளையிலும் சந்திரிகா அரசு புலிகளுடன் தொடர்ந்து பேச வேண்டிய பொருளாதார்ர நெருக்கடியில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலும் காமினியின் இருப்பு ஆபத்தானதாகவே புலிகளுக்குத் தென்பட்டிருக்கும். மரணமானார் காமினி.

சிவராம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மீண்டும் மேற்கிளம்பும் ஐ.தே.க. இனவாதம்!

'தொட்டலங்க' (பாலத்துறை)வில் காமினியையும் அவரது முக்கிய சகாக்களையும் பலிகொண்ட குண்டு இலங்கை அரசியலின் அண்மைக்காலப் போக்குகளிலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவராக ரணிலையும், ஜனாதிபதி வேட்பாளராக காமினியின் மனைவி சிறிமாவையும் உருவாக்கி விட்டுள்ளது மட்டுமன்றி புதிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ள பொதுசன ஐக்கிய முன்னணிக்குள்ளும் தடுமாற்றத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது இக்குண்டு.

ரஜீவ் காந்தி கொல்லப்பட்டது போலவே புலிகளினால் திட்டமிட்டு அனுப்பப்பட்ட ஒரு பெண் கொலையாளியின் தற்கொலைக் குண்டாலேயே காமினி கொல்லப்பட்டுள்ளார் என்பது பொதுவாக அரசாங்க உறுப்பினர்கள் முதல் எதிர்க்கட்சிகள் பத்திரிகையாளர்கள் எல்லோரதும் முடிந்த முடிவாகிவிட்டது. விசாரணையை மேற்கொள்ளும் பொலிஸார் முன்னைய கொலைகளைப் போலல்லாது இக் கொலைக்கான சூத்திரதாரிகளை தாம் கண்டுபிடிக்கும் வரை இக்கொலைக்கு காரணமானவர்கள் புலிகளே என்று அடித்துச் சொல்லப் போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால அவர்களது விசாரணையின் போக்கும், தகவல்களை அவர்கள் தொகுக்கும் விதமும் இது புலிகளது கைவரிசையே என்ற முடிவின் அடிப்படையில் செயற்படுவதையே காட்டுகின்றன.

வழமை போல புலிகளும் தமது பங்கிற்கு இக்கொலையைச் செய்தவர்கள் தாங்கள் அல்ல என்று அடித்துக் கூறியுள்ளார்கள். காமினி திசாநாயக்காவை இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் கொல்ல வேண்டிய என்ன தேவை புலிகளுக்கு இருந்தது என்று கேள்வி எழுப்பிய கொழும்பின் அரசியலில் விமர்சகர் ஒருவர், அவர்களால் -உண்மையில் காமினியை கொல்வது அவர்களது நோக்கமாக இருந்திருந்தால் - காமினியை வெறும் ஒற்றைத் துப்பாக்கியால் மிக இலகுவாகவே கொன்றிருக்க முடியும் என்று கருத்து வெளியிட்டிருந்தார். புலிகளின் நோக்கம் வெறும் காமினியை கொல்வதுமட்டுமல்ல, தெற்கின் அரசியல் தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியும் தங்களிடமே இருக்கிறது என்று காட்டுவதாகவே இக் கொலை உள்ளது என்கிறார் அவர். பல பத்திரிகைகளும் கூட இதே கருத்தை வெளியிட்டுள்ளன. 'தெற்கில் ஆட்சியமைக்கப் போகும் தலைவர் யார் என்பதை பிரபாகரன் தீர்மானிக்கிறார்' என்றும் சிங்கள தேசிய தலைவர்களை இல்லாமல் செய்வது புலிகளின் திட்டம் என்றும் அப்பத்திரிகைகள் எழுதியுள்ளன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலவரைபை உருவாக்கியவர்களில் ஒருவரான காமினியை (மற்றையவர் ராஜீவ் -ஏற்கனவே கொல்லப்பட்டவர்)கொல்வது புலிகளின் நீண்ட கால திட்டம் என்றும், ஏற்கனவே இதற்கான முயற்சியில் புலிகள் ஈடுபட்ட போதும் நல்லையா என்ற ஓய்வு பெற்ற கல்விச் சேவை உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் குமார் என்கிற இளைஞனைக் கொண்டு நடாத்தவிருந்த இந்தக் கொலை முயற்சி வெற்றி பெறவில்லை என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்செயலாக கொழும்பில் பொலிஸாரிடம் கைதாகிய குமார் மூலம் உண்மைகள் வெளிப்படவே, புலிகள் வேறொரு திட்டத்தை தீட்டுவதாகவும் அதன்படியே இக்கொலை நடந்ததென்றும் பத்திரிகையாளர்கள் சம்பவங்களை ஒரு மர்மக் கதையில் தொகுப்பது போல தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர்.

அரசியல் படுகொலைகளைச் செய்வதும், பின்னர் அவற்றை தாம் செய்யவில்லை என்று மறுத்து அறிக்கை விடுவதும் புலிகளுக்குப் புதிய விடயமில்லை என்பதால் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் எதையும் யாராலும் முற்றாக மறுத்துவிடவும் முடியாது.

இதேவேளை புலிகளுடன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு போகத் தயாராகிக் கொண்டிருந்த அரசு சார்பு பிரதிநிதிகள் திடீரென தமது பயணத்தை ரத்துச் செய்தனர். பேச்சுவார்த்தைகள் காலவரையின்றி ஒத்திப் போடப்பட்டதாக அரசு அறிவித்தது. 'சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசின் முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினர். புலிகள் இக்கொலையை செய்திருந்தால் தாம் பேசுவது பற்றி யோசிக்க வேண்டும் என்ற கருத்தும் வெளிப்பட்டது. பாதுகாப்பு பிரதியமைச்சர் தனது சுழல் நாற்காலியில் இருந்து அசைந்தபடி ரூபவாஹினி செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் 'இரண்டு வழிகளில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஒன்று சமாதான வழி. மற்றையது யுத்தவழி. சமாதான வழி வெற்றி பெறாவிட்டால், யுத்தத்தின் மூலமாக எம்மால் வெற்றி பெறமுடியும். எமது ஆயுதப் படைகளுக்கு உரிய ஆயுதங்களை வழங்கி, தேவையான வசதிகளையும் வழிகாட்டல்களையும் கொடுத்தால் யுத்தத்தின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்' என அறிவித்திருந்தார்.

ஒரு சிறிதளவு காலம் நீங்கலாக ஐ.தே.க. அரசும், அது கட்டி வளர்த்த ஆயுதப்படைகளும் கடந்த 17 ஆண்டு காலமாக நடாத்திய யுத்த அனுபவத்தின்பின், வெற்றி பெறமுடியாமைக்கு காரணம் வெறுமனே போதுமான ஆயுத தளபாட வசதிகள் அற்ற நிலைதான் என்ற அபிப்பிராயம் தான் கௌரவ அமைச்சரிடம் இருக்கிறது என்ற விடயம் பலருக்கும் வியப்பூட்டியிருக்கக் கூடும். முன்னர் சாகரவர்த்தன, வெற்றிலைக் கேணி ஒசோன் ட்றேடர் கப்பல்கள் தகர்க்கப்பட்ட போது தடும்புரளாதவராகத் தன்னைக் காட்டிக் கொண்ட அவர், காமினி கொல்லப்பட்டதும் தடுமாறி உளறிக் கொட்டிவிட்டார் என்றே தோன்றியது. நெருக்கடி நேரம் ஒரு மனிதனது உண்மைச் சொரூபத்தை காட்டிவிடும் என்பது உண்மையானால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்ர ரத்வத்தையின் வார்த்தைகள் அவரது நிலைப்பாட்டை நன்றாக தெளிவு படுத்திவிட்டன.

'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்று முழங்கிய ஜே.ஆரின் வார்த்தைகளை, 1983 கலவரத்தை 'உணர்சிகளை கட்டுப்படுத்த முடியாத மக்களின் நடவடிக்கையாக' கண்ட ஜே.ஆரின் கண்ணோட்டத்தை இவரது இப்பேட்டி தெளிவுபடுத்தி விட்டது என்றே கூறவேண்டும்!

இவ்விடத்தில் புதிதாக கொண்டுவரப்பட்டுவிட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் சுற்றிவளைப்புக்களும், கைதுகளும் ஆரம்பமாகிவிட்டதையும், ஆயுதக் கொள்வனவு முயற்சிகள் மீள ஆரம்பமாகிவிட்டதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

'புலிகளுக்கும் அவர்களது நடவடிக்கைகளுக்கும் சாயம்பூசி மூடிமறைக்க வேண்டிய அவசியமோ நோக்கமோ எமக்கு இல்லை. அதே போல ஆதாரமற்று குற்றம் சாட்டவும் நாம் தயாரில்லை' என்று பிரதமர் சந்திரிகா பதிலளிக்க வேண்டியளவுக்கு புலிகளுக்கு சார்பாக அரசு இயங்குகிறது என்ற அபிப்பிராயம் பலமாக உருவாக்கப்பட்டு வருகிறது. குறுகிய அரசியல் லாபத்திற்காக பேரினவாதத்தை காக்க தயாரான ஐ.தே.கவுடன் சேர்ந்து கொண்டு புலிகளும் அரசாங்கமும் செய்த சதியே இக் கொலை என்று முன்னாள் சபாநாயகர் எம்.எச். எம்.முஹமத் அவர்கள் காமினியின் இறுதிச் சடங்கின் போது நடந்த கூட்டத்தில் வைத்து உரை நிகழ்த்தினார். ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்பட்ட போதோ, லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்ட போதோ, அல்லது அவர் மிகவும் சுலபமான முறையில் பாதுகாத்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்ட போதோ புலிகளைப் பற்றி ஒன்றுமே பேசாத முஹமத் அவர்கள், பிரபாகரனுடன் பேசப் போவதற்காக இன்றைய ஜனாதிபதியிடம் அனுமதியும் கேட்ட முஹமத் அவர்கள் இப்போது புலிகளை சாடுவதில் ஒற்றைக்காலில் நின்றதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தங்கள் கடந்த கால அரசியல் ஊழல்களை மூடிமறைக்க உதவக்கூடிய ஒரே சக்தியாக அவர்கள் நம்பிய காமினியின் மறைவு இத்தகையதொரு 'தீவிரத்தை' அவருக்கு கொடுத்ததில் ஆச்சரியம் தான் என்ன?

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐ.முன்னணிக்கு அளிக்கப் போகும் வாக்கு ஒவ்வொன்றும் புலிகளுக்கு அளிக்கப் போகும் வாக்குகளே என்று பிரச்சாரம் செய்யப்போவதாக ஐ.தே.க. முடிவு செய்திருப்பது (அதற்கும் முஹமத் அவர்கள் முக்கிய காரணமாம்) அதுதன் கடைசிப் புகலிடமாக மீண்டும் தீவிர இனவாதத்தை நோக்கி நகர முற்படுவதையே தெளிவாகக் காட்டுகிறது. (ஒரு வேளை தேர்தலில் சந்திரிகா வென்றால், புலிகள் வெற்றி பெற்றதாக அங்கீகரித்து அவர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்க இவர்கள் முன்வருவார்களோ என்னவோ?) தேர்தலில் சந்திரிகா வென்றுவிட்டால் புலிகள் வென்றுவிட்டதாக இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் போலும்!

ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது ஆட்சியை கைப்பற்றிவிட வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கும் ஐ.தே.க - குறிப்பாக காமினி அணியினர் (ரணில் அணியினர் இதில் அவ்வளவு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை) காமினியின் மனைவியை அவரின் இடத்திற்கு நிறுத்தியுள்ளனர். அவருக்கு வரக்கூடிய அனுதாப வாக்குகளை எதிர்பார்த்து நிறுத்தியுள்ள இவர்கள் இக்கொலையை செய்தவர்கள் புலிகளே என்று தீவிரமாக அடித்துக் கூறுவதற்குக் காரணம் வெறுமனே அது உண்மையாக இருக்கலாம் என்ற ஊகத்தால் மட்டுமல்ல, சந்திரிகாவை புலிகளின் கூட்டாளியாக காட்டுவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் அவருக்கு எதிரான அபிப்பிராயத்தை இனவாத அடிப்படையில் கிளப்பி லாபம் பெறும் நோக்கத்தினாலுமே. ஏற்கனவே பாராளுமன்ற தேர்தலின் போது சந்திரிகா - அஷ்ரப் கள்ளக்கூட்டு ஒப்பந்தம் செய்ததாக இனவாதம் பேசியவர்களும் இதே ஆட்கள் தான் என்பது வெளிப்படை. ஆயினும் தேர்தலில் இவர்களது இனவாதப் போக்கு இவர்களுக்கு வெற்றியைத் தரவில்லை.

ஆனால் இந்தப் புரிதல் பொ.ஐ.மு.வுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஐ.தே.க.கக்கும் இனவாதம், புலிகளுடன் பொ.ஐ.முவை இணைத்து பேசுவது, படையினருக்கும் அரசுக்குமிடையில் பிளவுகளை ஏற்படுத்த அவர்கள் இனவாதத்தை கையாள்வது போன்ற நடைமுறைகள் பொ.ஐ.முவை கதிகலங்க வைத்திருப்பதாகத் தெரிகிறது. பத்திரிகைகளும் பிற தொடர்பு சாதனங்களும் இனவாதப் போக்கிற்கு ஏற்கனவே இரையாகிப் போனவை என்பதனால் மிக இலகுவாகவே அவை ஐ.தே.க.சார்பு நிலையை- புலி எதிர்ப்பு நிலையை எடுத்துவிடுகின்றன. மக்களுக்கு நடந்து முடிந்த இந்தக் கொலை சமாதானப் பேச்சுக்களை நிறுத்திவிட வேண்டுமென்பதையே காட்டுகின்றன என்ற கருத்தை அவை எடுத்

→15

-சஞ்ஜீத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஜனநாயகப் போராட்டத்தின் சவால்களும் -2


சமுத்திரன்

-சென்ற இதழ் தொடர்ச்சி-

1977ல் ஐ.தே.க தேர்ந்தெடுத்த பொருளாதாரக் கொள்கை, லிபரல் கொள்கை, திறந்த பொருளாதாரக் கொள்கை ''சிங்கப்பூர் மாதிரி'' என வர்ணிக்கப்பட்டது. ஐ.தே.கவின் கொள்கை படிப்படியாக உலக வங்கி -சர்வதேச நாணய நிதியம் ஆகிய ஸ்தாபனங்கள் முன்வைத்த கொள்கையினாலேயே வழி நடத்தப்பட்டது. 1977 - 1994 காலகட்டத்தில் இலங்கை தேசிய பொருளாதாரம் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. இதன் விளைவாக பொருளாதாரத்தின் உற்பத்தி வெளியீடுகளின் தொகுப்பிலும் தன்மைரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கையில் தனியார் மூலதனக் குவியல் பற்றிய ஆய்வுகள் இன்னும் வெளிவரவில்லை. ஆயினும், கடந்த பதினேழு வருடங்களில் தனியார் துறை வளர்ந்திருப்பது கண்கூடு. இதற்கு உதவும் கொள்கைகளை அரசாங்கம் பின்பற்றியதும் தெரிந்ததே. அதேவேளை ஒப்பீட்டுரீதியில் ஐ.தே.க காலகட்டத்தின் பொருளாதார விருத்தி இந்த ஆட்சியின் அடிக்கடி முன்மாதிரிகள் எனக் குறிப்பிட்ட கிழக்காசிய நாடுகளின் (தென்கொரியா, தைவான்) 1960 -1970களின் வளர்ச்சியை விட பலவழிகளில் மந்தமானதாகவும் தன்மைரீதியில் பின்னடைந்ததாகவுமே இருக்கிறது.


இங்கு எழும் ஒரு முக்கிய கேள்வி. தேசிய மட்டத்தில் (அதாவது ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு) துரிதமான முதலாளித்துவ அபிவிருத்திப் போக்கை அடைய முயற்சிக்கும் ஒரு அரசாங்கம் எந்த அளவிற்குத் தனது தேசிய பொருளாதாரத்தை திறக்க வேண்டும். அரசை எப்படி எந்தத் துறைகளில் ஒரு பொருளாதார வளர்ச்சிக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதாகும். கட்டற்ற சந்தைக் கொள்கை எப்போதும் எல்லா நிலைமைகளிலும் ஒரு குறிப்பிட்ட பின்னடைந்த தேசிய பொருளாதாரத்தின் துரிதமான விருத்திக்கு வழிவகுக்கும் என்பதற்கு ஆதாரம் இல்லை. இது அந்த தேசிய பொருளாதாரத்தின் உற்பத்தி சக்திகளின் விருத்தி மட்டத்திலும் அதன் சர்வதேசரீதியான போட்டித் திறனிலும் தங்கியுள்ளது. ஒரு பின்தங்கிய நாடு கட்டற்ற சந்தைக்குச் சாதமான கொள்கைகளை அமுல் படுத்தும் போது அங்கே பண்டமயமாக்கலும் பணப்புழக்கமும் அதிகரிக்கும். ஆனால் இவை சுயப்போக்கில் உற்பத்தியின் உற்பத்தித் திறனின் உற்பத்தி மூலதனக் குவியலின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் எனச் சொல்ல முடியாது. இந்த நிலைமைகளில் வர்த்தக மூலதனம் தொடர்ந்து வளரலாம். ஆனால் அது எவ்வளவிற்கு உற்பத்தி மூலதன்மாக மாறுகிறது என்பதிலேயே முதலாளித்துவ மாற்றம் தங்கியுள்ளது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கூடாக உபரியைப் பெருக்கவல்ல ஸ்தாபனரீதியான, அமைப்புரீதியான (Structural) மாற்றங்கள் ஏற்படாத பட்சத்தில் மூலதனக் குவியலின் தொடர்ச்சியான வளர்ச்சி தடைப்படும். அதேநேரம் கட்டற்ற சந்தைகள் இயங்குவதால் சுழற்சிப் பகுதியில் மூலதனம் திரளலாம். உதாரணமாக இன்றைய இந்தியாவிற்கும் வெளிநாட்டு மூலதனம் பெருமளவில் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதில் பெரும்பகுதி உற்பத்தி மூலதனமாக அன்றி பரிமாற்ற ஊடக வணிக (Speculative) துறைகளிலேயே முடங்கியுள்ளது.

உலகப் பொருளாதார அமைப்பின் ஓரிடத்தில் (உ+ம் ஒரு தேசிய பொருளாதாரத்தில்) கட்டற்ற சந்தைகளின் விளைவாக அதே அமைப்பின் வேறிடங்களில் மூலதனக்குவியல்கள் இடம் பெறலாம். ஆகவே உலக அமைப்பை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளும் போது கட்டற்ற சந்தைகள் மூலதனத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றன் என்ற முடிவு சரியானதே. ஆனால் இங்கு முக்கியமான பிரச்சினை ஒரு குறிப்பிட்ட தேசிய எல்லைக்குள் எப்படி மூலதனக் குவியலைத் தொடர்ந்தும் பரப்புவது, ஆழமாக்குவது என்பதாகும். இந்த நோக்கில் பார்க்கும் போது சந்தை சக்திகளுக்குச் சாதகமான கொள்கை என்பது எப்போதும் எல்லா இடங்களிலும் கட்டற்றசந்தைக்கு சாதகமான கொள்கை எனக் கொள்ள முடியாது. அதாவது ஒரு தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியே நோக்கமெனில் அந்த அரசாங்கத்தின் கொள்கைகள் மூலதனக்குவியலை தனது நாட்டின் பொருளாதாரத்துக்குள் முடிந்தவரை அதிகரிக்க உதவ வேண்டும். இந்தக் கொள்கைகள் நிலைமைகளைப் பொறுத்து கட்டற்றசந்தை, கட்டுப்படுத்தப்பட்ட சந்தை, உற்பத்தி மான்யம், உலகச் சந்தையில் நிலவும் வட்டி வீதத்தை விட குறைந்த வீதத்தில் மூலதனக் கடனை வழங்கல் போன்றவற்றை உள்ளடக்கும் என்பதை கிழக்காசிய அனுபவங்கள் காட்டுகின்றன். ஐ.தே.க அரசாங்கத்திடம் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தின் முதலாளித்துவ மாற்றம் பற்றி ஒரு பரந்த நீண்ட காலப்பார்வை இருக்கவில்லை. உலக வங்கியின் கட்டற்ற சந்தைப்பிரச்சாரத்தைக் கேட்டு படித்த அளவிற்கு ஐ.தே.க. தலைமையினரும் அவர்களின் அபிவிருத்தி ஆலோசகர்களும் ஜப்பான், தென்கொரியா, தைவான் போன்ற நாடுகளின் அனுபவங்களிலிருந்து படிக்க முற்படவில்லை. அப்படிச் செய்திருந்தால் ஐ.தே.கவின் பொருளாதாரக் கொள்கை சீர்திருத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அத்தகைய கொள்கைமாற்றம் அவ்வளவு சுலபமானதல்ல. இங்கு அடிப்படையான அமைப்புரீதியான பிரச்சினைகள் உண்டு. குறுகிய காலத்தில் பெரிய வீதத்தில் லாபத்தை தேடும் போக்கையே ஐ.தே.க கொள்கைகள் ஊக்குவித்தன. அதேநேரம் அரசு கைத்தொழில் மயமாக்கலை முன்னெடுத்துச் செல்லும் ஒரு முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சிக்குப் போதியளவு உதவவில்லை. இதைச் செய்வதற்கு உலகவங்கி சர்வதேச நாணயநிதியத்தின் கட்டுப்பாடுகளை மீறவும் தயாராக இருக்க வேண்டும். அரசாங்கமும் அரசும் தேசிய பொருளாதார மாற்றத்தை மனதில் கொண்டு முதலாளித்துவ வர்க்கத்தைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தவோ அவ்வர்க்கத்தினை கைத்தொழில் முதலாளித்துவத்தை நோக்கிய பரிணாமத்தை போதியளவு ஊக்குவிக்கவோ இல்லை. அதாவது ஐ.தே.கவினர் அரசை நீண்டகால நோக்கில் முதலாளித்துவ கைத்தொழில் மயமாக்கலுக்கு உதவும் வர்க்கத் தலைமைத்துவத்தின் கருவியாகப் பயன்படுத்தவில்லை. இதையே ஜப்பானிய, தென்கொரிய, தைவானிய அரசாங்கங்கள் வெற்றிகரமாகச் செய்தன.



இங்கு குறிப்பிட்ட கிழக்காசிய அரசுகளின் பிரச்சினை பொருளாதார தாராளவாதம்- அரசியல் தாராளவாதம் என்பதேயல்ல. அது பொருளாதார தாராளவாதம்- மூலதனக் குவியல் என்பதாகும். மூலதனக் குவியலுக்குச் சாதகமான வகையில் அவை பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தன. அவர்களைப் பொறுத்தவரை கட்டற்ற சந்தையா கட்டுப்படுத்தப்பட்ட சந்தையா என்பதைக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நீண்டகால உற்பத்தித்திறனை வளர்த்து சர்வதேச போட்டித்திறனை உயர்த்தும் தேவைகளினதும் மூலதனக் குவியலை ஊக்குவிக்கும் நோக்கங்களினதும் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டன. நீண்டகால உற்பத்தித்திறனின் துரித வளர்ச்சியே இந்நாடுகளின் பொருளாதார வெற்றியை உத்தரவாதப்படுத்தியது. இதற்காக அந்நாடுகளின் அரசு மனித வளத்தை விருத்தி செய்ய தொழிநுட்பத்தை இறக்குமதி செய்து படித்தறிய பல திட்டங்களை அமுல்படுத்தின. அவை உலக வங்கியின் புத்திமதிக்கெதிராக பல தடவைகள் நடந்து வெற்றியும் பெற்றுள்ளன. (இவை பற்றிப் பின்னர்) அதேநேரம் தொழிலாளர்களை, பொதுமக்களையும் அடக்கின. அங்கே ஜனநாயகம் பொருளாதார விருத்தியின் பெயரால் ஒதுக்கப்பட்டது. ஐ.தே.கவும் ஜனநாயகத்தை ஒதுக்கியது. ஆனால் அந்த ஒதுக்கல் தொழிலாளர்களை ஒடுக்கவும், மக்களை இம்சைப்படுத்தவும் மட்டுமே உதவியது. இந்த நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தை அபிவிருத்திக்கு உதவும் வகையில் இயங்க வைக்கும், நெறிப்படுத்தும் ஆற்றலை ஐ.தே.க. அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. இது ஒரு முக்கிய் வேறுபாடாகும். ஐ.தே.க கால அரசு ஒரு அடக்குமுறை அரசு ஆனால் ''அபிவிருத்தி அரசு'' (Developmented State) அல்ல. தென்கொரியா அரசும் அடக்குமுறை அரசுதான்; ஆனால் அதேநேரம் அது ஒரு முதலாளித்துவ ''அபிவிருத்தி அரசு''

இப்படிச் சொல்வது ஐ.தே.கவின் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் அதன் அரசியல் அடக்குமுறைக் கொள்கைகுமிடையே முறிவேற்பட்டிருந்தது என்பதாகும். ஐ.தே.க. கட்டவிழ்த்த தொடர்ச்சியான அரசு பயங்கரவாதமும் வடகிழக்கு யுத்தமும் ஒரு சிலர் லாபங்களைத் தேட உதவியிருக்கலாம். ஆனால் அவற்றின் அழிவுத் தன்மைகளும் விளைவுகளும் தேசிய பொருளாதாரத்தின் மாற்றத்திற்கு தடைகளைப் போட்டன. ஐ.தே.கவின் பயங்கரவாத ஆட்சி குறுகிய காலத்தில் பெரிய லாபத்தைக் குறுக்குவழிகளில் தேடுவோருக்குச் சாதகமாயிருந்தது. ஆனால் அந்த லாபங்கள் உற்பத்தி மூலதனமாக மாறுவதற்கு உகந்த நிலைமைகள் போதவில்லை



பொது மக்கள் முன்னணி அரசாங்கம் ஜனநாயகமாக்கலுக்கு உதவும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. ஆனால் இவற்றுடன் இணைந்து போகும் வகையில் பொருளாதாரக் கொள்கையை எப்படி வகுக்கப் போகிறது என்ற கேள்வி பலர் மனதில் எழுந்துள்ளது. ஐ.தே.க.வால் ''திறந்த பொருளாதாரக் கொள்கையின் விதிகளை தேசிய பொருளாதார மாற்றுத்திட்டம் ஒன்றிற்கு கீழ்ப்படுத்தி அரசை அபிவிருத்தியின் தலைமைக் கருவியாக்க முடியவில்லை. இதை பொது மக்கள் முன்னணியால் செய்ய முடியுமா? ஐ.தே.க அதன் பொருளாதாரக் கொள்கையை பாதகமாகப் பாதிக்கும் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. பொது மக்கள் முன்னணி இதை மாற்றி சமுகமான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஜனநாயகப் போக்கின் எதிர்காலம் பொது மக்கள் முன்னணியின் பொருளாதாரக் கொள்கையிலும் பெருமளவு தங்கியுள்ளது. பொது மக்கள் முன்னணி தென்கொரியா ''அபிவிருத்தி அரசு'' மாதிரியைப் பின்பற்ற முடியாது. ஏனெனில் அது ஜனநாயகமற்ற முதலாளித்துவ வளர்ச்சியின் மாதிரி. அப்படியானால் பொது மக்கள் முன்னணியினால் ஒரு ''ஜனநாயக அபிவிருத்தி அரசை'' உருவாக்க முடியுமா? இத்தகைய ஒரு மாதிரியின் உள்ளடக்கம் என்ன?

இந்தக் கேள்வியை நாம் மக்கள் மட்டத்திலிருந்து பார்க்க வேண்டாமா? அதாவது இலங்கையின் தொடர்ச்சியான ஜனநாயக மார்க்கத்துக்காகப் போராடும் சக்திகளின் பார்வையில் ஜனநாயகம் பொருளாதாரக் கொள்கை எப்படி அமைய வேண்டும்? எத்தகைய போராட்டங்கள்?

இந்தச் சவாலை எதிர்நோக்கும் நாம் மேற்கு ஐரோப்பிய, கிழக்காசிய அனுபவங்களிடமிருந்து சில பாடங்களை படிக்கலாம் என நம்புகிறேன். இவை பற்றி இந்தக் கட்டுரையின் இரண்டாவது பாகத்தில் பார்ப்போம்.

- வரும் -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொண்டமானுக்கு ஓர் பகிரங்க கடிதம்

உங்களுடைய எல்லாப் பத்திரிகை அறிக்கையிலும், 'நான் எதைச் செய்தாலும் என்னுடைய மக்கள் மீது உள்ள அக்கறையினால் தான் அதைச் செய்கிறேன்' என்று நீங்கள் உறுதியாகவும் தொடர்ந்தும் வலியுறுத்திக் கூறி வந்துள்ளீர்கள். நீங்கள் குறிப்பிடும் 'என்னுடைய மக்கள்', என்பது அந்த மக்களை மட்டுமல்ல அவர்களுடைய எல்லாச் சொத்துக்களும் 'என்னுடைய சொத்துக்கள்' அவர்களுடைய எல்லாப் பணமும் 'என்னுடைய பணம்' என்ற அர்த்தத்திலேயே சொல்லப்படுகின்றது என்று காட்ட வேண்டும் என்ற அக்கறை காரணமாக அந்த அதே உங்களது மக்களின் ஒருவன் என்ற முறையில் இக்கடிதத்தை எழுதுகின்றேன். அத்துடன் உங்களுடைய வாழ்க்கையின் வசந்த காலத்தின் போதே இவையெல்லாவற்றையும் உங்களது பரம்பரைச் சொத்தாக அடுத்த பரம்பரைக்கு கையளித்து விடுவதே உங்கள் நோக்கம் என்பதையும் இக்கடிதம் தெளிவுபடுத்தும்.



## உங்களுடைய மக்களும் மக்களுடைய சொத்தும் உங்களுடைய சொத்தும்

நான் இ.தொ.காவின் கணக்காளராக 1986 பெப்ரவரி முதலாம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டேன். இ.தொ.காவின் சட்டவிதிகளுக்கமைய இப்பதவியை ஏற்கும் ஒருவர் சம்பளம் பெறும் ஒருவர் மட்டுமே என்பதுடன் அவர் நிறைவேற்று சபையிலும் தேசிய சபையிலும் அலுவலகக் குழுவிலும் உறுப்பினராக இருப்பார். இன்னுமொரு சட்டம் இவ்வாறு கூறுகிறது. 'காங்கிரஸின் நடைமுறை தொடர்பான பொது நிர்வாகம், மற்றும் சட்டவிதிகள் தவறாது கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை தலைவர், பொதுக்காரியதரிசி, நிதிக்காரியதரிசி ஆகியோர் கூட்டாக கணக்காளரின் ஆலோசனையுடன் மேற்பார்வை செய்வர்.

நான் கடமையை ஏற்றுக்கொண்ட சில காலத்தின் பின் நுவரெலியாவிலுள்ள இல.10, லேடி மக்கலம்ஸ் டைவ்கிலுள்ள இடத்தை ரூபா ஒன்பதரை லட்சத்துக்கு இ.தொ.கா. கொள்வனவு செய்தது. தொண்டமானின் பெயரிலேயே இதற்கான உறுதிப்பத்திரம் எழுதப்பட்டது. இதற்கான காரணமாக இலங்கைத் தொழிற்சங்கச் சட்டத்தின் 138வது அத்தியாயத்தின் 44வது பிரிவின் படி அனுமதிக்கப்பட்ட உயர் மட்ட அளவிற்கு சொத்துக்களை இ.தொ.கா. கொண்டிருப்பதால் இதற்கு மேல் காங்கிரஸின் பெயருக்கு சொத்துக்கள் வாங்க முடியாது என்றும் அதனாலேயே தொண்டமானின் பெயரில் உறுதிப்பத்திரம் எழுதப்பட்டதாகவும் அப்போது கூறப்பட்டது.

நான் கணக்காளராக இருந்த காலத்தில் பின்வரும் சொத்துக்களும் வாங்கப்பட்டன. ஹட்டனில் இல.217, டிம்புள்ள வீதியிலுள்ள இடம் ஏழரை லட்சத்துக்கும், பண்டாரவளை எலட்தோட்டத்தில் உள்ள இடம் மூன்றரை லட்சத்துக்கும், 72, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையிலுள்ள இடம் 406,780 ரூபாய்க்கு 4.5.1988இலும் வாங்கப்பட்டன.

உயர்மட்ட சட்ட ஆலோசகருடனான சட்ட ஆலோசனையின் பின் யூலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நீங்கள் முன்பு குறிப்பிட்ட காரணம் பிழையானது என உங்களுக்கு குறிப்பு ஒன்றை நான் ஒப்படைத்திருந்தேன். அத்துடன் திருத்தப்பட்ட உறுதி முடிப்பு மூலமாக இல.10 லேடி மக்கலம்ஸ் என்ற இடத்தை காங்கிரஸின் பெயருக்கு மாற்ற முடியும் என சட்ட ஆலோசகர் கூறியதை அக்குறிப்பில் குறிப்பிட்டு அவ்வாறு செய்யும்படி கோரியிருந்தேன். ஆனால் எனது குறிப்புக்கு எந்தவிதமான நடவடிக்கையையும் நீங்கள் எடுக்கவில்லை. இதனால் 15.12.1988இல் நான் ராஜினாமா செய்வதற்கு முன்பு 12.11.1988 இல் முன்னறிவிப்பு கொடுத்தபிறகு நான் உத்தியோகபூர்வமாக எனது பொறுப்பில் இருந்த ஆவணங்களையும் அலுவலகப் பொருட்களையும் ஒப்படைத்தேன். அப்பொழுதும் கூட நான் அக்குறிப்பை எழுதினேன். 'நுவரெலியாக் கட்டிடம் தொண்டமானின் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. இதை இ.தொ.காவின் பெயருக்கு மாற்றும் நடவடிக்கை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது'. இக்குறிப்பை என்னிடம் இருந்து பொறுப்பேற்க, நீங்கள் அதிகாரம் வழங்கி இருந்த, திரு.எஸ்.லோகநாதனுக்குப் பதிலாகக் கடமை செய்து வந்த திரு.எ.கணேஷிடம் ஒப்படைத்தேன். (இவர் மில்கோ கணக்காளராக அந்த நேரத்தில் இருந்தவர்.)

இ.தொ.காவின் இல.72 ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை தலைமையகம் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. 1978ம் ஆண்டிலிருந்து இந்த இடத்தின் மீது இரண்டு வழக்குகள் இருந்தன. ஒன்று வெளியேற்றுவதற்கான வழக்கு. மற்றையது சொத்து சம்பந்தமான உரிமைகோரும் வழக்கு. இவ்விரண்டு நீதிமன்ற வழக்குகளும் முடிவுறாமல் இருந்தன.

எனது முயற்சியின் பேரில் திரு. ஜே.பெரிசுந்தரத்தின் (சட்டத்தரணி, இ.தொ.காவின் முன்னாள் உபதலைவர்)ஆதரவுடன் 72.ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையிலுள்ள இடம் வாங்கியதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. 4.5.1988இல் ஆவணத்தை மாற்றும்படி, 10.12.87 திகதி இடப்பட்ட மாவட்ட நீதிமன்றில் தீர்ப்பின் அனுமதியுடன் இக்கொள்வனவு திருப்திகரமாக முடிவுற்றது.

1988 செம்ரெம்பரில் திரு.ஜே.பெரிசுந்தரம் ராஜினாமாச் செய்தார். 17.9.88 திகதியிடப்பட்ட அவரது ராஜினாமாக் கடிதத்தில் அவர் பின்வருமாறு கூறி இருந்தார். ''பிழையான வழிகளில் வந்து குவியும் நிதி நன்கொடைகளால் வரையறையற்ற பெரும் சொத்துக்கள் சேர்வதும், தேவையில்லாத செலவு செய்யும் தலைமைத்துவத்தில் உள்ளவர்களது ஊதாரித்தனமும் அதிகரித்து வருகின்றன. இ.தொ.கா. ஒரு தொழிலாளர் அமைப்பா அல்லது வியாபாரிகளின் அமைப்பா என ஒருவர் ஆச்சரியப்படுமளவுக்கு நிலைமை வளர்ந்துள்ளது.

நிதிக்கணக்குகள் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்பட்டும், தலைமையிலுள்ளவர் உட்பட அனைவருக்கும் நிதி தொடர்பான கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இந்த மாதிரியான துயரமான நிலைமை உருவாகியிருக்க வாய்ப்பே இல்லை.

இ.தொ.காவின் முன்னாள் கணக்காளர் இ. தம்பிராஜா

நன்கொடைகளின் வரவின் அதிகரிப்பானது இ.தொ.காவை நோக்கி சந்தேகத்திற்கிடமான பின்னணிகளையும் நோக்கங்களையும் கொண்ட பல்வேறு மட்டங்களிலுமுள்ள நபர்களை கவரத் தொடங்கியுள்ளது. இவ்வாறு வந்தவர்கள் தலைமைத்துவத்திலுள்ளவர்களது போலிப் புகழ் நாட்டத்தை பயன்படுத்தி தீய சூழ்ச்சியாலும், நாட்டின் அரசியல் நிலைமை பற்றியோ, ஏற்படும் செலவுகள் பற்றியோ அக்கறை அற்று அடிக்கடி செய்யப்படும் பிரபல்யப்படுத்தும் செயல்கள் மூலமாகவும் தமது செல்வத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். இதைத் தொடர விடுவோமானால் அவர்களுடைய உற்றார் உறவினர்கள் ஆதரவாளர்கள் ' ஆகியோரைக் கொண்ட சிறிய குழுவின் தனிப்பட்ட நலன்களுக்காக, தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பையும் நலனையும் கவனிக்கும் ஒரு தொழிற்சங்கமாக அல்லாமல் அவர்களைச் சுரண்டும் அமைப்பாக விரைவிலேயே உருமாற்றம் பெற்றுவிடும்.

72, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையிலுள்ள இடத்தை வாங்கிய பிறகு, அதில் ஒரு ஆறு மாடி கட்டிடத்தை கட்டுவதற்காக, இருந்த கட்டிடத்தை உடைக்க வேண்டுமென பிடிவாதமாக இருந்தீர்கள். உங்கள் இந்தப் பிடிவாதமான தீர்மானத்தினால் தோட்டத் தொழிலாளர்களின் மேல் அக்கறை கொண்டிருந்த பல நேர்மையாளர்களது ஆலோசனைகளைப் புறக்கணித்தீர்கள்.

இதன்பிறகு கட்டிட நிர்மணத்தை யாவது அதைச் செய்வதற்கேற்ற நியம நடைமுறையில் செய்வதற்காக உங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் நீங்கள் இவற்றைப் புறக்கணித்து உங்களது சொந்த வழியில் செயற்பட்டதுடன் சர்ச்சைக்குரிய ஒரு கட்டிட நிறுவனத்திடம் நிர்மாண வேலையையும் ஒப்படைத்தீர்கள்.

சாதாரணமாக ஒரு ஆறு மாடிக் கட்டிடமானது 18-24 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது ஆறுவருடங்கள் முடியும் தறுவாயிலும் நிறைவு பெறாத ஒரு நான்கு மாடிக் கட்டிடமாக அது உள்ளது.

நீங்கள் இன்னும் ஒருபடி மேலே போய், காணியையும் கட்டிடத்தையும் உங்களால் ஒருபோதும் மீட்க முடியாது என்பது தெரிந்து கொண்டே அடமானம் வைத்துள்ளீர்கள். காங்கிரஸின் பிரதான அலுவலகர்களான பொதுக்காரியதரிசி, நிதிக் காரியதரிசி ஆகியோர் இதையெல்லாம் நன்றாக அறிந்திருந்தும், நீங்கள் செய்கின்ற மடத்தனமான செயலை அறியாமையால் அல்ல, தெரிந்து கொண்டே உங்களுக்கு தொடர்ந்தும் ''ஆமாம்' போடும் மனிதர்களாகவே இருக்க விருப்பியதால் ஏற்றுக் கொண்டனர். நான் அதற்குத் தயாராக இருக்கவுமில்லை, அப்படி இருப்பதற்கான எந்தக் காரணமும் கூட எனக்கு இல்லை. எனது இராஜினாமா கடிதத்தில் உள்ளவற்றில் குறிப்பாக இரண்டு விடயங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவையாவன;

''துஷ்பிரயோகம், மேலதிகப் பற்று, பிழையான நடைமுறை சில வேளைகளில் சட்ட விரோத வழிகளில் பணம் தருமாறு கோருவது (இவற்றில் பலவற்றை நீங்கள் அறிவீர்கள்) போன்ற எனது 36 ஆண்டு கால பொது சேவையில் நான் காணாத நடைமுறைகள் இ.தொ.காவிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தின.

18.7.88, 27.7.88, 1.8.88, 12.9.88, 21.9.88, 11.10.88, 27.10.88 ஆகிய திகதிகளில் நான் எழுதிய அறிக்கையில் . இவை குறிப்பிடப்பட்டிருந்தும், இவற்றைப் புறக்கணித்து நீங்கள் உங்கள் முடிவுகளில் உறுதியாக இருந்தீர்கள். என்னுடைய விபரங்களடங்கிய 16.9.88 திகதியிடப்பட்ட அறிக்கையையும் புறக்கணித்து நீங்கம் இட்மா ஹவுசிங் டெவலப்பேர்ஸ் நிறுவனத்திற்கே கட்டிட வேலைகளை வழங்கினீர்கள்.

''நீங்கள் எடுத்த முடிவுகளுடன் என்னால் உடன்படமுடியவில்லை எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூபா 50 மில்லியன் பெறுமதி வாய்ந்த பல ஆண்டுகளுக்கு கடன் சுமையை வழங்கக்கூடிய ஒரு விடயம் என்ற படியால் தலைவர் என்ற முறையில் உங்களையும் இ.தொ. காவையும் பாதுகாக்க வேண்டுமென்ற உத்தியோகபூர்வ கடமை எனக்கு உண்டு.

இந்தப் பாரிய கட்டிடத் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விதத்தைப் பார்க்கையில் அழிவு தரக்கூடிய விடயங்கள் தொடரக் கூடும் என்கிற நியாயமான பயம் எனக்கு எழுகிறது. எனவே இது தொடர்பாக இப்போதே உங்களுக்கு எனது ஆலோசனையை நான் சொல்லாது விட்டால் அது எனது கடமையிலிருந்து நான் தவறியதாக அர்த்தப்படும்''

உங்களுக்கு பத்திரிகையாளர்களுடன் நல்ல உறவு உண்டு. உங்களுக்கு ஒரு முடி சூடா மன்னர் என்றும் தோட்டத் தொழிலாளர்களின் விசுவாசமான தன்னகரில்லாத தலைவன் என்றும் உங்களுக்கு அவர்கள் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளனர். எல்லோரும் உங்களுக்கு 4 லட்சம் உறுப்பினர்கள் உள்ளதாகவும் உங்களிடம் 1 மில்லியன் வாக்குகள் இருப்பதாகவும் நீங்கள் கூறுவதை நம்புகின்றனர். இந்தப் புரட்டல் கதையை உண்மை விபரங்கள் தெளிவாக்க வல்லன' என்பதால் உண்மை விபரங்களை நான் தருகிறேன். 1981 முதல் 1988 வரையான சராசரி அங்கத்தவர் தொகை வருமாறு:

1981/82- 160,000
82/83: 159,000
1983/84: 152100
1984/85 : 153,300
1985/86: 135,300
1986/87: 146,800
1987/88: 164,300

தொடக்கத்திலேயே குறிப்பிட்டது போல 'எனது மக்கள்' என்று நீங்கள் அழைக்கும் இந்த மக்களது நலன்களின் அடிப்படையில், அவர்கள் தம்மை உங்களது இடுக்கிப்பிடியிலிருந்து விடுவிக்கவும் தமக்கு உரித்தான சொத்துக்களையும் பணத்தையும் காலம் கடந்து விடமுன் பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென்பதற்காகவே இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொண்டமான் 'புனித'ரான கதை !

- தர்மரட்ணம்




தமது கடந்த கால ஊழல்களை மறைப்பதற்கும், தொடர்ந்து பலம் வாய்ந்த ஒரு அமைச்சராக இருப்பதற்கும், வருங்காலத்திலும் தனது வாரிசுகள் கோடிக்கணக்காகச் சம்பாதிப்பதற்கும். பொ.ஐ.முயில் தொண்டமான் இணைய மேற்கொண்ட முயற்சிகளுக்கு பல முட்டுக்கட்டைகள் ஏற்படாமல் இல்லை.

முதலாவதாக பா.தேர்தலின் முன்னர் பல இ.தொ.கா. முக்கியஸ்தர்களும் அதை ஆதரிக்கும் பல வர்த்தகப் பிரமுகர்களும், சிங்களப் பகுதிகளில் பொ.ஐ.மு. அலை வீசுகிறது எனவே இ.தொ.கா. தனித்தே போட்டியிட வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். எனினும் தன் கைவசம் தொண்டாவின் பல ஊழல் விசயங்கள் உள்ளதால் இ.தொ.கா. தன்னை விட்டு அசைய முடியாது என ஐ.தே.கவுக்கு தெரிந்திருந்து. பெரும் ஊழல்களில் ஈடுபட்ட தொண்டாவிற்கு நெருக்கமான சிலரே இ.தொ.கா. ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட வேண்டுமென்பதில் தீவிரமாக நிற்கின்றனர். என்ற குற்றச் சாட்டும் சில இ.தொ.கா.பிரமுகர்களால் அந்நேரத்தில் முன்வைக்கப்பட்டது.

பலம் பொருந்திய இந்திய சமுதாயப் பேரவையின் வர்த்தகப் பிரமுகர்களும் இ.தொ.கா தனித்தியங்க வேண்டுமென்பதில் அக்கறையாக இருந்தனர். அவர்கள் கொழும்பு வர்த்தகர் வட்டம் என்ற ஒரு அமைப்பின் பெயரில் பொதுத் தேர்தலின் முன் சந்திரிகாவிற்கு ஹோட்டல் தப்ரபேனில் விருந்து கொடுத்து தம் நல்லெண்ணத்தை தெரியப்படுத்திக் கொண்டனர். வீரகேசரி இயக்குனர் சபை கூட இ.தொ.கா. தனித்து இயங்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இப் பின்னணியில் தான் தொண்டா ஐ.தே.கவுடன் ஒரு உடன்படிக்கையை உண்டாக்கினார். ஜுலை 6இல் தொண்டமான் விஜேதுங்கவும் இதில் கைச்சாத்திட்டனர். இவ் உடன்படிக்கையின் சரத்து 11 இன்படி ''பாராளுமன்றத்தில் ஐ.தே.கவும், இ.தொ.காவும் ஒரு குழுவாக இயங்கினாலும் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இரு கட்சிகளும் தமது தனித்துவத்தை பேணலாம். அத்துடன் அத்தனித்துவம் சபாநாயகரினாலும் அங்கீகரிக்கப்படும். இரு கட்சிகளும் ஐ.தே.கவின் பட்டியலிலேயே போட்டியிட்டிருந்தாலும் குறிப்பிட்ட எந்தவொரு விடயத்திலும் பாராளுமன்றத்தில் அவை வெவ்வேறாக செயல்படலாம்.''

எனினும் இந்த உடன்படிக்கையில் ஐ.தே.கவில் சட்ட நிபுனரான சொக்ஸீயினால் சேர்க்கப்பட்ட 10வது சரத்து 'ஐ.தே.கவும், இ.தொ.காவும் ஒன்றையொன்று நேரடியாகவோ/ மறைமுகமாகவோ பாதிக்காத வகையிலேயே இரு கட்சிகளும் செயற்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இது சரத்து 11 வின் நோக்கத்தை முறியடிப்பதாக அமைந்தது.

எனினும் தேர்தல் முடிந்த கையோடு எப்படியாவது பொ.ஐ.மு. அரசில் இணைந்து விட வேண்டும் நாம் என தொண்டாவும் அவருடைய ஆட்களும் முண்டியடித்துக் கொண்டு புறப்பட்ட போது தாம் மேற்படி ஒப்பந்தத்தின் சரத்து 11 அவைப் பயன்படுத்தி சுலபமாக ஆளுங்கட்சியில் சேர்ந்து விடலாம் என நம்பினர்.

ஜி.எல்.பீரீஸுடன் நடந்த பேச்சுவார்த்தையில் இணைவதற்கு இந்த சரத்து மட்டும் போதாது, இன்னும் பலமான ஒரு அடித்தளம் வேண்டுமென்றும் தொண்டாவிற்குக் கூறப்பட்டது. இதை முன்னிட்டு ஒப்பந்தத்தை உறுதி செய்யும் வகையிலான ஐ.தே.க. பொதுக் காரியதரியினால் கைச்சாத்டப்பட்ட சபாநாயகருக்கான கடிதம் ஒன்றை தொண்டா ஐ.தே.கவிடம் பெற்றுக் கொண்டார். இதன் பின்னரும் பேச்சவார்த்தையில் இழுபறி நிலை காணப்பட்டது. (தொண்டா மகனின் சத்திரசிகிச்சைக்காக பெங்களூர் சென்றிருந்த காலத்தில் பேச்சவார்த்தைகளை கந்தசாமி நாயுடுவே கவனித்து வந்தார்) இழுபறிக்கு முக்கிய காரணங்கள்;

1. சந்திரசேகரனை நீண்ட காலத்தில் பொ.ஐ.முவின் நேசக்கரமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கருத்து பொ.ஐ.முவின் பல மட்டங்களிலும் காணப்பட்டது. சந்திரிகாவும் இக்கருத்தை பொ.ஐ.முவினுள் வலியுறுத்தியிருந்தார்.

2. தொண்டமான் தான் இணைவதானால் பெருந்தெருக்கள் அல்லது நீர்பாசன மின்சக்தி அல்லது புடவைக் கிராமிய கைத்தொழில் அமைச்சுகளில் ஒன்றைத் தனக்குத் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருந்தார். இவ்வமைச்சுகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ, இதற்கு உடன்பட்டு இராஜினிமா செய்வதாக இல்லை.

3. தொண்டமான் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இணைந்தால் அது, ஐ.தே.கவை ஒரு இனவாத நிலைப்பாட்டுக்கு தள்ளிவிடும் என்றும், சிறுபான்மை கட்சிகள் எல்லாம் சேர்ந்து பொ.ஐ.மு. இந்த முண்டு கொடுக்கின்றன என்ற ஒரு கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவித்துவிடும் எனவும் கருதப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சு கொடுப்பது தொடர்பாக, ஓரிரு முறை பொ.ஐ.மு. சார்பில் இந்தப் பேச்சுகளில் ஈடுபட்ட நீலன், தோட்டத் துறை நலன்புரி அமைச்சு ஒன்றை உருவாக்கி தொண்டாவிற்கு கொடுக்கலாம் என்ற அபிப்பிராயத்தை முன்வைத்தார்.

இதனிடையில் தொண்டமானுக்கு ஒருவிடயம் தெரியவந்தது. அதாவது சந்திரசேகரனுக்கு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்காக ஏராளமான நிதியும், மற்றும் வாகன பிரச்சார வசதிகளும் பொ.ஐ.முவினால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதே அதுவாகும். அத்துடன் தொண்டமான் வந்ததாலும் வராவிட்டாலும் மலையக வாக்குகள் எங்களுக்கே கிடைக்கும் எனவும், எனவே சந்திரசேகரனை எம்முடன் உறுதியாக வைத்திருக்க வேண்டும் என்றும் பொ.ஐ.முவினுள் பலமான கருத்து நிலவுவதை அறிந்து கலவரமடைந்த தொண்டமான் தமக்கேயுரிய ஒரு தந்திரோபாய முயற்சியில் இறங்கினார். சந்திரிசேகரனை இ.தொ.காவுடன் இணைத்து விட்டால் பொ.ஐ.முவில் தான் சேருவதற்கு எந்தத் தடையுமில்லாமல் இருக்கும் என்பது அவருடைய எண்ணம். எனவே சந்திரசேகரனுக்கு கந்தசாமியூடாக தூது விடப்பட்டது. இணைந்தால் சந்திரசேகரனை இ.தொ.காவின் பொதுக் காரியதரிசி ஆக்கலாம் என்றும், அதன் பின் தொண்டமாவிற்கு இணையான அதிகாரங்களைக் கொண்ட பிரதித் தலைவர் பதவி ஒன்றை உருவாக்கித் தரலாம் என்றும் சந்திரசேகரனிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சந்திரசேகரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இதேவேளை, தொண்டமான் பெங்களூருக்கு மகனின் சத்திர சிகிச்சைக்காக சென்றிருந்தார். பொ.ஐ.முவில் சிலர் இ.தொ.காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது காதரையும் வைத்துக் கொண்டே ஈடுபடவேண்டும் என கோரினர். ஆனால் பொ.ஐ.மு, ம.ம.மு, இ.தொ.கா பங்குபற்றுவது என தீர்மானிக்கப்பட்ட கூட்டத்திற்கு கந்தசாமி வரவில்லை. அக்கூட்டத்திற்கு வந்த போதுதான் காதருக்கு இ.தொ.க - பொ.ஐ.மு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்ற உண்மை தெளிவாகத் தெரியவந்தது.

அதன்பிறகு சில நாட்களுக்கு பொ.ஐ.முவுக்கு கந்தசாமியின் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. அதேநேரம், இ.தொ.காவின் ஜி.எல். பீரிசுடனான அமைச்சரவை மட்டப் பேச்சுவார்த்தையில் நடைமுறைச் சிக்கல் ஒன்று இருப்பதாக கூறப்பட்டது. தொண்டமான் ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் பா.உ. எனவே தேசியப் பட்டியலில் இருந்து இலகுவாக அவரை ஐ.தே.க. விலக்கிவிடலாம் என்ற பிரச்சினையே அது. ஆனால் ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதால் தொண்டமான் அமைச்சர் பதவியை ஏற்பது என்றும் மற்றைய பா.உகள் முக்கியமான விஷயங்களில் எதிர்கட்சியில் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. சிலவேளைகளில், ஐ.தே.க. தொண்டமானை விலக்க வழக்கு தாக்கல் செய்யக்கூடுமாயினும் அது ஒரு வருட காலத்திற்கு இழுபடும் என்பதாலும் அதற்குள் புதிய பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றுவிடும் என்பதாலும் இதுபற்றி அக்கறைப்பட வேண்டியதில்லை என இ.தொ.கா. கருதியது: அத்தேர்தலில் பொ.ஐ.முவுடன் இணைந்து மீண்டும் தேர்தலில் நிற்கலாம் என்றும் அது எண்ணியது.

திரும்பவும் அமைச்சரவை மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் வெற்றியை நோக்கி சென்று கொண்டிருந்தன. காமினி இறப்பதற்கு முன்னான வியாழக்கிழமை காலை சந்திரிகா தொண்டமானை சந்தித்தார். அப்பொழுது அமைச்சரவையில் சிக்கல் உள்ளதாகவும், தேர்தல் முடிந்த பின் அமைச்சொன்று தருவதாகவும், ஆனால் நீங்கள் எங்களுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமெனவும் சந்திரிகா கேட்டுக் கொண்டார்.

தனது நுழைவை மேலும் சட்டபூர்வமாக்க தொண்டமான் இன்னுமொரு வேலையில் ஈடுபட்டார். வெள்ளி அதிகாலை ஐ.தே.கவுடான தேர்தல் உடன்படிக்கையில் மேலதிக திருத்தமொன்று இ.தொ.காவின் சட்ட ஆலோசகரால் வரையப்பட்டு, அது காமினிக்கு அனுப்பப்பட்டது. அதில் ஐ.தே.கவின் பொதுக்காரியதரிசியின் கையொப்பம் வைத்து, ஞாயிற்றுக்கிழமைக்கு முதல் தரவேண்டும் என்றும் இல்லாவிடில் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவை ஆதரிப்பதில்லை என முடிவெடுக்கப் போவதாகவும் இ.தொ.கா. காமினிக்கு கூறியது. வெள்ளி காலை, இ.தொ.காவின் அரசியற்குழு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முடிவெடுக்க கூடியது. ஆனால் முடிவொன்றும் எடுக்காமல் மீண்டும் மாலை கூடியது. அப்பொழுது தொண்டாவுக்கு அமைச்சர் பதவி கொடுத்தால் பொ.ஐ.முவை ஆதரிப்பதாகவும், அல்லது கைவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை அத்திருத்த உடன்படிக்கையில் இ.தொ.கா. விதித்த காலக்கெடுவிற்க்கு முன்னரே காமினி, ஐ.தே.க. பொதுக்காரியதரிசியின் கையொப்பம் வாங்கி திருத்தச் சரத்தை திருப்பி அனுப்பி விட்டார். ஆனால் திருப்பியனுப்பிய ஆவணத்தில் காமினி ஒரு பத்தியை இணைத்திருந்தார். ''கடந்த பல வருடங்களாக தொடர்ந்த இ.தொ.கா, ஐ.தே.க உறவு இதனால் பலப்படுத்தப்படும் எனக் கருதுகிறேன்'' என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த புதிய பத்தியானது தொண்டமானின் திருத்த ஷரத்தின் நோக்கத்தின் அடிப்படையையே முறியடிக்கக் கூடியதாகவும் அதனால் தொண்டா பொ.ஐ.மு. அமைச்சரவையில் இணைவதற்கான சட்ட அடிப்படையை மறுதலிப்பதாகவும் அமைந்திருந்தது.

ஆனால் ஞாயிறு நடுநிசி காமினி படுகொலை செய்யப்பட்டு மரணமானார். அடுத்து வந்த ஞாயிற்றுக்கிழமை தொண்டமான் அமைச்சரானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மலையக அரசியலில், சமூக, கலாசார அமைப்புகள் -10

### மலையக இளைஞர் முன்னணி:-

மலையகத்தில் கல்விகற்றவர்கள் எண்ணிக்கை ஓரளவு பெருகியது. இவர்கள் இலங்கையில் வாழ்கின்ற மற்ற சமூகங்களோடு மலையக சமூகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து அதன் அவலநிலையை எண்ணி ஏங்கினர். இவர்களின் ஏக்கத்திற்கு ஈடு கொடுக்க மலையக அமைப்புகள் எதுவுமே முன்வரவில்லை. இந்த இளைஞர்களின் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள எவ்வித மார்க்கமும் இல்லாமல் அலை மோதினர்.

மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை இல்லை. அது அவர்களின் வாழ்க்கையில் தொழில் உரிமையைப் பாதித்தது. இலங்கையின் அரசியல்வாதிகளும், அரசாங்கமும் அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை, இவர்களின் நல்வாழ்வைப்பற்றி சிந்திக்கவே எவரும் முன்வரவில்லை. தொழிற்சங்கங்கள், தொழிற் தகராறுகளை மாத திரம் தீர்த்து வைப்பதில் கருத்தைச் செலுத்தின. மலையக மக்களின் சமூக நலன்களைப்பற்றி தங்களுக்கு சிந்திக்கவே நேரமில்லாதது போல் நடந்து கொண்டன.

மலையக மக்களின் சமூகநலன்களை, அவர்களின் நல்வாழ்வினை மனதில் கொண்டு 1969இல் கல்விகற்ற இளைஞர்கள் திரு.இரா.சிவலிங்கம் தலைமையில் ''மலையக இளைஞர் முன்னணி'' என்ற அமைப்பினை அமைத்தனர். இவருடன் இணைந்து திருவாளர்கள் பி.எஸ்.திருச்செந்தூரன், எஸ். கிருஷ்ணன், பாரதி இராமசாமி, எம்.வாமதேவன், பி.மரியதாஸ், தாயுமானவர், பிலிப் ராமையா, வி.ரி.தர்மலிங்கம், சற்குருநாதன், எம்.ஆர்.முருகேசு,எஸ்.கணேசன்-எஸ்.குலசேகரம், எஸ்.நாகமணி, எச்.எச்.விக்கிரமசிங்க(செல்வா) ஆகியோர் அணிதிரண்டனர்.

இரா.சிவலிங்கம் மலையக சமூகத்தைச் சேர்ந்தவர்களுள், கல்விகற்ற இளைஞர்களின் செல்வாக்கினைப் பெற்ற முன்னோடியாவார். மக்கள் மீது பற்றுக் கொண்டு சோஷலிசக் கருத்துக்களை ஏற்று வளர்த்து வந்தார். இந்தியாவில் கலைமாமணிப் பட்டம் (M.A) பெற்ற ஆசிரியராக ஹட்டன் ஹைலேண்ட்ஸ் கல்லூரியில் கடமையாற்றினார். இவரிடம் பயின்ற மாணவர்கள் சமூகப்பற்று, அரசியல் சிந்தனையுடன் வெளியேறினர். கல்விகற்றவர்களாக, பட்டதாரிகளாக மலையகத்தில் வாழும்பலர் திகழ வேண்டும், கல்வி ஒன்றே மக்களை சிந்திக்கத் தூண்டும், அதுவே மலையக சமூக உயர்வுக்கு வழி'' என்ற எண்ணத்தை மாணவரிடம் உருவாக்கி, அந்த இலட்சியத்தை நிறைவேற்ற துணிவையும் கொடுத்தார். இம்மாணவர் தன்னம்பிக்கையுடன் சமுதாயத்தில் நடமாடத் தொடங்கினர்.

இவரின் சமூக ஈடுபாடு மாணவ பருவத்தைக் கடந்த இளைஞர் மத்தியிலும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியது, தோட்டங்களில் செயல்பட்டு வந்த மன்றங்கள் தாங்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் முக்கிய பேச்சாளராக இவரை அழைத்தன. இவரின் எழுச்சிமிகு பேச்சு, இளைஞர்களைத் தட்டி எழுப்பியது. கருத்து அனைவரையும் கவர்ந்தது.

''மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர்'' சங்கத்தை விட்டு வெளியேறிய பின் தேசிய அரசியலில் ஈடுபடும் சந்தர்ப்பம் இருவக்குக் கிடைத்தது. 1964ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்திற்கு நடந்த பொதுத் தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வெற்றிக்காக பிரச்சாரம் செய்யும் முகமாக அரசியல் மேடைகளில் தனது கருத்துக்களைத் தெளிவுபடுத்தினார். இத் தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணி தோல்வியடைந்தது. இவர் அரசியலில் நேரடியாகப் பங்கு பற்றியதால் ஆட்சியாளரினால் பழி வாங்கப்பட்டார்.

## அன்றே இரா.சிவலிங்கத்தைப் பழிவாங்கிய இ.தொ.கா.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கையின் தொழிற்சங்கத் துறையில் மாபெரும் சக்திவாய்ந்த அமைப்பாக வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் அது மலையக சமூக முன்னேற்றத்திற்கு தனது பங்களிப்பினைச் செய்யவில்லை என்ற கருத்தினை மக்கள் முன்வைத்தார். இந்த விமர்சனத்தை ஏற்றுக் கொள்ள முடியாத காங்கிரஸ், ஆட்சியாளர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவரது ஆசிரியர் தொழிலில் கைவைத்தது. விசாரணைக்கு முகம் கொடுத்தார். தனிப்பட்ட வாழ்க்கையில் துயரத்திற்கு ஆளாகினார். விசாரணை இவருக்குப் பாதகமாக அமைந்ததினால் தொழிலிருந்து விலக்கப்பட்டார். இ.தொ.காங்கிரஸின் செயல்களை விமர்சனம் செய்பவர்களைப் பழி வாங்கும் எண்ணம் ஏற்கனவே இவர்களுக்கு இருந்தது. தங்கள் அரசியல் செல்வாக்கைப் பாவிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததும் அதனைப் பயன்படுத்தி இரா.சிவலிங்கத்தைப் பழிவாங்கினர்; இவருடன் தங்களின் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்தனர்.

### வி.ரி.தர்மலிங்கம்

பல துறைகளிலும் திறமை வாய்ந்த இரா.சிவலிங்கம் ''இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம்'' என்ற தொழிற்சங்கத்தில் பணிபுரிந்தார். இதில் சிறப்பாகப் பணிபுரிந்த தன் மூலம் தோட்டச் சேவையாளர் மத்தியில் செல்வாக்குப் பெற்றார். சட்டத்தரணியாகும் வாய்ப்பினையும் பெற்றார். இலங்கைத் தேசிய அரசியலில் தொடர்பினை மேலும் அதிகரித்துக் கொண்டார்.

இலங்கையில், மற்றச் சமூகங்களெல்லாம் அரசியல் தொடர்பினை வைத்துக் கொண்டு, பலதுறைகளிலும் முன்னேறியபோது, மலையக மக்கள் மாத்திரம் பலவழிகளிலும் பாதிக்கப்பட்டவர்களாக வாழ்ந்தனர். மிகவும் குறைந்த வருமானம் பெற்று பற்றாக்குறை வாழ்கை நடத்தினர். கல்வியில்.மிகவும் பின்தங்கியவர்களாக இருந்தனர். தங்களின் தேவைகளுக்கு குரல் எழுப்ப முடியாத வாய்மூடி மௌனிகளாக வாழ்ந்தனர். அநீதிகளைத் தட்டிக் கேட்க துணிவில்லாதவர்களாக இருந்தனர். மற்றவர்கள் உயர ஏணியாகப் பயன்படுத் தப்பட்டனர். இதனால் அரசியல் விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனேயே ''மலையக இளைஞர் முன்னணி''யின் தலைமையை ஏற்க முன் வந்தார்.

மலையக மக்கள் தமது பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும், அரசியல்ரீதியாகச் சிந்தித்து, போராடித் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் மக்களைத் தயார்படுத்தும் செயற்திட்டங்களுடன் இம்முன்னணி செயல்பட்டது. இலங்கை தேசிய அரசியல் அமைப்புகளினூடாக மலையக மக்களின் பிரச்சினைகளை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு செயல்பட்டது. இச்சமூகத்திற்குப் பல பிரச்சினைகள் இருந்த போதிலும், குறிப்பிட்ட சில பிரச்சினைகளில் மாத்திரம் பிரதான கவனம் செலுத்தியது. இலங்கையில் பிறந்த அனைவர்க்கும் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும். மலையகத்தின் கல்விநிலை உயர்த்தப்படல் வேண்டும். படித்த இளைஞர்களுக்கு அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து செயல்பட்டது. ''உரிமைக்குக் குரல் கொடுப்போம் உறவுக்குக் கை கொடுப்போம்'' என்ற கோஷங்களுடன், மலையக மக்களுக்கு அநீதி இழைத்துவிட்ட ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம் என மேடைகளில் மிகவும் உறுதியாக திரு. இரா. சிவலிங்கம் முழக்கமிட்டார். அதையே மலையக இளைஞர்கள் தாரக மந்திரமாகக் கொண்டு தோட்டங்களில் பிரசாரம் செய்தனர். மலையக மக்கள் இலங்கையில் வாழும் தேசிய இனங்களுடன் சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர் என்பதை இவரின் செயல்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினுடைய அரசியல் கொள்கையின் வங்குரோத்தை மக்கள் மத்தியில் இம் முன்னணி வெட்ட வெளிச்சமாக்கியது. மலையக மக்கள் தேசிய அரசியலோடு சேர்ந்து செயல்படவும், பிற்போக்கு அரசியல் கொள்கைகளை எதிர்த்து இயங்கவும் ஒரு அரசியல் பரம்பரையையே இரா.சிவலிங்கம் ''மலையக இளைஞர் முன்னணி'' மூலம் வளர்த்தெடுத்தார். மலையக இளைஞர்களுக்கு தன்னம்பிகையையும், அரசியல் தெளிவையும், பிரச்சினைகளை வெளிக் கொண்டு வரக்கூடிய துணிவையும் இம்முன்னணி உருவாக்கியது.

- வரும்.

## நிர்ப்பந்தம்

1994 ஒக்.30ந் திகதியுடன் முஸ்லீம்கள் வடக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்டு நான்கு வருடங்களாகின்றன.

-எம்.ஐ.எம். ஜாபிர்-

குவிந்துக் கொண்டிருந்ததாக்கும்
நிலவு.
எழவே இல்லை.
எனினும் போகச் சொன்னார்கள்
அந்த நன்றி மறந்தவர்கள்.
பதறினோம், பின்
சலாரென வெறிக்கத் தொடங்கிற்று
வெஞ்சினம்.
நடந்தோம்.
காடுகள், வயல்கள், வனாந்தரங்களென.
தெற்காகவும் நடந்தோம்
எல்லையை கடக்கும் வரையிலும் தான்.
தொண்டையை இழந்து
தொங்கியவைகளையுமிழந்து.
இனியென்ன...
எங்களுக்கென்றொரு
கௌரவமிருந்தது.
தனி தைரியமிருந்தது.
சட்டிகள், பானைகள், அடுப்புகளென
புகைத்து, அவர்களுக்கென்றே.....
ஆக்கிப் போட்டு வளர்த்ததால்
ஒத்துழைத்ததால்.
மாடுகள் மார்பை குத்தவில்லை
மனிதர்கள் குத்தினர்.
அவர்கள் மனங்களைப் போலவே
நீண்டு கிடந்திற்று
இருட்டு.
அந்த சாமத்திலும்
அன்னியக் கண்களை
தாராளமாகவே திறந்தே விட்டனர்
அடக்க முயன்றனர்,
அகதிகளாக்கினர்.
தோல்வியும் எங்களுக்குத்தான்
ஆனால்
நிரந்தரமானதல்ல.
அவர்களுக்கென்ன...
"போரில் வெல்லத்தானே வேணும்..."
பேசட்டும்,
அறிக்கைகள் விடட்டும்.
சமாதானம் பற்றி அல்லது
தனித் தமிழ் ஈழத் தாயகத்தின்
நிச்சயத்துவம் பற்றி.
இன்னமும்தான்
கசியத் தொடங்குகிறதே
துயர்.
சொந்த நிலங்களை விட்டே
ராவோடு ராவாக நாங்கள்
வெளியேற்றப்பட்ட உண்மையின்
கொடுமைகள் பற்றி.
நடுங்கிய ஆத்திரத்தில்
கைகளிரண்டையும் பிசைந்தது பற்றி
தட்டுத் தடுமாறி
விழுந்து கிடந்தே
மணலில் முகம் புதைத்து
நுனி விரல்களால்
செத்தையில் குத்தியது பற்றி.
நிமிர்ந்து ஒரு முறை
மயிரை கோதி விடுகிற போதும்,
நெஞ்சை அழுத்தி
தொட்டுப் பார்க்கிற போதும்
பிடிபடுகிற
ஒவ்வொரு மயிரின் சிலிர்ப்பும், கனதியும்
இனவாதமாய் ஊறத் தொடங்கும் தான்
இனி.
சில மரங்கள் வளருவது போல
சில கொடிகள் படருவது போல
சில புற்கள், பூண்டுகள்
செழித்து வளருவதைப் போல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீண்டும், பரந்தும், திறந்தும் அடைத்தும் .உள்ளதான அந்தத் தனியார் ஹொஸ்பிட்டலில் குறுகலான ஒரு அறையின் பளிங்குத்தரையில் என் கால்களும், முகட்டைப் பார்ப்பதாயும் பார்க்காததாயும் மெத்தை மீது கிடக்கும் இன்னொரு மெத்தையான அவன் மீது மனமும் பின்னிக் கிடந்தன.

சுழன்று கொண்டிருக்கும் 'பே(f)னில்' கூந்தல் கலைந்ததுவோ, நனைந்து முடிந்த கண்களில் வெறிப்பில் நிழல்களின் அசைவுகள் ஓரங்கப் பட்டதுவோ எனக்கு ஞாபகமில்லை. நிசப்தத்தை விழுங்கிக் கொண்டிருந்த அவர்களின் இரைச்சலின் ஊடாக, நான் தனிமைக்குள் புகுந்ததும், பின் வெறுமைக்குள் விழுந்ததும் நிசப்தமாய்ப்த்தான் நடந்தன.

அந்த ஈச்சிலம் பற்றைகளும், அது மறைந்திருக்கும் மணற்திட்டும், இன்னும் அப்படியே அருகிலிருக்கும் நதியின் சத்தமில்லாத ஆவர்த்தனமான அசைவுகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் என்பதை இவன் மறந்திருப்பானா? நான் அளைந்து, பிசைந்து இடையிடையே கையில் கொட்டி விளையாடும் பொருப்பு மணலில் கை கோர்த்தபடி நடப்பதை நிரந்தரமாயே தவிர்ப்பதற்காகவா என்னைப் பிரிந்து சென்றான்.

''சுபா எழும்பு மகள் போவம், பேர்யிற்று நாளைக்கு வருவம். அங்க பாரு வானம் என்னமாய் இருட்டி இருக்குதெண்டு'' யன்னலூடே, பளபளப்பான, அவனின் மூக்கில் விழுந்து தெறித்துக் கொண்டிருந்த கதிர்களைத் திருடிய இருட்டு அம்மாவுக்குச் சாதகமானதாய்ப் போனது. வெளியே சின்னதாய் சிணுங்கும் மழையயக் காட்டி ஒரு புயலையே எழுப்பப் பார்த்த அம்மாவைப் பார்த்துச் சிரிப்பதா இல்லை அழுவதா என்பது முக்கியமில்லையிங்கே.

அம்மா, இரண்டாம் பட்சமாகிப் போனது. அம்மாவுக்கே தெரியாதிருக்கலாம். எத்தனை தூறல்களில் இதோ இங்கே நிமிர்ந்து கிடக்கும் மெத்தை என்னுடன் நனைந்திருக்கும். அப்போதெல்லாம் அம்மா மழையைப் பற்றியோ ரவலைப் பறறியோ அதிகம் அலட்டிக் கொண்டதாய் ஞாபகம் இல்லை.

''பிள்ள எழுமபு மகள் நாளைக்கும் வந்து பார்க்கலாம் தானே எழும்பு வா''

அம்மா என் தோளைத் தொட்டாள். வார்த்தைகளில் வழிக்குள் வராத நிலையில் செய்கை முனைப்பெடுத்தது. அந்த முனைப்பில் முன்பை விட கூடுதலான அழுத்தம்.

அம்மாவின் கையை ஆதாரமாய்ப்பற்றி எழுந்தேன். என் ஆதாரமும் அவதாரமும் இங்கே அநாதரவாய்க் கிடக்கிறது.

''அம்மா! அவரோட ஒருவரும்.....'' நான் இழுத்தேன்.

''அதெல்லாம், நேர்ஸ்மார் பார்த்துக் கொள்ளுவாங்க'' அம்மா மொட்டையாகச் சொன்னாள், வார்த்தைகளுக்குப் பின்னால், விஷம் தடவிய அம்பு துளைத்தது போலவும், முகம் தெரியா ஆசான் போதித்தது போலவும் இரு வேறு தோற்றங்கள் பிரசன்னமாகின.

'அதெல்லாம் நேர்ஸ்மார் பார்த்துக் கொள்வாங்கள் என்பதை விறைப்பாகச் சொல்லிக் காயப்படுத்தியதோடு 'இனிமேல் அவன் யாரோ, நாம் யாரோ அவனை யார் வேண்டுமென்றாலும் பார்த்துக் கொள்வார்கள் நீ இதில் சிரமப்பட வேண்டாம்' என்று போதிப்பதாயும் இருந்தது.

இத்தனை சீக்கிரமாய் அம்மா அவனை மறந்துதான் போனாளா? அவன் சாவுடன் கை குலுக்கப் போவதை அறிந்த கணங்களிலேயே அம்மாவும் அவனுடன் பிரியா விடைக்காய் கை குலுக்கிக் கொண்டாள் போலும்.

அம்மா நேர்ஸ்ஸிடம் விடைபெறப் போன அந்த நிமிடங்களில் அவனின் முதல் வருகையை நினைத்துப் பார்த்தேன்.

இப்போது மூக்கு மட்டுமே பளபளப்பதைப் போலல்லாது அவன் முதன் முதலாய் என் வீடு தேடி வந்த வேளை உடம்பு பூராக ஒரு சதைப்பிடிப்புடன் மெருகேறித்தான் இருந்தது. தயங்கியபடியே வாசலில் நின்றவனை ''வாங்க தம்பி, வாங்க'' என்று புளகாங்கிதமாய் முதலில் வரவேற்றது அம்மாதான். முன்பின் அவனைப் பார்த்திரா விட்டாலும் வாசலில் நிறுத்தியிருந்த ''டொயோடா'' காரை வைத்தே அம்மா இனம் கண்டு கொண்டாள். என் காதலனுக்குக் கார் இருப்பது என்னை விட அம்மாவுக்குத்தான் அதிகம் பெருமையாய் இருந்தது.

அன்று மட்டுமென்ன பின்னிட்ட காலங்களிலெல்லாம் தம்பி தம்பி என்று அம்மா காட்டிய அக்கறையில் தாயில்லாத தன்னுடைய குறை நீங்கியதாய் இந்த மெத்தை என்னிடம் அடிக்கடி சொல்லும். நான் பூரித்துப் போகும் அந்த நிமிடங்கள், என் உயிர்ப்பின் ஆரம்ப அமைவிடம் பற்றிய என் பெருமிதங்கள் எல்லாமே இப்போது என்னைக் கூனிக் குறுக வைத்தன.

போன நேரங்களை மறந்து ஒரு நிம்மதிச் சுவாசம்.

''ஓ! என் பூனையே ஒருதரம் கண்ணை விழித்துப் பாரேன். உன்னுடைய எலி விளையாடத் துடிக்கிறது. பாரேன், இதோ உனக்கு அருகிலேயே உன் கைகளைப் பற்றியபடியே உன் எலி... விளையாடுவதற்காய்.... பாரேன். முடங்கிக் கிடக்கும் விரல்களை நிமிர்த்தி உன் எலியைப் பிடியேன்'' மனம் ஓலமிட்டது.

''சுபா, கெதியா வா பிள்ள, மழை வந்திட்டுது'' வெளியில் இருந்து வந்த அம்மாவின் கட்டளை சுவர்களில் மோதி, என் மனக்கிலேசங்களை வெளிப்படுத்துதலை தடை செய்தது.

அடுத்த கணமே அவன் பலத்த நோயாளியென்




என்முன்னேயே நான் குறுகி நின்றேன். என் பிறத்தலே வெட்கத்துக்குரியதாகியது. ''அப்ப, பிள்ள நாங்கள் போயிற்று வாறம். தம்பியக் கொஞ்சம் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கோ'' அம்மாதான் சொன்னாள்.

பொய்யின் போர்வையிலிருந்து சடங்காய் சம்பிரதாயமாய் சில நூல்கள் பிரிந்தன; சிதறின; ஒலியாய், குரலாய், மொழியாய் செவிச் சுரங்கத்தினூடு ஒரு கயமை நுழைந்தது. காதைப் பொத்திக் கொள்ளாதது குற்ற உணர்வாய் சுட்டது எனக்கு.

அம்மாவைப் பார்த்தலைத் தவிர்த்தலில் சுவர்களையும், கட்டிலின் கால்களையும் மாறி மாறிப் பார்த்தேன்.

''நான் போயிற்று வரட்டா''

உதடுகள் மெல்லப் பிரிந்து வார்த்தைகளாவதற்குள் எனக்குள் ஏகப்பட்ட பிரளயங்கள்.

நான் சொன்னது எனக்கே கேட்டிருக்காது. இன்னும் உரத்துச் சொன்னாலும் அவனுக்குக் கேட்காது.

ஆனால் இப்பிடித்தான் அவன் நெஞ்சில் முகம் புதைத்தபடியே விடை பெற இப்படித்தான் கேட்பேன்.

'ம்' என்ற ஒற்றைச் சொல்லுடன் என்னைவிடுத்து நான் போகையில் இழுத்துப் பிடிக்கும் பூனை எலி விளையாட்டு சில நிமிடங்கள் நீடிக்கும். அங்கே எலி ஒரு நாளும் வருத்தப்பட்டதும் கிடையாது, பூனை வருத்தப்படுத்தியதும் கிடையாது. சந்தோஷப்படும் எலிகள், எலிகள் எலிகள்.... என் பூனையின் கட்டிலருகே சென்றேன்.குனிந்து, கைகளை என் நெஞ்சோடு சேர்த்து...

''போயிற்று வரட்டா'' என்றேன். கருக்கட்டாத வானமாய் தெளிவான சலனமில்லாத தோற்றம். மரணத்தை எதிர் கொள்ளலில் பயந்து பக்ஷைச் சுட்டுவது போல தலைப்பக்கமாய் குவிந்து கிடக்கும் மருந்துப் போத்தல்களிடமும், ஹோர்லிக்ஸ் போத்தலிடமும் விடை பெற்றுக் கொண்டேன். அவன் விழிக்கும் போது சிலவேளை இவை மட்டும்தான் விழித்திருக்கும் என்ற உண்மையைத் தாங்காமல் தாங்கியவாறே கணணி மனிதனாய் நான் நகரத் தொடங்கினேன். நேர்ஸ்ஸிடம் நான் எதுவுமே சொல்லவில்லை. சொல்வதற்கும் என்ன இருக்கிறது. என் வருகையைப்பற்றி அவனிடம் தெரிவிக்கும்படி சொல்லியிருக்கலாம். அது தெரிந்து, இதற்காக ஒருதரம் பிரத்யேகமாய்க் கவலைப்படுவதில் எனக்கு உடன்பாடில்லை. நேர்ஸ் தானாகவே சொல்லி விட்டால்?...

''சிஸ்டர், நான் வந்து போனதைப்பற்றி அவரிடம் சொல்ல வேண்டாம் ப்ளீஸ்''

நான் சொன்னவை அவளுக்கு வியப்பாயிருந்தது. கண்களில் பின் நோக்கம் அறியும் ஆவல் தெரிந்தும் சாதுரியமாக மறைக்கப்பட்டது, மறைந்து போனது.

அம்மா, போர்டிகோவை விட்டு எப்போதோ இறங்கி குடையை விரித்தபடி எனக்காகக் காத்திருந்தாள். ஹொஸ்பிட்டலில் இருந்து 'பஸ்ஸ்டொப்' வரையும், பஸ்ஸிற்காக காத்திருந்த இடைவெளிகளிலும் அம்மா, எதையோ மறைமுகமாய் உணர்த்துவதற்காக எதையெதையோ எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அம்மாவைத் தாண்டி, அவனின் கட்டிலிலும் அந்த மருந்துப் போத்தல்களிலும், ஈச்சிலம் பற்றை' மணல் மேட்டிலும், பூனை எலி விளையாட்டிலும் மூடிக்கிடக்கும் அவன் இமைகளிலும் மாறி, மாறி அலையும் மனம் இடையிடையே அம்மாவிடம் திரும்பும் போதெல்லாம், நான் அவனைப் பார்ப்பதை இனிமேல் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கசாயம் மெதுவாய் மிக நிதானமாய் எனக்குப் பருக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மனதில் அம்மாவைப் பற்றி ஏலவே விழுந்திருந்த வெடிப்பு இழுவிசைக்குட்படும் கொங்கிறீட் போல விரைவாய் மிக விரைவாய் எனக்குள் பரவத் தொடங்கியது.

அம்மாவுடன் சேர்ந்தாற் போல், ஒரு குடையின் கீழ் நடந்து கொண்டிருந்தது. நனைதலைத் தவிர்ப்பதற்காக நெருப்பில் நடப்பதாய்ப்பட்டது. அம்மாவின் சுவாசம் படும் மேனியெல்லாம் தொழு நோய்க்காரன் தொட்டதான கூச்சத்தில் நெளிந்து கொண்டிருந்தது. மழையைப் பொருட்படுத்தாத மிருகங்களாய் குடையின்றி நனையும் மனிதர்களாய் நானும் நெருப்பை விடுத்து தனிமையில் நடந்தால்தான் அப்போதைக்கு மிகப் பெரிய சந்தோஷம் போல் தோன்றிற்று. வீட்டை அடைந்த போது, சூரியன், கருக்கட்டிக் கறுப்பாய்க் கிடந்த மேகங்களையெல்லாம் இழுத்துக் கொண்டு மேற்கில் சரிந்திருந்தான்.

சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் அவனை பகலுக்கும் இரவுக்கும் இடையிலான அந்தியும், மழைமேகமும் கலைந்ததான வானத்தின் வெளிப்பை படுத்துக் கிடக்கும் அவன் முகமும் உருவகப்படுத்தின.

''மகள் அப்படியே போய் போட்டிருக்கிற உடுப்புகளைக் கழுவிப் போட்டு குளிச்சிற்றுக் கெதியா வா மகள், நானும் குளிக்க வேணும்.''

உடல் முழுவதையுமே கிருமிகளுக்கு குத்தகைக்கு விட்டிருக்கும் அம்மா நீட்டிய 'டெட்ரோல்' சோப் எதையோ நினைத்துச் சிரிப்பதாய்ப்பட்டது எனக்கு. கிணற்றடிக்குச் செல்லும் போது வழியில் இருக்கும் வேப்பமர ஊஞ்சலைப் பார்த்தேன். நீண்ட நாட்களாகவே தன்னை ஏறெடுத்துப் பார்க்காத மனிதர்களைப் பற்றி தென்றலிடம் முறையிடுவதாய் மெலிதாய் ஆடிக் கொண்டிருந்தது.

அவன் வந்து போன நாட்களிலெல்லாம் இது முறையிட்ட விதமே முரணானது. பின் தன்னை வெறுக்க வைக்க என்னை அவன் வெறுப்பதாய் நடித்துச் சென்ற நாடகத்தைப் புரியாமல் நான் உடைந்து விழுந்த போது என்னையும் என் சோகத்தையம் சுமந்ததும் இந்த ஊஞ்சல் தான்.

''சுபா யாருமே இல்லாத வனாந்தரத்தில நீயும் நானும் மட்டுமே இப்பிடி ஒரு ஊஞ்சல் கட்டி ஜென்ம ஜென்மமாய் ஆடவேணும் சுபா''.

குளிக்கும் போது தட்டுவேலியின் மேலாகவும் குனிந்து உடுப்புக் கழுவும் போது இடுக்குகளினூடாகவும் ஊஞ்சல் தெரியும் போதெல்லாம் அவனும் என் விம்பமும் அங்கே ஆடிக் கொண்டிருப்பதாய்த் தோன்றியது.

சாப்பிடும் போதும் அம்மா இடை விடாது திரும்பத் திரும்ப தொடர்பில்லாமல் நிறையவே சொல்லிக் கொண்டிருந்தாள். கணவன் இறந்து போன ஒரு வருடத்திற்குள்ளாகவே மறுமணம் செய்து கொண்ட பக்கத்து வீட்டுப் பரிமளம் இப்போது சந்தோஷமாய் வாழ்வதைச் சொன்னாள். காதல் முறிந்த பின்னும் எத்தனையோ பேர் கல்யாணம் செய்வதாகச் சொன்னாள். எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் புரிந்தது.

அவனுடனேயே என் வாழ்க்கையும் முடிய வேண்டியதில்லை என்பதை எடுத்துச் சொல்ல தேவையில்லாமலே பரிமளத்தின் கதை ஒருதரம் புரட்டப்பட்டிருக்கிறது. பரிமளம் மறுமணம் செய்த சில காலம் வரைக்கும் அம்மாவும், இந்த அண்டை அயலில் உள்ள சில பெண்களும் பரிமளத்தை வரவேற்ற விதத்தை அம்மா எப்போது மறந்து போனாள்?

உணவைப் பாதியில் முடித்து விட்டு படுக்கையறையை நோக்கிச் செல்கையில், இரவைப்பற்றிய பயம் கௌவிக் கொண்டது. அம்மாவின் புகை வண்டிக் குறட்டைச் சத்தத்திலும் அயர்ந்து தூங்கும் என் தூக்கத்தின் தன்மை சில நாட்களாகவே காணாமல் போனது. இப்போதெல்லாம் வலைக்கு அப்பால் ஆற்றாமையில் கிணுகிணுக்கும் நுளம்புச் சத்தத்திலும் கூட

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் விழித்துக் கொள்வது இயல்பாய்ப் போனது. முன்பும் ஒருமுறை இப்பிடித்தான், இன்ப அவஸ்தைகளால் என் இரவுகள் பறிக்கப் பட்டன.

அது என் காதல் அரும்பத் தொடங்கிய காலம். கனவுகளின் முதுகில் நானும், அவனும் வானத்தில் வலம் வரும் காலம் ஆனந்தங்களை அள்ளி எடுக்க இரவின் வரவிற்காக காத்திருந்த காலம். சாமக் கோழியையும், காக்கை குருவிகளையும் சபித்துக் கொண்டே துயிலெழும் காலம், தனிமையிலும் ஒரு பைத்தியம் போல் சிரித்துக் கொள்ளும் வண்ணம் என்னை சந்தோஷத்தில் திணித்து விட்ட, திணித்துக் கொண்டிருக்கும் அவனின் வருகையைப் பற்றிய எண்ணம் தான் கலைந்து போன என் கனவுகள் பற்றிய கவலையையும் மேவி நிற்கும்.

* * *

மறுநாள் நான் அவனின் அறையை அடைந்த போது விழித்திருந்தான். நீண்ட இடைவெளியின் பின் என்னைக் காணும் அதிர்ச்சி கண்களால் வெளிப்படுத்தப்பட்டது. சிரமப்பட்டுக் கொண்டே எழும்ப முனைந்தவன், சிரமங்களே தோற்றுப்போன சலிப்பில் மீண்டும் படுத்தான்.

முகச் சுழிப்புகளால் வலிமையும் காருண்யப் பார்வையில் வேதனைகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்த அவனும், அவனின் வேதனைகளை உள்வாங்கிய நானும் மௌனத்தை உடைக்க வார்த்தைகள் தேடுகையில் நேரம் தான் சத்தமில்லாமல் நடந்து போனது.

''இதுக்காகவா என்னிட்ட நடிச்ச நீங்க, இதுக்காகவா நம் காதல் விருட்சத்தின் வேர்களை அறுக்கிற கோடரியாய் உருக்காட்டின நீங்க, இன்பத்தில பங்கு தந்து துன்பத்தத் தனியாய் நீங்களே அனுபவிக்கிறது சுகமெண்டு நினைச்சீங்களா....'' இப்படி நிறையவே அவனிடம் கொட்டி விடுவதற்காக என் குரல்வளை மடை திறக்கத் துடித்தது.

என் எந்தவொரு வார்த்தையும் அவனுக்கு வேதனையாகி விடுமோ என்ற பயத்தில் மௌனம் காத்து நின்றேன்.

'சுபா''

சப்தஸ்வரங்களாய், இனிய ராகமாய் நாதமாய் அவன் அழைக்கும் அழைப்புகள் மறைந்து, ஈனஸ்வரத்தில் வெறும் சத்தமாய் என் காதில் விழுந்தது. நான் அருகில் சென்றேன். விம்மிக் கொண்டிருக்கும் இதயம் வெடித்து விடாமல் பார்க்க மிகவும் கஷ்டப்பட்டேன். நான் அழக் கூடாது, அழுகை அவனுக்குப் பிடிக்காத ஒன்று.

'அத்தான்''

''அப்பிடிக் கூப்பிடாத சுபா. நீ வாழ வேணும் சந்தோஷமாய் சிரிச்சபடியே வாழ வேணும்''

''உங்களை விட்டா? இவ்வளவுதானா என்னை நீங்கள் புரிஞ்சு கொண்டது''

''இல்ல சுபா, நீ இருக்கும் வரை உன்னில நான் வாழ்ந்து கொண்டிருப்பன். உன் சந்தோஷங்கள்ள சந்தோஷித்துக் கொண்டிருப்பன். ப்ளீஸ், இனிமேல் இங்கே வராத சுபா, நீ ஆரையாவது கல்....''

அவன் சொல்லி முடிக்குமுன், அவனின் வாயைப் பொத்தினேன்.

''அத்தான் உங்கள விட்டு, எப்பிடி, எப்பிடியத் தான் நான்...''

''ஏலும், உனக்கு ஏலும் சுபா. மாத்தும், காலம் உன்ன மாத்தும், பழைமைக்குத் திரும்ப ஏலும், உனக்கு ஏலும், காலம் மாத்தும், ஏலும், உனக்கு ஏலும், மாத்தும், காலம் மாத்தும்'' திரும்பத் திரும்ப சொன்னவைகளையே சொன்னபடி மயங்கிப் போனான்.

முன்தினம் போலவே அந்திவரை அவனுக்குக் காவலாய், ஜடத்தோடு ஜடமாய் நானும் இருந்து விட்டு மருந்துப் போத்தல்களிடம் விடை பெற்றுக் கொண்டு பிரிந்து சென்றேன். அவன் என்னுடன் பேசியவை தான் கடைசி வார்த்தைகள் என்பதைச் சொல்ல விடியலில் ஹொஸ்பிட்டல் பியோன் என் வாசலில் நின்றான்.

நான் மரமாய் அவனை வெறித்தபடியிருக்க, அவனையும் என்னையும் மாறி மாறிப் பார்த்து எதையோ தமக்குள் சிலாகித்துக் கொண்டிருந்த சனங்களுக்கு மத்தியில் அவன் 'சவம்' என்ற பெயரைச் சூடிக் கொண்டு படுத்திருந்தான். ஊதுவர்த்தியின் நறுமணமும், அவனைப் போர்த்தியிருக்கும் மலர் வளையங்களின் சுகந்தங்களும் யாராலும் பாராட்டுப்பெறாமல் கதவை அடைத்திருக்கும் பெண்கள் கூட்டத்தினூடு வெளியேறிக் கொண்டிருந்தன என் கனவுகளைப்போல.

சடங்குகள் எல்லாம் முற்றுப் பெற சுடுகாட்டை நோக்கி அவனின் இறுதி யாத்திரை தொடங்கியது. பந்தல் காலைப் பிடித்தபடியே நான் அசைவின்றிக் கிடந்தேன்.

பின்வந்த காலங்களில் அவனை நினைத்து நினைத்து தனிமையில் குமுறியது. பின் நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் விட்டு, அதன்பின் அவன் நினைவு வரும் போதெல்லாம் பெருமூச்சுவிட்டு இப்படியாய்... அவனைப்பற்றிய துக்கமும் மெதுவாய், பின் வேகமாய் அதன் பின் இன்னும் வேகமாய் கரைந்து போனது

சில காலங்களின் பின் எனக்குத் திருமணமும் நடந்தது. ஆரம்பத் தாம்பத்தியத்தின் போது முன்பைப் போல் அதிகமாய் அவன் நினைவுகள் என்னை ஆக்கிரமித்தன. குழந்தை பிறந்ததும், குழந்தை குழந்தைகளாய் மாறியதும், அவர்கள் பள்ளிக் கூடம் சென்றதுமாய், குடும்பப் பொறுப்புகளும் கூட, என்னில் இருந்து அவன் கொஞ்சம் கொஞ்சமாய் தூரப் போனான்.

பனிரெண்டு வருடங்கள் கடந்திருக்கும் ஓர் இரவு நான்காவது படிக்கும் என் மூத்த மகன் தன் புத்தகத்தை எடுத்து உரத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

''பதினெட்டாம் பாடம் 'எலிக்கு மரணம் பூனைக்கு விளையாட்டு' கண்ணம்மா ஒரு பூனையை வளர்த்து வந்தாள் அது...''

''கண்ணா, படிச்சது போதும், போய்த்தூங்கு, மிச்சத்த நாளைக்கு ஸ்கூல்ல படிக்கலாம்''

அவனைத் தடுத்து விட்டேன். அவன் சந்தோஷமாய்ச் சென்றான். மறுநாள் பாடசாலை முடிந்ததும் நேரிடையாக என்னிடமே வந்தான்.

''அம்மா, அம்மா, பாவமம்மா எலி. அந்தப் பூனை எலிய விட்டு விட்டுப் பிடிச்சு தாமம்மா''

''கண்ணா எலியில்லடா கண்ணா. பூனைதான் பாவம்''

''ஏனம்மா''

''நாளைக்கு நீ படிப்பேடா'',

அந்தப் பூனையை ஒரு நாய் கடிச்சிதெண்டு'' சொல்லிய போது குரல் உடைந்து அழுகை வெடித்தது. நான் அழுததையே பார்த்திராத கண்ணன் மலங்க, மலங்க அதிசயமாய்ப் பார்த்தான்.

''அம்மா, ஏனம்மா அழுகிறீங்கள், ஏனம்மா அழுகிறீங்கள்?''

கலங்கியபடியே கண்ணன் கேட்டுக் கொண்டேயிருந்தான். கொஞ்ச, நேரம் வரை நான் அழுது கொண்டேயிருந்தேன். எனக்குத் தெரியும் இந்த நனைதலும் கால வெப்பத்தில் காயுமென்று!

''ஏலும் உனக்கு ஏலும் சுபா, காலம் மாத்தும், உன்னைப்பழமைக்குத் திருப்பும், ஏலும் உனக்கு ஏலும், காலம் உன்னை மாத்தும், உனக்கு ஏலும், காலம் மாத்தும், ஏலும்'' அவன் திரும்பத் திரும்ப சொன்னவைகளை சொன்னபடியே மயங்கிப் போனான்.

நான் அவனை நினைத்து வியந்துகொண்டே அம்மாவைப் பார்த்துக் குறுகியதை நினைத்து இப்போது எனக்காகவே குறுகி நின்றேன்.

''நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்'' என்ற உண்மையின் நெஞ்சில் முகம் புதைத்து என்னைத் தேற்றிக் கொண்டேன். ஊஞ்சலை இழந்த வேப்பமரம் மட்டும் மெதுவாய் அழுது கொண்டிருந்தது ◆

**திருக்கோவில் கவியுவன்**

# உயில்

## அமரர் சபாலிங்கம் நினைவாக...

கண்ணி வெடிகள் புதைந்த நிலத்தில்
கனித்தோட்டங்கள் வளர்க்கப் போகிற
என்னரும் பேரரே...
என் பேரரின் பேரரே...
உங்களுக்காக
இல்லாது போன நேற்றும்
இன்னும் தோன்றாத நாளையும்
இன்றுமாயிருக்கிற வாழ்வின் பாடலை
கற்களில் பொறிப்பேன்

உங்களுக்காக
துப்பாக்கிகளில் மாட்டுப்பட்டு
எதிர் புதிர்ச் சுழற்சியில் கிழிந்துபடுகின்ற
ஈழத்துக் கவிதையை மீட்டுவந்து
வாழ்வின் படுகையில் ஓடவிடுவேன்.

நம் கால்களில் ஏறியது
இன ஒடுக்கல் போர் எனும் விசமுள்
முள்ளை எடுக்க முள் கைக்கொண்டோம்
முள் கைக்கொண்ட நம்தலையாரிகள்
முள் எடுத்தலை மறந்து
முள்வழிபாடும் முள் சமயமும் வளர்த்தனர்
புனித முள்ளினால்
தம் கண்களையே குத்திக் கொண்டனர்

தமிழருக்கினி ஒளியே எதிரி
விளக்கேற்றுபவனே துரோகி என்றாயிற்று
மின்மினிகளைக் கூட
தெருக்கம்பங்களில் அறைந்து கொன்றிட
முள் கோவில்களின் மடாதிபதிகள்
உத்தரவிட்டனர்
முள் கோவில்களிடை
யார் முள் உண்மைத் தெய்வமுள்ளென்று
முடிவிலாப் புனித யுத்தம் வெடித்தது...
இப்படியாக எதிரி வென்றான்.

இவ்வாறான இன்றில்
உங்களுக்காக நாங்கள் வாழ்ந்தோம்
வசந்தத்தைத் தேடிப் பூத்துக் கனிந்தோம்
வியர்வை மண் சிந்தி
பொன்விளைச்சலாக ரசவாதம் செய்தோம்
நீங்கள் இன்றைய எமது காதல்
நீங்கள் இன்றைய எமது கலவி
நீங்கள் இன்றைய எமது வியர்வை
நீங்கள் இன்றைய எமது வாழ்வு

இன்று நாம் பதித்த சுவடுகள் தானே
நாளைய உமது படுகையாய் நீள்வது
கனவும் கனிவும் அற்ற தலையாரிகள்
கண்களைப் பறித்த பின்னரும் கூட
எதிரியைத் தடுக்கும் காவல் அரணாய்
தம்மை நிறுத்திய
இன்றைய இளைஞரின் கனவே நீங்கள்
அந்த மாவீரரின் கனிகளே நீங்கள்

எது எம் நாடு
சுட்டெரித்த வெறும் மண் பாலையா
மக்களா சொல்க...?.

பறவைகள் விலங்குகள்
பாம்புகள் மீன்கள்
கரைகள் காடுகள் கழிகள் தூய காற்று
செடி கொடி தாவரம் நாங்கள் என்று
கோர்க்கப்பட்டு
வடக்குக் கிழக்காய் நீள்கிற யாவும்
நம் தாய் நாடு.
கோவில்கள் அடுத்த பள்ளிவாசல்கள்
சிலுவைகள் நிமிரும் தேவாலயங்களும்
வடக்குக் கிழக்கு மண்ணில் இருக்கிற
விகாரையும் சேர்ந்ததே என்தாய் நாடு.
அம்பாறை வாழும் சிங்களக் குடிமகன்
ஈழமே எனது தாய் மண் என்று
நெஞ்சை நிமிர்த்தும் திருநாளன்றோ
என்தாய் மண்ணின் விடுதலைத் திருநாள்.

நாளை நீங்கள்
தியாகிகளுடைய சமாதிகளிலே
அஞ்சலி செய்கையில்
நம் நந்த வனத்தில்
தென்றல் முகமூடி அணிந்த புயல்கள்
தின்று தீர்த்த ஒளிவிளக்குகளையும்
நினைவு கூருங்கள்.

யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
மக்பூலுக்கு நெருப்பு வைத்தது.
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
வணசிங்காவைக் கொழுத்திப் போட்டது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
பிதா சந்திரா பெர்ணான்டோவை சாம்பராக்கியது.
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
கந்தசாமியயைக் கருக்கிப் போட்டது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகங்களான
சபாலிங்கத்தை பரிஸில் அழித்தது.
செல்வியை பிடித்து நீறாக்கியது.
யார் ஜயாவோடு சில்வா தோழரை
வன்னியின் பிடித்து ரயரில் எரித்தது
பதவிப் போட்டியில் தம்தோழரைக் கொல்ல
யாழ்ப்பாணத்து வைத்தியசாலையை
கசாப்புக் கடையாய் மாற்றியவர் யார்.
தாங்களும் தீவிர போராளிகளே
என நிரூபிக்க
விஸ்வமடுவிலோர் ஏழையைப் பிடித்து
உளவாளியெனக் கொன்றெரித்தவர் யார்?
முள் பூசாரிகள்
குருட்டு முள் பூசாரிகள்

உங்களுக்காக இன்னுமோர் விளக்கை
ஏற்றியே அணைந்த விளக்குகள் இவர்கள்
உங்களுக்காக பிஞ்சினை வளர்த்தே
உதிர்ந்த மலர்கள் இவர்கள்.

இன்றைய தீர்ப்புகள் இப்படியாயிற்று
நாளையிந்த பேராற்றுப் படுகையில்
புதுவெள்ளமாகப் புரண்டிடவுள்ள
என்னரும் பேரரே
நாளை உங்கள் உங்கள் தீர்ப்பெதுவாகும்?
முகத்தில் கரியைப் பூசி
சாக்கடைகளிலே வீசப்பட்ட
பொற்சிலைகளுக்கு
நாளை உங்கள் தீர்ப்பு எதுவாயிருக்கும்?
காக்கா பொன் சூடி
பீடங்களிலே ஏறிக்குந்திய
சாணிச் சிலைகளுக்கு
உங்களின் தீர்ப்பு எதுவாயிருக்கும்.

என்னரும் பேரரே உங்கள் நாட்களில்
முட்கோவில்களின் அத்திவாரத்தையும்
பெயர்த்துப் போடுங்கள்.
என்னரும் பேரரே உங்கள் நாட்களில்
பூக்களாகவும்
வண்ணத்துப் பூச்சிகளாகவும்
பறவைகளுடைய சங்கீதமாகவும்
உங்கள் உங்கள் கனவுகளாகவும்
நாங்களும் வாழுவோம்.

10-06-1994

**வஐச ஜெயபாலன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்த் தேசியவாதமும் தலைமையும்: — நாவலரிலிருந்து பிரபாகரன் வரை...

## சில அவதானக் குறிப்புகள்

ஓகஸ்ட் 16ம் திகதி நடைபெற்ற தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் பொது ஜன முன்னணியும் கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளன. விடுதலை இயக்கங்களில் சேர்ந்து பயிற்சி எடுத்த முன்னாள் வீரர்கள் சிலர் கூட இந்தத் தேர்தலில் பொது ஜன முன்னணிக்கு சார்பாக பிரச்சாரங்களில் ஈடுபட்டதோடு வாக்களித்தும் உள்ளார்கள். தமிழ்ப் புத்திஜீவிகள் பலரும் கூட பொது ஜன முன்னணிக்கு சார்பாக தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டிருந்தார்கள். கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள் இது விடயத்தில் முன்னணியில் திகழ்ந்திருந்தார்கள்.


ஜனாதிபதி தேர்தலில் பேரினவாதக்கட்சிகளில் ஒன்றிற்கு வாக்களிப்பதோ பிரச்சாரம் செய்வதோ சில வேளைகளில் நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கலாம். ஆனால் தேசியவாதத்தின் வலிமையைக் காட்டக் கூடிய பாராளுமன்றத் தேர்தலில் இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதானது எமது தேசியவாதத்தின் தன்மையையும் தமிழ்த் தலைமையின் தவறுகளையும் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

தமிழ் மக்களிடையே வளர்க்கப்பட்ட தேசியவாதம் முழுத் தமிழ்த் தேசத்தையும் இணைக்கக் கூடிய வகையில் வளர்ச்சியடைந்துள்ளதா? இல்லையாயின் தேசியவாதத்தின் தவறுகள் என்ன? இத்தவறுகளுக்கு தமிழ்த் தலைமைகள் எவ்வாறு காரணிகளாயிருந்தன. தலைமைகளின் எவ்வியல்புகள் இவற்றை ஊக்குவித்திருந்தன என்பதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டியதேவை தமிழ்த்தேசிய இனத்தின் பூரண விடுதலையை வேண்டிநிற்கின்ற முன்னோடிகளுக்கு இன்று அவசியமாகவுள்ளது.

### தமிழ்த் தேசிய வாதத்தின் ஆரம்பம்

பொதுவாக தேசியவாதங்களின் எழுச்சி மத அடிப்படைகளிலிருந்து உருவாகுவது போல தமிழ்த் தேசியவாதத்தின் உருவாக்கமும் மத அடிப்படையிலிருந்தே இலங்கையில் தோற்றம் பெற்றது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மத ஒடுக்குமுறைகளுக்கெதிராகவே இத்தேசியவாதம் எழுச்சியுறத் தொடங்கியது. இதனை முன்னெடுத்தவர் ஆறுமுக நாவலரேயாவார். இவர் கிறிஸ்தவ மதத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மதமும் மொழியும் கலந்த சைவத் தமிழ்த் தேசிய வாதத்தை முன்னெடுத்தார். இது விடயத்தில் சைவமும் தமிழுமே மக்களை ஐக்கியப்படுத்துவதற்கான இணைப்புக் கண்ணி என்பதை நாவலர் கண்டிருந்தார். சைவத் தமிழ்த் தேசியவாதத்தை வளர்ப்பதற்கும் மக்களை ஐக்கியப்படுத்துவதற்கும் உரை நடை இலக்கியத்தை அறிமுகப்படுத்தியிருந்தார். அச்சு இயந்திர சாலையையும் திண்ணைப் பாடசாலைகளையும் உருவாக்கினார். சைவப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் அதனை ஊக்குவித்தார்.

நாவலரின் தேசியவாதம் சைவத் தமிழ்த் தேசியவாதமாக உருவானமையானது ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களை தமிழ்த் தேசியவாதத்திலிருந்து புறம் தள்ளியது. இதனால் தமிழ் பேசும் கத்தோலிக்கர்களையோ, கிறிஸ்தவர்களையோ தமிழ் பேசும் முஸ்லீம்களையோ இணைக்கக்கூடிய வகையில் தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம் அமைந்திருக்கவில்லை.



இதைவிட சைவத் தமிழ்ப் பாரம்பரியம் ஒரு போதும் மக்களின் ஜனநாயகத்தை அங்கீகரிப்பதில்லை. அதன் அடித்தளம் ஜனநாயக விரோத செயற்பாடுகளினாலேயே கட்டப்பட்டிருந்தது. ஆயுத பலத்தின் மூலம் தன்னை நிலைநிறுத்துவதையே அது அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆயுதம் ஏந்தாத கடவுள்கள் சைவமதத்தில் இல்லாமை, ஏனைய மதங்கள் தொடர்பாக சகிப்புத் தன்மையின்மை என்பன சைவப் பாரம்பரியத்தின் இயல்புகளை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. எனவே தேசியவாதத்தினுள் சைவப் பாரம்பரியமும் சேர்க்கப்பட்டமையானது பிற்காலத்தில் தேசவிடுதலை இயக்கங்களுக்குள் ஜனநாயக விரோத தன்மைகளையும் வளர்த்து விட்டிருந்தது.

மேலும் சைவப் பாரம்பரியத்தின் இன்னோர் பண்பு சாதிப்பிரிவினையை அங்கீகரித்தலாகும். அதன் வழி ஒடுக்கப்பட்ட சாதியினரை மேலும் ஒடுக்கி உயர் சாதியினரிடம் அதிகாரங்களை வழங்கும் ஒரு செயன்முறைக்கு சைவப் பாரம்பரியம் வித்திடுகின்றது. தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாக தமிழ்த்தேசியவாதம் எழுச்சியடைந்த யாழ் குடாநாட்டில் வேளாளர்கள் உயர்சாதியினராக இருக்கின்றமையினால் வேளாள ஆதிக்கப் பண்புகளும் தமிழ்த் தேசியவாதத்தில் இணைந்து கொண்டன. சாதி ஒடுக்குமுறையை அங்கீகரித்து நிலை நிறுத்துபவராக ஆறுமுகநாவலர் விளங்கியமையால் அவரால் வளர்க்கப்பட்ட தேசியவாதத்தில் வேளாள இயல்புகள் தானாகவே நுழைந்து கொண்டன. ஆறுமுகநாவலர் தான எழுதிய நூல்களில் சாதி ஒடுக்குமுறையை நியாயப்படுத்தியமையும் அவரால் உருவாக்கப்பட்ட திண்ணைப் பாடசாலைகளில் சாதியால் ஒடுக்கப்பட்ட ஒரு மாணவனுக்காவது அனுமதி கிடைக்காமையும் தமிழ்த் தேசியவாதத்தின் வேளாளத் தன்மையை அப்பட்டமாக வெளிக்காட்டின.

எனவே வேளாள பண்புகளும் தேசியவாதத்தில் இணைந்து கொண்டமை தேசியவாதத்தினை சைவத் தமிழ் வேளாளா தேசியவாதமாக மாற்றியது. இதனால் தேசியவாதத்தில் யாழ் குடாநாட்டு வேளாளர்களின் நலன்களே முதன்மைப்படுத்தப்பட்டன. அவர்களின் ஆதிக்கமே மேலோங்கியது. இந்நிலை தமிழ்த் தேசிய்வாதம் உருவெடுத்த குடாநாட்டிலேயே ஏறத்தாழ 30 வீதமாக வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்களை தமிழ்த் தேசியவாதத்திலிருந்து அந்நியப்படுத்தியது. பிற்காலத்தில் மிக நீண்டகாலமாக அவர்கள் தேசியவிடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றாதிருந்த நிலைக்கு தேசியவாதத்தின் ஆரம்பமே காரணமாயிருந்தது.





நாவலரினால் முன்வைக்கப்பட்ட தேசியவாதத்தின் இன்னோர் இயல்பு யாழ்ப்பாண சமூகத்திற்கேயுரிய யாழ்ப்பாணிய பண்புகளையும் அது கொண்டிருந்தமையாகும். தன்னுடைய நலன்களை மட்டும் முதன்மைப்படுத்துகின்றமை, ஏனைய பிரதேசத்துவ மக்களை மதிக்காமை, ஏனைய பிரதேச மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களையும் சுரண்டுகின்றமை, என்கின்ற பண்புகள் யாழ்ப்பாணிய சமூகத்தில் நிலவுகின்ற யாழ்ப்பாணியப் பண்புகளாகும். மட்டக்களப்பிலும் வன்னியிலும் உருவாக்கப்பட்ட யாழ் அகறும் சங்கங்கள் யாழ்ப்பாணிய பண்புகளின் கொடுமைகளுக்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.


தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம் இவ் யாழ்ப்பாணிய பண்புகளையும் உள்வாங்கியமை குடாநாடு தவிர்ந்த ஏனைய தமிழ்ப் பிரதேசங்களை தமிழ்த் தேசியவாதத்திற்குள் இணைப்பதற்கு தடையாக இருந்தது. அத்தோடு தமிழ்ப் பிரதேசங்களை ஒரு தேசமாக ஒன்றிணைப்பதற்கும் தேசம் தழுவிய வகையில் ஒரு தேசியவாதத்தை முன்னெடுப்பதற்கும் கூட பெருந் தடையாக அமைந்தது. இது பிற்காலத்தில் தேசியவாத இயக்கங்களுக்குள் யாழ்ப்பாண ஆதிக்கம் அதிகரித்திருந்த நிலைமையையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரே தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவராக வரலாம் என்ற நிலைமைகளையும் தோற்றுவித்திருந்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் நசுக்கப்படும் போது போராட்டம் உக்கிரமடையும் நிலையும், ஏனைய பிரதேசத்தவர்கள் நசுக்கப்படுகின்ற பொழுது பாராமுகமாக இருக்கின்ற நிலையும் கூட பிற்காலங்களில் தானாகவே உருவானது. குடியேற்றம் என்பது ஒடுக்குமுறையாகத் தெரிந்த பின்னரும் கூட ஆரம்ப தேசியவாத அமைப்புகள் அதில் பெரிதளவு அக்கறை காட்டாது அறிக்கைகள் விடுவதோடு தமது பணிகளை நிறுத்திக் கொள்கின்ற நிலைமைகளுக்கும் இவ் யாழ்ப்பாணிய நலன்களே காரணமாக இருந்தன.

எனவே முழுமையாகப் பார்ப்போமானால் நாவலரினால் உருவாக்கப்பட்ட தேசியவாதம் முழுத் தமிழ் மக்களையும் இணைக்கின்ற தேசியவாதமாக அமையவில்லை. யாழ் குடாநாட்டு சைவ வேளாளரின் நலன்களை மட்டும் பேணுகின்ற யாழ் வேளாள சைவத் தமிழ்த் தேசியவாதமாகவே அமைந்திருந்தது. இது விடயத்தில் தமிழ் நாட்டில் பெரியாரினால் முன்வைக்கப்பட்ட முழு மக்களையும் இணைக்கின்ற திராவிடத் தேசியவாதம் போல நமது தேசியவாதம் விளங்காமை மிகவும் துரதிர்ஷ்டவசமானது ஆகும். →

www.tamilarangam.net

## பரந்தாமன்

இன்றும் கூட தமிழ்த்தேசிய வாதம் மேற்கூறிய பண்புகளையே கொண்டுள்ளது. காலத்துக்குக்காலம் தேவைக்கு ஏற்ப பண்புகளில் இறுக்கத் தன்மை குறைந்து நெகிழ்வுத் தன்மைகள் தோற்றம் பெற்றிருந்தாலும் அதன் அடிப்படைப் பண்புகளில் மாறாத நிலையே காணப்படுகின்றது. தமிழ்த் தேசிய வாதத்தை அரசியலில் முன்னெடுத்த அருணாசலம் தொடக்கம் இன்று முன்னெடுக்கும் பிரபாகரன் வரை இந்நிலையே தொடர்கின்றது. தலைமைகளைப் பொறுத்தவரையிலும் கூட இப்பண்புகளை ஏற்றுக்கொண்டவர்களே தலைமையில் நீடிக்கக் கூடியவர்களாகவும் புதிய தலைமையை பொறுப்பேற்க் கூடியவர்களாகவும் உள்ளனர்.



### அருணாசலத்திலிருந்து பிரபாகரன் வரை

தமிழ்த் தேசியவாதம் ஆறுமுகநாவலரினால் முன்னெடுக்கப்பட்டாலும் அதனை அரசியலில் முன்னெடுத்தவர் அருணாசலமேயாவார். 1921இல் அவரால் உருவாக்கப்பட்ட தமிழர் மகாஜன சபையின் தோற்றத்துடன் தமிழ்த் தேசியவாதத்தின் அரசியல் ரீதியிலான வளர்ச்சி ஆரம்பமாகியது. அருணாசலத்தை தொடர்ந்து தமிழ்த் தேசியவாதத்தின் தலைமை தமிழ்க் காங்கிரஸ் தலைவரான ஜீ.ஜீ. பொன்னம்பலத்திடமும் சென்றது. யாழ்ப்பாண, சைவ, வேளாள பண்புகளின் உச்ச வடிவமாக தமிழர் அரசியல் வரலாற்றில் ஜீ.ஜீயே விளங்கியிருந்தார். 1960களில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கோரிக்கைகள் எழுந்த போது தமிழரசுக் கட்சியினர் திருமலையில் பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டும். அது தமிழ்ப் பல்கலைக்கழகமாக அமைய வேண்டும் என கோரிக்கை விடுக்க ஜீ.ஜீ.பொன்னம்பலம் பல்கலைக்கழகத்தினை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும் அதுவும் சைவப் பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார். ஈற்றில் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைவதற்கும் அதன் சின்னத்தில் சைவ அடையாளங்கள் பொறிக்கப்பபடுவதற்கும் யாழ், வேளாள, சைவப் பண்புகளே காரணங்களாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் உருவாவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழரசுக் கட்சிகூட பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட போது மௌனமாக இருந்தமைக்கும் யாழ்ப்பாணிய பண்புகளே செல்வாக்கு செலுத்தியிருந்தன.

ஜீ.ஜீயின் வர்க்கத்தன்மையும், கொழும்பு சார்நலன்களும் அரசியல் தளத்தை யாழ்ப்பாணத்திற்கு மாற்றமுடியாத நிலையை உருவாக்கியது. தேர்தல்காலங்களில் மட்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்து போகின்ற தலைமையாகவே அவரது தலைமை விளங்கியது. அதைவிட வெறும் மந்திரிப் பதவிக்காக தமிழ்த் தேசியவாதத்தையே விலை பேசுகின்ற மனிதராகவும் அவர் காணப்பட்டார். தமிழ் தேசியவாதத்திற்காக தனது நலன்களை இழக்க எந்தச் சந்தர்ப்பதிலும் அவர் தயாராக இருக்கவில்லை. இந்நிலையில் தமிழ்த் தேசியவாதம் தனது இருப்புக்கு அதன் அடிப்படைப் பண்புகளை மாற்றாத நிலையில் விசுவாசமாக உழைக்கக் கூடிய ஒரு தலைமையைத் தேடியது. செல்வநாயகமும் தமிழரசுக் கட்சியும் 1949இல் அதற்கு முன் வந்த போது அது ஏற்றுக் கொண்டது. இது விடயத்தில் செல்வநாயகம் கிறிஸ்தவர் என்பது பற்றி அது அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக தமிழ்த் தேசியவாதத்தின் வேளாள, சைவத் தமிழ்ப்பண்புகளுக்கு அதிகளவு இடையூறு இல்லாத நிலையில் தமிழ்த் தேசிய வாதத்தை அவர் முன்னெடுப்பாரா? என்று மட்டும் பார்த்துக் கொண்டது. சாதிப் போராட்டங்களில் தமிழரசுக் கட்சி பின்னின்ற நிலைமைகளும், தலைமைத்துவத்தை யாழ்ப்பாணத் தலைவர்களிடம் மட்டும் தக்க வைத்துக் கொண்ட தன்மைகளும் இதனையே காட்டுகின்றன. செல்வநாயகம் இறந்த போது கூட அவர் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை சைவமுறைப்படி தகனம் செய்யப்பட்டமை இது விடயத்தில் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

எனினும் தமிழரசுக் கட்சிக் காலத்தில் தமிழர்களுக்கெதிரான ஒடுக்குமுறை வலுவடைந்த போது யாழ் குடாநாட்டுக்குள் மட்டும் இருந்து கொண்டு தமிழ்த் தேசியவாதத்தினால் பிழைத்துக் கொள்ளமுடியவில்லை. இந்நிலையில் அதன் கால்களை அகல வைத்து தமிழ்த் தேசம் முழுவதையும் இணைக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. அவ்வாறு அகல வைக்க வேண்டுமாயின் வேளாள, சைவப் பண்புகளில் ஒரு நெகிழ்வுத் தன்மையை பின்பற்ற வேண்டிய தேவையும் ஏற்பட்டது. எனவே இவை தங்களின் நலன்களுக்கும் மேலாதிக்கத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நெகிழ்வுத் தன்மைக்கு இடமளித்தன. இது விடயத்தில் யாழ் வேளாள, சைவப் பண்புகள் தலைமையை கயிற்றில் கட்டி கயிறை கொஞ்சம் தொய்யவிட்டிருந்தது எனக் கூறலாம். ஆனால் கயிற்றை அவை தம்கையிலேயே வைத்திருந்தன. இந்நெகிழ்வுத் தன்மையினால் தமிழரசுக்கட்சி குடாநாட்டுக்கு வெளியே வன்னியிலும், கிழக்கிலும் தன் காலை அகல வைத்தது. குடாநாட்டுக்குள் ஒடுக்கப்பட்ட சாதியினர் மத்தியிலும் ஓரளவு ஊடுருவியிருந்தது. எனினும் வேளாள, சைவப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் வன்னி மக்களையும் கிழக்கு மக்களையும் முழுமையாக தமிழ்த் தேசியவாதத்திற்குள் இணைக்க அதனால் முடியவில்லை. இருப்பினும் பேரினவாதம் எனும் கொடிய பேய்க்கு முகம் கொடுத்து குடியேற்ற அச்சுறுத்தல்களுக்கு இலக்காக வேண்டி இருந்தமையினால் மனதுக்குள் திருப்தி





யில்லாத போதும் பெரும்பான்மையான கிழக்கு, வன்னி மக்கள் தமிழரசுக் கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டனர்.

தமிழரசுக்கட்சியின் தலைமையைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வந்தது. தலைவர் பதவியும் தமிழர்களில் முதலாம்தர வகுப்பைச் சேர்ந்த செல்வநாயகத்திடமிருந்து இரண்டாம் தர வகுப்பைச் சேர்ந்த அமிர்தலிங்கத்தின் கைக்கு மாறியது. தேசிய இன ஒடுக்கு முறை முன்னரைவிட கொடூரமாக வளர்ந்தது. இக்கொடிய ஒடுக்குமுறைக்கு முகம் கொடுப்பதற்காக தமிழ்த் தேசியவாதம் தனது யாழ், சைவ, வேளாளப் பண்புகளில் மேலும் நெகிழ்வுப் போக்கை காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது. வெளிப் பார்வையில் அப்பண்புகள் தெரியாத வகையிலான தோற்றத்தை எடுக்க முயற்சித்தது. சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை தானாக முன்னெடுக்கா விட்டாலும், ஏனையவர்கள் எடுக்கின்ற போராட்டங்களில் கூட்டணி கலந்து கொண்டது. 1979களில் அறவழிப் போராட்டக் குழு நடாத்திய போராட்டங்களில் கூட்டணித் தலைவர்கள் பங்கு கொண்டனர். கதிரவேற்பிள்ளையும், காசி ஆனந்தனும் சலூன்களில் முடி வெட்டினர். சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வி.என். நவரத்தினம் சாவகச்சேரி பஸ் நிலையத்தினூடாக மலவாளி வண்டியைத் தள்ளிச் சென்றார். இச்செயற்பாட்டின் உச்சநிலையாக உயர் சாதியினரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட உடுப்பிட்டி தொகுதியிலிருந்து ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த இராசலிங்கம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

வன்னி, கிழக்கு மக்களின் பிரச்சினைகளும் அரசியல் அரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியால் உரத்துப் பேசப்பட்டது. வவுனியாவின் சில பகுதிகளை அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்க முயற்சித்த போது அதற்கு எதிராக பலத்த குரல் எழுப்பி தடுக்கப்பட்டது.

எனினும் இவ்வாறான நெகிழ்வுப் போக்குக் காணப்பட்ட போதும், யாழ் சைவ, வேளாள, பண்புகளின் அடிப்படை நலன்கள் கவனமாக பாதுகாக்கப்பட்டன. அவற்றிற்கு பங்கம் ஏற்படாத வகையிலேயே நெகிழ்வுத் தன்மை பேணப்பட்டது.

தொடர்ந்து வந்த காலங்களில் தமிழ்த்தேசிய இன ஒடுக்குமுறை தமிழ்த் தேசிய இன அழிப்பு முறையாக மாறியது. இவ் அழிப்பு நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக தமிழர் விடுதலைக் கூட்டணி இருக்கவில்லை. விளைவு தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விடுதலை இயக்கங்களின் கைகளுக்கு மாறியது. விடுதலை இயக்கங்களிலும் யாழ் வேளாள, சைவப் பண்புகளை முழுமையாக ஏற்றுக் கொண்ட இயக்கமாக புலிகள் விளங்கினர். இதனால் ஏனைய இயக்கங்களை விட புலிகளின் ஆதிக்கமே ஓங்கியிருந்தது. ஏனையவற்றில் புளொட், ஏனைய பிரதேசத்து மக்களின் நலன்களையும் ஈ.பி.ஆர்.எல்.எப். சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களையும் உயர்த்திப் பிடித்தது. இதனால் தலைமைத்துவத்திலிருந்து இவர்கள் புறம் தள்ளப்பட்டனர். ஈற்றில் புலிகளால் அவர்கள் அழிக்கப்படுவதற்கு அவர்களின் பல்வேறு பலவீனங்கள் துணையாக இருந்த போதும், யாழ் சைவ, வேளாளப் பண்புகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமையே புலிகளுக்கு அழிப்பினை இலகுவாக்கியிருந்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் கரையார் சமூகத்தை சேர்ந்தவராக இருந்த போதும் யாழ் வேளாள, சைவப் பண்புகளுக்கு இடையூறு இல்லாதவகையில் அவர் இருப்பார் என்பதனாலேயே தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். எனினும் தேசிய இன ஒடுக்குமுறை மோசமாக இருந்தமையினால் யாழ் வேளாள சைவப் பண்புகளில் நெகிழ்வுத் தன்மை இன்று அதிகமாகியுள்ளது. இப்பண்புகளை முற்றாக நீக்க புலிகள் முற்படுவார்களாயின் போராட்டத்தை சமரசத்துக்கு கொண்டு வந்து தமது ஆதிக்கத்தை பாதுகாக்கக்கூட அவை முற்படலாம்.

எனவே இறுதியாக தமிழ்த் தேசியவாதம் உருவாகிய காலங்களிலிருந்து இன்றுவரை தமிழ்த் தேசிய வாதம் யாழ் வேளாள சைவத் தமிழ்த்தேசிய வாதமாகவே உள்ளது என்பது தெளிவாகின்றது. காலத்துக்கு காலம் தேவைக்கு ஏற்ப யாழ் வேளாள சைவப் பண்புகளில் சில நெகிழ்வுகள் ஏற்பட்டாலும் இன்றும் அடிப்படையாக அதுவே உள்ளது. இதனாலேயே முழுத் தமிழ்த் தேசத்தையும் இணைக்கின்ற ஒரு தேசிய வாதமாக தமிழ்த் தேசியவாதத்தினால் எழுச்சியடைய முடியவில்லை. ஏனைய பிரதேசத்து மக்களும் சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களும் பூரணமாக இணையாமைக்கும் இதுவே காரணமாக உள்ளது. வன்னி, கிழக்கு மக்களில் ஒரு பிரிவினர் கடந்த தேர்தலில் பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.

எனவே என்று தமிழ்த் தேசியவாதத்திலிருந்து யாழ் வேளாள, சைவப் பண்புகள் நீக்கப்படுகின்றதோ அன்றைக்கே அத்தேசிய வாதம் முழுமக்களையும் இணைக்கின்ற தேசியவாதமாக வளர்ச்சியடையமுடியும். தேசம் தழுவிய வகையில் எழுச்சியடையவும் முடியும். அத்தோடு தேச விடுதலைப் போராட்டம் நோக்கி முழுமக்களையும் அணிதிரட்டவும் முடியும்.

தமிழ்த்தேசிய இனத்தின் முன்னோடிகள் இவ்விடயங்களை கட்டாயம் கவனத்தில் எடுத்தல் வேண்டும் அவ்வாறு எடுக்காத வரை தமிழ்த் தேசம் ஒரு போதும் விடுதலை அடையப் போவதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ப்ரஸம்

# இனப்பிரச்சினையும் தொடர்பு சாதனங்களும்

நிஷாந்த



சமூக விஞ்ஞானத்தின் ஒரு பகுதியே தொடர்பு சாதன ஊடகங்கள் ஆகும். இதனால் சமூக விஞ்ஞானத்திலுள்ள மற்றப்பகுதிகளுடனும், தொடர்பு சாதன ஊடகங்கள் தொடர்புபட்டுள்ளன.

தொடர்பு சாதன ஊடகங்கள் பரந்த தன்மையைக் கொண்டவை. இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு தொடர்பு சாதனங்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியாமையினால் இங்கு தொடர்பு சாதனங்களின் தரம் வீழ்ச்சி கண்டிக்கிறது. இதன் தரம் குன்றிய தன்மையை அண்மைக்காலங்களாகப் பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருந்தது. அது இன்னமும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. எதிர்கட்சித் தலைவர் காமினி திசநாயக்கவின் படுகொலையை பத்திரிகைகள் வெளியிட்ட விதத்திலும், அதற்கான தரவுகளை கொடுத்த விதத்திலும் ஆகும்.

காமினி திசநாயக்க படுகொலை செய்யப்பட்ட பின்பு, பல வதந்திகள் சமூகத்தில் பரவின. இவற்றில் நான்கு வதந்திகள் பிரதானமாக உலாவின. அவையாவன;

- இந்தப் படுகொலையை, புலிகளின் தற்கொலைப்படைப் பிரிவின் இருவரே செய்தனர்.
- ஐ.தே.கவிலுள்ள / ஐ.தே.கவுக்கு வெளியிலுள்ள ஐ.தே.க. ஆதரவாளர்களினால் காமினி எதிர்ப்பாளர்கள் இப்படுகொலையை செய்திருக்கலாம்.
- பொ.ஐ.மு. இப்படுகொலையை செய்திருக்கலாம்.
- இந்திய உளவுப்படையினர் (றோ) அல்லது வெளிநாட்டு உளவுப்படையினர் செய்திருக்கலாம்.

இப்படியான பொய் வதந்திகளால் தான் பொதுமக்களுக்கு செய்திகள் கிடைத்தன. இந்த வதந்திகளை உறுதி செய்வதற்கான செய்திகளை பத்திரிகைகளில் எதிர்பார்த்தனர். பொதுமக்கள் வதந்தி மூலமாகவும், பத்திரிகைச் செய்தி மூலமாகவும் இப் படுகொலையை புலிகள் செய்ததாகவே அதிகளவு வெளிப்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் இப்படியான படுகொலை செயல்களை புலிகள் தான் செய்து வந்தனர் என்பதுதான் இதற்கு காரணமாயிற்று.

ஆனால் ஒரு பிரச்சினை உள்ளது. எல்லா விசாரணைகளும் முடியும் முன்பு தொடர்பு சாதனங்கள் புலிகள் தான் செய்தனர் என எப்படிக் கூறினர்? பத்திரிகையாளர்களும் இவ்வாறான கட்டுக்கதைகளை நம்பியதாலேயே இப்படிக் கூறினரோ? ஆனால் பத்திரிகைத்துறை என்பதோ அதன் தகவல்கள் என்பனவோ வதந்திகளுக்கு வழி திறந்து விடுவதல்ல.

இவர்களுக்கு உண்மையை அறிய இரண்டு மார்க்கங்கள் இருந்தன.
1. நடக்கும் விசாரணை மூலம் கிடைக்கும் அறிக்கைகளில் இருந்து எழுதுவது.
2. பத்திரிகை, செய்தி நிறுவனங்கள் சுயாதீனக் குழுக்களை அமைத்து விசாரணை மூலம் தரவுகளைப் பெறுவது.

விஜயகுமாரணதுங்க, லலித், பிரேமதாஸ, டென்சில் ஆகிய பிரபல்யமானவர்கள் படுகொலைகளில் முதலாவது வகையைச் சேர்ந்த செய்தி அறிக்கைகள் வெளிவரவில்லை. ஆனாலும், இரண்டாவது வகையில் இலங்கையில் செய்தி நிறுவனங்கள் செயற்பட முடியாது என நான் நினைக்கிறேன். ஏனெனில் அப்படிச் செய்வதானால் நீதிமன்ற சட்டங்கள் தொடர்பாகவும் வைத்திய பரிசோதனை தொடர்பாகவும் தொடர்பு சாதன ஊடகத்தாருக்கு அதிகபட்ச அறிவு இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இலங்கையின் பத்திரிகைத்துறையில இவ்வாறான புலமை பெற்றவர்கள் இல்லை என்பது எனது அபிப்பிராயம். சாதாரணமாக செய்தி சேகரிப்பவர்கள் மட்டுமே உள்ளார்கள். அதனால் தொடர்பு சாதனங்களில் செய்திக் குவியல்களே உள்ளன. Investigation Journalism இல்லை. இதனால் தான் மீண்டும் செய்தியாளர்கள், புலிகள் செய்ததாகவே கூறுகின்றனர்.

நல்லது, இதைச் செய்தது புலிகள் தான் என எண்ணுவோம். அப்படியானால் இந்த தொடர்பு சாதனங்கள் சொல்வது போல், புலிகளுடனான சமாதானப் பேச்சை நிறுத்த வேண்டும். அவ்வாறு சமாதானப் பேச்சு நிறுத்தப்படுமானால் இப்படியான படுகொலைகள் நிறுத்தப்படுமா? நான் அப்படி நினைக்கவில்லை. சமாதானப் பேச்சு நடந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன, யாரையாவது கொல்ல வேண்டுமென தீர்மானித்து விட்டார்களானால், கொன்றே தீருவார்கள்.

இத் தொடர்பு சாதனங்களிலுள்ள சிலர், புலிகளுடனான பேச்சுவார்த்தையை நிறுத்தி, தமிழர்களுக்கான உரிமை கொடுப்பதற்கு தமிழ் மக்களுடன் பேசுங்கள் என கூறுகிறீர்கள். யார் இந்த தமிழ் மக்கள்? ஒன்று, தமிழ் அரசியல் தலைவர்களாக அல்லது பிரஜைகள் குழுவாக அல்லது தமிழ்த் தீவிரவாதிகளாக இருக்க வேண்டும். மக்களுடன் கதைப்பது என்பது சாதாரண மக்களுடன் கதைப்பதல்ல. மக்கள் தலைமைகளுடன் கதைப்பதேயாகும். புலிகளை யார் நம்பினாலும், நம்பாமல் விட்டாலும், இன்றைய யதார்த்தத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக புலிகளையே அங்கீகரிக்க வேண்டி வரும். இதனால், இனப்பிரச்சினைக்கு ஏதாவது தீர்வை முன் வைக்கும் போது புலிகளின் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது. இதன் அர்த்தமானது, புலிகள் தான் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என்பதல்ல. ஆனால் திரும்பவும் கூற வேண்டியுள்ளது; யதார்த்த பூர்வமாக புலிகளே பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் என்பதைத்தான்.

இவ்வாறு தொடர்பு சாதனங்களானது, கட்டுக்கதைகள் வதந்திகளை நம்பி தமது செய்திகளை வெளியிடுவதாவது இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும்.

முதலாளித்து சமூகத்தில் தொடர்பு சாதனங்கள் பொறுப்பில்லாமல் நடப்பது தொடர்பாக லெனின் இவ்வாறு கூறியுள்ளார்.

**''இந்த முதலாளித்துவ சமூகத்தில், வேலை செய்பவர்கள் சம்பளம் கொடுப்பவர்களுக்கு அடிமைகளாக வேலை செய்து தான் பழக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் இந் நபர்களினால் சமூகத்திற்கு நடுநிலையாக சேவை செய்ய முடியாது.''**

## மீண்டும் மேற்கிளம்பும்.....

துச் செல்வதால், பொ.ஐ.மு.தடுமாறிக் கொண்டிருக்கிறது. இந்தத் தடுமாற்றம் உண்மையில் நியாயமானது தானா என்பது பற்றி அது யோசிப்பதாகவும் தெரியவில்லை.

புதிய பொ.ஐ.மு. அராசங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜனநாயகவாதிகளோவென்றால், எல்லாமே அஸ்தமித்து விட்டது போல இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்கள். புலிகளிடமிருந்து இது போன்ற ஒரு நடவடிக்கை ஒருபோதும் நடக்காது என்று சத்தியம் வாங்கிக் கொண்டு சமாதானப் பேச்சுக்கு இறங்கியவர்கள் போல காணப்படுகின்றனர். 'பேச்சுவார்த்தை சரிவராது' என்ற ஒரு கசப்பான உணர்வை நம்பமுடியாத திகிலுடன் அவர்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இதில் ஓரளவுக்காவது தேறியவர் சந்திரிகாதான்.
அவரால்தான் காமினியின் கொலையை, இலங்கையின் கடந்த 17ஆண்டு காலத்தின் பல்வேறு கொலைகளின் தொடர்ச்சியாக காணமுடிந்தது. காமினியின் கொலை சகிக்க முடியாத, கண்டிக்கப்பட வேண்டிய கொலையே என்ற உண்மையுடன் கூடவே அது கடந்த காலத்தின் பல நூறு கொலைகளின் தொடர்ச்சியும் கூட என்ற உண்மையையும் மறந்துவிடக் கூடாது என்பது அவருக்குத்தான் முதலில் தெரிந்தது.

ஆனால், இந்தக் கொலை ஒரு அதிர்ச்சி வைத்தியம் போல மக்களுக்கு பொ.ஐ.மு. பற்றிய ஒரு தெளிவை -குறிப்பாக சிறுபான்மை இனமக்களுக்கு ஏற்படுத்தி விட்டது.

அதுதான், அது குறிப்பிடும் அமைதி, சமாதானம், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணல் என்ற விடயங்கள் எல்லாவற்றையும் நல்ல விருப்பங்களாக கொண்ட ஒரு உறுதியற்ற மனோநிலை கொண்ட அரசு என்பது. அது எந்த நேரமும் தடுமாறிப் போகலாம், எந்த நிமிடமும் தான் செய்து கொண்டிருப்பதையிட்டே சந்தேகம் கொண்டு திகைத்துப் போய் நின்று விடலாம்.

சுருக்கமாக சொன்னால், அதற்கு திட்டவட்டமான குறிக்கோள்கள் இல்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டங்களும் தெளிவாக இல்லை.
நல்லவற்றை செய்யப் போவதாக அறிவிக்கும் ஆர்வத்தை மட்டும் அது கொண்டிருக்கிறது.
அப்படி இல்லை என்றால், அது இவற்றையெல்லாம் அறிவிப்பதும் பேசுவதும் அரசை கைப்பற்றும் தந்திரமாக இருக்க வேண்டும்!
கடந்த 17 வருட காலமாக ஐ.தே.க. அமைச்சரவையில் இருந்த தொண்டமானுக்கு ஊழலை ஒழிக்கப்போவதாக கூறும் அரசு அமைச்சர் பதவி வழங்கியிருப்பது இந்தச் சந்தேகத்தை மேலும் வலுவூட்டுகிறது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக யாரை வேண்டுமானாலும் இணைத்துக் கொள்ளலாம் என முடிவு கட்டுவது அதன் முகமூடியை அகற்றி உண்மைச் சொரூபத்தை காட்டியுள்ளதாக கொள்ளப்படவும் முடியும்! அதுமட்டுமல்ல புலிகளுடனான பேச்சு முயற்சி கூட அங்குள்ள இலட்சக்கணக்கான வாக்குகளுக்காகச் செய்யப்படும் ஒரு முயற்சியே என்று கருதுவதும் கூட நியாயமாகிவிடும். எப்படியோ இது இரண்டும் இல்லை என்றால், பொ.ஐ.மு. புலிகளுடனான பேச்சில் மட்டும் தங்கியிருக்க வேண்டியதில்லை. இனப்பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். புலிகளை திருப்திப்படுத்துவதற்கு முயல்வதை விட, நாட்டின் பிளவுக்கான காரணிகளை அகற்றும் நடைமுறையில் இறங்க வேண்டும்.

அப்படி செயற்படும் போது புலிகளோ, அல்லது யாரோ இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் நாட்டின் இனப்பிரச்சினையை தீர்க்க முயலும் பொ.ஐ.மு. முயற்சி தடைப்படாது. மாறாக பலம் பெறும்.
மறுபுறத்தில் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் தாமாகவே அம்பலமாகிப் போவர்.
பொ.ஐ.மு. தான் அரசில் இருக்க வேண்டுமானால் இப்போது தீர்மானிக்க வேண்டியது இதைத்தான்.
ஒன்றில், தனது ஜனநாயக சமாதான விருப்பங்களை தூக்கி எறிந்து விட்டு, அவை வெறும் வேஷங்களே என வீசி விட்டு, திட்டவட்டமான ஐ.தே.க.வழியையும் இனவாதத்தையும் கடைப்பிடிப்பது.
அல்லது, இவற்றை உறுதியாக நடைமுறைப்படுத்த தனது திட்டங்களை, எவரது அபிப்பிராயங்களையும் பற்றி அக்கறைப்படாமல் அறிவிப்பது; அவற்றை நடைமுறைப்படுத்த முயல்வது!
இது இரண்டுமற்ற இன்றைய இரண்டுங்கெட்டான் நிலை பொ.ஐ.முவின் அரசின் ஆயுளை அற்பாயுளாக்கி விடும் என்பது வெளிப்படை.
இதைப் புரிந்து கொள்ளாவிட்டால்... நடக்கப் போவது இதுதான்:
நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறுமாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தா னொருதோண்டி -
அதை
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்
தாண்டி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் மாவட்டம்
# புனித அந்தோனியார் அகதி முகாம்கள்
# நசிவுறுகிற வாழ்க்கை

யாழ் மாவட்டத்தில் இன்று நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்தோர் வசிக்கின்ற முகாம்கள் இருக்கின்றன. இந்த அனைத்து முகாம்களுமே அடிப்படை வசதிகளற்ற முகாம்கள் ஆகும். யாழ்மாவட்டத்தில் தற்போது மழை ஆரம்பமாகியுள்ளது. இதனால் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கின்ற மக்கள் இரவு நேரங்களில் உறங்குவதற்கு பொது இடங்களையும் பாடசாலைகளையும் நாட வேண்டி நிலைமை ஏற்பட்டுள்ளது.



யாழ்.மாவட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வுவுனியா, கிளிநொச்சி ஆகிய வெளி மாவட்டங்களில் இருந்தும் காரைநகர், தெல்லிப்பழை, காங்கேசன்துறை, தீவுப்பகுதி, மாதகல், கீரிமலை, இளவாலை, சேந்தான்குளம் ஆகிய இடங்களிலிருந்தும் இராணுவ நடவடிக்கைகளினால் சகல உடமைகளையும் இழந்து உடுத்த உடுப்புகளுடன் வந்தவர்களே இன்று முகாம்களில் அடைபட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாபிரிவில் மட்டும் 45 இடம்பெயர்ந்தோர் முகாம்கள் இருக்கின்றன. அண்மையில் மானிப்பாயில் அமைந்துள்ள புனித அந்தோனியார் முகாம் ஒன்று (1} முகாம் இரண்டு (2) முகாம் மூன்று(3) ஆகிய மூன்று முகாம்களுக்கும் நேரடியாகச் சென்ற போது முகாம்களில் மக்கள் படும் வேதனையை காணக்கூடியதாக இருந்தது.



புனித அந்தோனியார் எனப் பெயரிடப்பட்ட இந்த மூன்று முகாம்களிலும் இளவாலை, மாதகல், சேந்தான்குளம், சில்லாலை, பண்டத்தரிப்பு, ஊறணி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 186 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 848பேர் வசிக்கின்றனர். இந்தக் குடும்பங்களின் தலைவர்கள் அனைவரும் அன்றாடம் தொழில் செய்து பிழைக்கின்றவர்களே. இவர்களின் முக்கியமான தொழில் மீன்படி. இந்த 186 குடும்பங்களும் 145 கொட்டில்களில் அடைபட்டுள்ளனர்

ஒரு கொட்டிலில் ஒரு குடும்பமே வாழமுடியாத நிலையில் சில கொட்டில்களில் இரண்டு குடும்பங்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த மூன்று முகாம்களிலும் பதினொரு நிரந்தர மலசல கூடங்களும், 12 தற்காலிக மலசல கூடங்களும், 4 கிணறுகளும், ஒரு குழாய் கிணறும் இருக்கின்றன. இந்த 3 முகாம்களிலும் காலை நேரங்களில் நீண்ட கியூ வரிசையில் நின்றே மக்கள் தமது காலைக் கடனை நிறைவேற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்கள் குளிப்பதற்கு வயலிலுள்ள கிணறுகளையே நாட வேண்டியுள்ளது.

இந்த 3 முகாம்களிலும் சுகாதார அதிகாரியின் சுகாதாரப் பரிசோதனை மாதத்திற்கு 2 தடவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி இந்த முகாம்களில் மழைநீர் தேங்கி நிற்பதனாலும், மலசல கூடங்கள், கிணறுகள் துப்பரவாக்கப்படாமல் திருப்திகரமற்ற முறையில் இருப்பதனாலும் மலேரியா நோய் பரவக் கூடிய சாத்தியம் பெருமளவு இருப்பதாக எச்சரிக்கை செய்துள்ளார். மலேரியா நோய் மட்டுமன்றி பல தொற்று நோய்கள் கூட தொற்றுவதற்கு சந்தர்ப்பம் உள்ளன.

இந்த முகாம்களிலுள்ள மக்கள் போஷாக்கற்றவர்களாகவே காட்சியளிக்கின்றனர். சுமார் 105 குழந்தைகளும் இந்த மூன்று முகாம்களிலும் உள்ளனர். இவர்கள் மிகுந்த மெலிவான தோற்றத்துடனேயே காணக்கூடியதாக உள்ளது. அரசினரால் வழங்கப்படும் இலவச நிவாரணத்திலேயே இவர்கள் முழுக்க முழுக்க தங்கியுள்ளனர்.

வடபகுதியில் இன்று பெரும் மழை ஆரம்பமாகியுள்ளது. ஆனால் இந்தக் கொட்டில்கள் பெரும் மழைக்கு தாக்குப்பிடிக்கக்கூடியதாக அமைக்கப்படவில்லை. கடந்த வருடம் இந்த முகாம்கள் யாவும் வெள்ளத்துள் அமிழ்ந்தன. மக்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் அடைந்தனர். இந்த வருடமும் இந்நிலையே தோன்றும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து முகாம்களுமே இப்படித்தான் காட்சியளிக்கின்றன. இந்நிலையில் இந்த இடம்பெயர்ந்த மக்கள் இவ்வாறு இன்னும் எத்தனை காலம் தான் வாழமுடியும்.

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து முகாம்களையும் அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் திருத்தி அமைப்பதற்கு முன்வரவேண்டியது அவசியமாகும். அதேவேளை யுத்தத்தை நிறுத்துவதும் இம்மக்களை அவர்களது சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேற்றுவதுமே இம்மக்களது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாகும்.

தீர்வுக்கு வழி திறக்குமா?





**படங்களும், கட்டுரையும்: அன்பு**

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்